உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 11 வெள்ளிக்கிழமை (25.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 211

# நீதிபதிகளைக் குற்றவாளிகள் போன்று இடமாற்றம் செய்வது உகந்ததல்ல



## முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் சாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

துணிச்சலாகவும் உண்மையாகவும் செயற்படும் நீதிபதிகளை குற்றம் புரிந்தவர்கள் போன்று இடமாற்றம் செய்வது நீதித்துறைக்கு உகந்ததல்ல.

சமூகச் சீரழிவு நடவடிக்கைகளைத் துணிச்சலுடன் கண்டிக்க விழையும் அல்லது தட்டிக்கேட்கும் நீதிபதிகள் திடீரென இடமாற்றம் செய்யப்படுவது அதிர்ச்சியளிக்கிறது.

குடாநாட்டைச் சீரழிவில் இருந்து மீட்பதற்கு சட்டத்தரணிகள், நீதிபதிகள் ஆகியோர் ஒன்றிணைந்த, ஒருமித்த, ஒற்றுமைமிக்க துணிச்சலான பங்களிப்பு முக்கியமானதாகும். நீங்கள் எல்லோரும் துணிந்து நின்று சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டி நடைமுறைப்படுத்துவதன் மூலமே இப்பேர்ப்பட்ட வெளியார் தாக்குதல்களை சமாளிக்கலாம்.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். (21ஆம் பக்கம் பார்க்க)

## மதுபானம், சிகரட் விலைகளும் உயர்வு

கொழும்பு, ஜூன் 25

மதுபான வகைகள் மற்றும் சிகரட் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, சிகரட் ஒன்றின் விலை ஒரு

(24ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்களுக்கு விருது

கொழும்பு, ஜூன் 25

தகவல் ஊடகத்துறை அமைச்சு சிறந்த செய்தியாளர்களுக்கு விருது வழங்கும் விழா ஒன்றை அடுத்த ஆண்டு நடத்தவுள்ளதாகத் தகவல் ஊடகத்துறை அமைச்சர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையின் அடுத்த கூட்டம் கிளிநொச்சியில் நடைபெறுமென அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

அடுத்த அமைச்சரவைக் கூட்டமும், அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடும் கிளிநொச்சியில் நடைபெறும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் அமைச்சரவைக் கூட்டங்கள் வாராவாரம் ஒவ்வொரு மாவட்டத்தில் இடம்பெறும்.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள கிளிநொச்சி செல்லும் அமைச்சர்கள் தமது அமைச்சு சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதுடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வுகாண நடவடிக்கைகளை மேற்கொள்வர். - என அமைச்சர் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## பொசன் பண்டிகையை நாடு முழுவதிலும் ஐக்கியத்தோடு கொண்டாடுவது மகிழ்வுக்குரியது

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25

பொசன் பௌர்ணமி தினம் புத்த பெருமானின் தம்ம போதனையை அரஹத் மஹிந்ததேரர் கொண்டு வந்ததை எமக்கு ஞாபகமூட்டுகின்றது என்ற வகையில் இது இலங்கை எங்கும் வாழும் பௌத்த சமூகத் துக்கு மிகவும் புனிதமான பண்டிகை யாகும். இந்த வரலாற்று முக்கியத்தும் மிக்க பண்டிகையின் இரண்டாயிரத்து முன் னூற்றிப் பதினெட்டாவது பண்டிகையை முழு தேசமும் ஐக்கியத்தோடு கொண்டாடக் கிடைத்தமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டையில் கைக்குண்டு வெடிப்பு! ஐந்து படையினர் உட்பட 9 பேர் காயம்!!

கொழும்பு, ஜூன் 25

கொழும்பு, புறக்கோட்டை, போதிராஜ மாவத்தையில் நேற்று விடிகாலை 5.10 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 9பேர் காயமடைந்தனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த படையினர் ஐவர், பெண் ஒருவர் உட்பட 9 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் தாக்குதலா அல்லது விபத்தா என்பது தொடர்பான விசாரணைகளை

(24ஆம் பக்கம் பார்க்க)

## நயினை அம்மன் ஜொலிக்கும் சப்பறத்தில் நேற்றிரவு பக்தர்களுக்கு அருள்காட்சி

நயினையிலிருந்து உதயன் செய்தியாளர்

நயினாதீவு, ஜூன் 25

நயினையில் நேற்றிரவு வரை கூடிய 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களின் 'அரோகரா' கோஷங்கள் ஓங்கி ஒலிக்க வண்ண, வண்ண மின்விளக்குகள் ஜொலிக்க அழகிய சப்பறத்தில் அம்பாள் வீதி வலம் வந்து அருள்காட்சி அளித்தார்.

நேற்று நண்பகலில் இருந்து குறிகாட்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. நிபுணர்குழு இலங்கை வர அனுமதி இல்லை; இலங்கை விவகாரத்தில் தலையிடுவதே அதன் நோக்கம்



## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 25

ஐ.நா. செயலாளர் நாயகத்தால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு இலங்கை வருவதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாட்டை ஐ.நா. நிபுணர் குழு குழப்பிவிடும் என்றும் அது தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை நிலைமை தொடர்பாக சர்வதேச யுத்தக்குற்ற நீதிமன்றில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆரம்பத்தில் கூறியிருந்தார்.

அதைத் தொடர்ந்து இப்போது நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு நியமிப்புக்கு நாம் ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம்.

நானும், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனைச் சந்தித்து எமது எதிர்ப்பைத் தெரிவித்தோம். இலங்கை வந்திருந்த லியன் பாஸ்கோவிடமும் நாம் எமது எதிர்ப்பைத் தெரிவித்தோம். (24ஆம் பக்கம் பார்க்க)

STUDY & WORK IN UK

AUG. & SEPT. 2010 INTAKE

யாழ் மண்ணில் CBC

UK Highly Trusted - "A - Rated" Government & Private Collegeகளில் உயர்கல்வியை தொடரும் சந்தர்ப்பம் உங்கள் காலடிக்கு கொண்டுவருகிறது Colombo Business College.

Walk in Interview....for banff and buchan college

13 வருடங்களுக்கு மேல் தலைநகர் கொழும்பில் இயங்கி வரும் CBC முதன் முறையாக யாழ் மாணவர் நலன் கருதி அரச மற்றும் தனியார் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் College போன்றவற்றிற்கான மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முக தெரிவினை நடாத்துகிறது. தலைநகரில்...

Approved By Foreign Colleges & Universities

COLOMBO BUSINESS COLLEGE

379-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06

Tel: 0114-518580, 011-2362052 FAX:0114-519130

E-mail: colbuco@yahoo.co.in Web site: cbceducation.com

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

Minimum Qualification - G.C.E ( O/L)

FINANCIAL SPONSORSHIP

ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்பதற்கு SPONSORSHIP பிரச்சினையா ? உடன் தொடர்புகொள்ளுங்கள்: 0714 550055

SAVE TIME ! & SAVE MONEY !

யாழ்ப்பாணத்தில்.. Knowledge Universe, No: 75, Temple Road, Jaffna என்ற இடத்தில் இம்மாதம் 26, 27ம் திகதிகளில் August & Sept. 2010 Intakeக்குக்கான நேர்முகப்பரீட்சை இடம்பெறும்

Member of UCAS (One & Only Private College in Sri Lanka)



STUDY + WORK OFFER

200க்கும் அதிகமான பாடநெறிகள் உங்கள் விருப்பம்போல் பாடநெறிகளை தெரிவுசெய்யலாம். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க விரும்புவோர் 0714938848 / 0714550055 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு SMS செய்து அல்லது Call செய்து உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிவாச்சாரியார் தேவை

டென்மார்க் நாட்டிலே கேர்ணிங் என்னும் நகரிலே அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு ஒரு சிவாச்சாரியார் தேவையாக வுள்ளது. தங்குமிடவசதி உட்பட அனைத்தும் செய்து தரப்படும். சம்பளம் போன்ற விவரங்கள் விண்ணப்பத்தின்போது பேசித் தீர்த்துக் கொள்ளப்படும். முறையாகக் குருகுலத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கும். ஏற்கனவே உற்சவங்கள் நிகழ்த்திய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: 24:06.2010 இல் இருந்து 24.07.2010 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
Hindu Cultural Research & Information Center
Post-box-317
7400 Heming, Denmark
மின்னஞ்சல்: pillayar@hotmail.com
தொலைபேசி இல: 0045 97701498 அல்லது 0045 28639304

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா இராசமணி



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இராசையா இராசமணி 22.06.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் இராசையாவின் அன்பு மனைவியும் அமரர் சுப்பிரமணியம், மங்கையர்க்கரசி, அமரர் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, அமரர் ரவீந்திரன், சண்முகரத்தினம் (நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), குலமணி, மோகனதாஸ் (ஜேர்மனி), சிவநேசன் (லண்டன்), குணரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீகாந்தா (கணக்காய்வு உத்தியோகத்தர், இ.போ.ச.), சிவகரன் (ஜேர்மனி), ஜெயலக்சுமி, சாந்தி (ஜேர்மனி), குமுதா (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சன் (A.C.L.G. Offi-ce, Jaffna), சுதாகரன் (ஆசிரியர், கிளிநொச்சி முருகானந்தா ம.வி.), வசிகரன் (சிங்கப்பூர்), அமிர்தரஜனி (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), சுஜீவன் (கனடா), பிருந்தா, பிரவீனா, செந்தூரன் (நல்லூர் ப.நோ. கூ.சங்கம்), சேந்தன், ஜெயந்தன், ஜேர்மனியில் வசிக்கும் கரிஷன், மதுஷன், அபினா, லண்டனில் வசிக்கும் ஜெனிஷா, பிரதீஸ், அபர்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிலாஸின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
புதிய வீதி, கொக்குவில் மேற்கு. (99867)

## கௌரவிப்பு நிகழ்வு

கோப்பாய், ஜூன் 25

புன்னாலைக்கட்டுவன், ஆயாக் கடவை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழாக் காலங்களில் தொடர் சொற்பொழிவாற்றிய சைவப்புலவர் நித்திய தசிதரனைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை ஆலய தேர்த்திருவிழா நிகழ்வின் போது இடம்பெறும். (ஒ-72)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் சங்க உறுப்பினர்களுக்கு நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)


## சந்திரகாந்தன் திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு டாக்டர், எஞ்சினியர் உட்பட அனைத்து மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு.
தொடர்பு: சந்திரகாந்தன் திருமண சேவை.
அரச பதிவு ஸ்தாபனம்.
T.P:0775081756, 0215680063 — S.ஆனந்தி இயக்குநர்.
தொல்புரம் மத்தி., சுழிபுரம்.


## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிய என்னுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள கந்தசாமி கோபாலச்சந்திரன் என்னும் பெயருடன் டேவிட் என்ற பெயரை இணைக்க விரும்புகிறேன். இனிமேல் என்னுடைய பெயர் கந்தசாமி கோபாலச்சந்திரன் டேவிட் என்பதாகும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(99847) கந்தசாமி கோபாலச்சந்திரன் டேவிட்.


## வாடகைக்கு வீடு தேவை

அரச உயர் அதிகாரியின் சிறிய குடும்பத்துக்கு யாழ்.நகர், நல்லூர் பகுதியில் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை.
Tel: 0773548347, 0774219714

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் - கச்சேரியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் கச்சேரி ஒழுங்கையில் அமைந்துள்ள இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776785085, 0214900733, 0779532110
(சி-568668)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி உதயேஸ்வரி நாகலிங்கம்



சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயேஸ்வரி நாகலிங்கம் நேற்று (24.06.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் K.நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராமநாதன் - மாரிமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும், உதயசங்கரன், உதயகுமாரி ஆகியோரின் சகோதரியும், ராஜேஸ்வரன், ரமேஸ்வரன், ராதிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரபாகரன், சிவநந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் சரண்யா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்,
0213217824 (99907)

### நடராசா தர்மதேவன்



காரைநகர், சத்திரந்தை, களபூமியைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தர்மதேவன் (உரிமையாளர், A.S.நடராசா அன் சன்ஸ்) 23.06.2010 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.K. நடராசா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் உமாதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசபூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும் டினூஜன், லக்சிகா, டிசாந்தன், தனுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜினிதேவி, விவேகானந்தன், சாரதாதேவி, சிவதேவி, சாந்தினிதேவி, லோகேஸ்வரி; இந்திராதேவி, இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாகரன், ஏகாம்பரம், கனகலிங்கம், கணேசன், சிவகுமாரன், முருகானந்தன், பாலகாந்தன், சண்முகநாதன், தருமராசா, செல்வராசா, புஸ்பராணி, காலஞ்சென்ற சற்குணராசா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கம்பளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தாய், மனைவி, பிள்ளைகள்.
3/1, கில் ஸ்ரீற், கம்பளை. (சி-568666)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் நல்லம்மா



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஊரதீவு, 07ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சுப்பிரமணியம் (22.06.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தாமாசிப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தில்லைவனம் தம்பதியினரின் மருமகளும் சுப்பிரமணியம் (கண்ணையா - போஸ்மாஸ்டர்) அவர்களின் அன்பு மனைவியும் கேதீஸ்வரன் (நோர்வே), லதா (லண்டன்), சந்திரலதா (சுவிஸ்), தனம் (கனடா), சதீஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், ஆனந்தராசா (லண்டன்), குணரத்தினம் (சுவிஸ்), மேனகா (நோர்வே), கோணேஸ்வரி (கனடா), பவானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சுபராஜ் (லண்டன்), விமல்ராஜ் (லண்டன்), ஜக்ஷன் (லண்டன்), யபிந்தன் (லண்டன்), ஜக் செவின் (சுவிஸ்), மைதிலி (சுவிஸ்), பிரசாத் (சுவிஸ்), வேந்தன் (நோர்வே), கஸ்தூரி (நோர்வே), மயூரி (கனடா), மதுஷா (கனடா), லக்ஷி (லண்டன்), ரபீனா (லண்டன்), மரினா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.சுப்பிரமணியம்
(கண்ணையா - போஸ்ட்மாஸ்டர், ஓய்வுபெற்ற ஊரதீவு தபாலதிபர்).
31/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
0776209960
(99906)

## யா/ இணுவில் மத்திய கல்லூரி
## வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்-2010

**தலைவர்:** திரு.அ. சதானந்தன் [கல்லூரி முதல்வர்]
**இடம்:** கல்லூரி சரஸ்வதி கலையரங்கம்
**காலம்:** 30.06.2010 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணி
**பிரதம விருந்தினர்:** உயர்திரு.வே.பிரேம்குமார் (பழைய மாணவர், பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடமாகாணம்)
**சிறப்பு விருந்தினர்:** உயர்திரு. எஸ்.பி.அரசகுமார் (சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்)
**கௌரவ விருந்தினர்கள்:** ★ உயர்திரு.ச. அரியராசா (பழைய மாணவர்) ★ தலைவர், லயன்ஸ் கழகம், இணுவில்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
இணுவில். (99802)

## A SERVICE OF THANKSGIVING



For
Late **MR.C.E.ANANDARAJAN,**
Principal Emeritus, St. John's College,
on his
25th Death Anniversary
on
Saturday 26th June 2010
at 7.00 a.m. at
ST. JOHN THE BAPTIST'S CHURCH, CHUNDIKULI.
All are invited.

Principal, Staff & Students
St.John's College.
(சி-568660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மக்களின் வயிற்றில் அடிக்கும் விலை உயர்வுகள் ஒன்றிரண்டாக...!

முதலில் பால்மா விலை, அடுத்து பாணின் விலை, அடுத்து எந்த அத்தியாவசிய உணவுப் பொருளின் விலை உயரப்போகிறதோ...?

முன்னர் ஒரு காலம், சிறிமாவோ அம்மையாரின் பதவிக் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் இரவிரவாக அரசாங்க வர்த்தமானி மூலம் உயர்த்தப்பட்டன. அந்த யுகம் இன்றுவரை இந்தச் சோஷ லிச நாட்டில் தொடர்ந்துகொண்டே வருகிறது.

தேர்தல் காலங்களில் சாதாரண, அடித்தட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கப்போவதாகவும் மற்றும் சொர்க்கத்தைக் கீழே இறக்கிக்கொண்டு வருவதுபோன்றும், தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினருக்கு பல நலன்களையும் அனுகூலங்களையும் செய்யப்போவதாகவும் வாக்குறுதி அளிப்பது 'சோஷலிச'த் தலைவர்களின் வழக்கம். ஆனால் அவர்களின் ஆட்சிக்காலங்களில் நடைமுறையில், நிஜத்தில் மக்களின் அன்றாட உணவுப்பொருள்களின் விலைகள் நள்ளிரவில் உயர்த்தப்படுவதே வழக்கமாகி விட்டது!

அந்த வரிசையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புதிய ஆட்சிக்காலமும் நள்ளிரவில் அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலைகளை உயர்த்தும் சகாப்தமாகவே துலங்கத் தொடங்கியுள்ளது.... அபாரம், அபாரம்!!

வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக 20 வீதம் ஒதுக்கப்பட்டிருப்பதான தகவல் வெளியான நாளன்றே, அடிமட்ட - ஏழை - மக்களின் வயிற்றில் அடிக்கும் விலை உயர்வுகளும், நடுத்தர மக்கள் மீதான வரிச்சுமைகளும் திடீர் திடீரெனச் சுமத்தப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான்!

சாதாரண மக்களின் உணவுசார் பொருள்களின் மீது சோஷலிச அரசு பதவிக்கு வந்த ஒரு இரண்டு காலத்தில் கைவைக்கத் தொடங்கிவிட்டது. கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் உயர்த்தப்பட்டிருக்கிறது. பாணின் விலை 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் எல்லாம் இலங்கை மக்களின் வழமையான உணவு அரிசிச் சோறாகத்தான் இருந்தது. ஆனால் அதற்குப் பின்னர் அந்த இடத்தை கோதுமை மாவும், பாணும் பிடித்துக்கொண்டு விட்டன. அதனால்தான் போலும், மஹிந்தரின் அரசும் அவற்றின் விலைகளை உயர்த்தி உள்ளது. அதிகூடுதல் வரிப்பணம் பெறுவதற்கு அவைதான் பொருத்தமானவை என்று அரசின் திட்டமிடலாளர்கள் கண்டுபிடித்திருக்கவேண் டும்!

வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஈடு செய்ய வரிகளும் விலை உயர்வுகளும் உடன் உதவக் கூடியவை என்ற எண்ணம் அவர்களுக்கு.

ஆனால் சாதாரண மக்களின் - கீழ்தட்டு - மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசாங்கம், ஆடம்பர வாழ்க்கை வகுப்பினருக்கு நலன் செய்கிறது.

ஆம். இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து வாகன இறக்குமதிக்கான வரி 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது! மேற்கூறப்பட்ட வரி 183 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாகக் கீழ்நோக்கிச் சென்றிருக்கிறது.

வாகனங்களின் இறக்குமதி நாட்டின் அபிவிருத்திக்குத் தேவை. அதனால் அவற்றின் வரி குறைக்கப்பட்டது என்று அரச தரப்பின் மெத்தப் படித்த அதிகாரிகள் இதற்குக் காரணம் காட்டலாம்.

வாகனங்களின் இறக்குமதி வரி குறைக்கப்பட்டதற்கு அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் மேற்கூறிய வகை சார்ந்தவையாகவே உள்ளன.

அதாவது இந்த வரிக்குறைப்பினால் நாட்டின் உள்நாட்டில் உல்லாசப் பிரயாணத்துறையை வளர்க்கலாம். அந்த வகையில் வாகன இறக்குமதித் துறையில் வெளிநாட்டு முதலீட்டுத் துறையினரைக் கவர்த்திழுக்கலாம். மொத்தத்தில் நாட்டின் வரியை உயர்த்தலாம் என்று அரசுத் தரப்பு கணக்குக் காட்ட முனைகிறது.

எவ்வாறு இருப்பினும், சொந்த மக்களின் - ஏழை மக்களின் - வயிற்றில் அடித்துக்கொண்டு, வெளிநாட்டு முதலீடுகளை வருவிப்பது என்பதும், உல்லாசப் பயணத் துறையை வளர்க்கலாம் என்பதும் முதலாளித்துவத்தின் அசல் வடிவம்!

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் அரிசி இறக்குமதித் தடை விதிக்கப்பட்டதால் - குறைப்பால் - அதன் விலை வானளவு உயர்ந்ததால் - ஒரு பிர தேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டதால் - பண வசதி இல்லாத சாதாரண மக்களும் தொழிலாளர்களும் பெரும் எண்ணிக்கையில் இறந்தார்கள். பல வீடுகளில் மரவள்ளிக் கிழங்கே மூன்று நேர உணவாக இருந்ததால் மக்கள் பெரும் எண்ணிக்கையில் மாண்டார்கள். அந்தக் காலத்தை சிங்கள மக்கள் பின்னர் ''ஹால் தட யுகய'' என்றும் ''மஞ்ஞொக்கா யுகய'' என்றும் நினைவு கூருவதும் உண்டு.

பிரதமர் ஸ்ரீமாவோவின் அரசாங்கமும் தான் சோஷலிசக் கொள்கையுடன் நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறிக்கொண்டு, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதாகப் பறைசாற்றிக்கொண்டு மக்களைப் பட்டினி போட்டது; சாகடிக்கவும் செய்தது.

சோஷலிசவாதியாக அரசியலில் - நாடாளுமன்றத்துக்குள் காலடி வைத்த மஹிந்தவின்(ஜனாதிபதி) ஆட்சி யிலும், அத்தகைய ஒரு சகாப்தம் உருவாகும் அபாயம் வருமோ என்று மக்கள் அஞ்சத் தொடங்கியுள்ளனர். நாட்டின் வளர்ச்சி எனக் கூறிக்கொண்டு ஆட்சியாளர்கள் தமக்கும், அவர்தம் ஊட்டச் சத்தாக விளங்கும் முதலாளித்துவத்துக்கும் நலன்தரும் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியிருப்பதே அந்த அச்சத்துக்குக் காரணமாகும்!

## புகைத்தல், போதை ஒழிப்பு தினத்தை ஒட்டி யாழ். செயலகத்தில் விசேட நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 25

உலக புகைத்தல் ஒழிப்பு தினமான கடந்தமாதம் 31ஆம் திகதியும், உலக போதை ஒழிப்பு தினமாக நாளை சனிக்கிழமையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், அவற்றை ஒட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷும், சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரத்தினமும், கௌரவ விருந்தினர்களாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவாவும், மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் ந.சோதிநாதனும் கலந்து கொள்வர்.

மேலும் இந்நிகழ்வில், புகையிலை, மது மற்றும் போதைப் பொருள் பாவனைகளினால் ஏற்படும் தீமைகளை வெளிக்காட்டும் குறுநாடகங்கள், பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதுடன் ஓவியங்கள் மற்றும் பதாதைகள் என்பனவும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் மேற்படி தினத்தையொட்டி இடம்பெற்ற பாடசாலை மட்ட சித்திரப் போட்டியில் பரிசில்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

மேற்படி போட்டியில் முதலாம் இடம் - யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயிலும் செல்வன் ஆனந்தராசா ரகுவரன் என்பவருக்கும், இரண்டாம் இடமும், மூன்றாம் இடமும் யா/மத்திய கல்லூரியில் 13, 9 ஆகிய தரங்களில் கல்வி பயிலும் செல்வன் வின்சன் ஜெயக்குமார் ஆமோஸ் அன்புக்குமார் மற்றும் செல்வன் ஜோன்சன் டக்ளஸ் பினேக்காஸ் ஆகிய மாணவர்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்மை குறிப்பிடத்தக்கது. (1)

## 2 ஆயிரத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் பொசன் வழிபாட்டில் பங்குபற்ற யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பொசன் நிகழ்வை முன்னிட்டு தென்னிலங்கையிலிருந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் நேற்று வாகன அணியாக யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

சுமார் 20இற்கும் மேற்பட்ட பஸ்களில் யாழ்ப்பாணம் வருகை தந்த இந்த யாத்திரிகர்கள் நாகவிகாரை மற்றும் நயினை நாகதீபம் ஆகிய இடங்களுக்குச் சென்று பொசன் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்த வாகன அணியுடன் அலங்கரிக்கப்பட்ட விசேட ஊர்திகளும் வந்தன.

இந்த யாத்திரிகர்கள் கீரிமலை மற்றும் நயினாதீவுப் பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்தனர்.

இந்த யாத்திரிகர்களுக்கான குடிதண்ணீர் மற்றும் அத்தியாவசிய சேவைகள் என்பவற்றை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

இதேவேளை, இந்த யாத்திரிகர்களின் வாகன அணியால் யாழ். நகரில் நேற்று வாகன நெரிசல் ஏற்பட்டது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து ஒருவாறு வாகன நெரிசலைச் சீர்செய்தனர். (50-224)

## கொடிகாமம் ஐயனார் கிராமத்துக்கு இதுவரை மின்விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 25

கொடிகாமம் நகரப் பகுதியைச் சேர்ந்த ஐயனார் கோயில் கிராமம் இதுவரை காலமும் மின்சாரம் வழங் கப்படாமல் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்தப் பகுதியில் நூற்றுக்கு அதிகமான குடியிருப்புகள் உள்ள போதிலும் தினமும் மண்ணெண்ணெய் விளக்கிலேயே கல்வி கற்பதாகப் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான மாணவர்கள் தெரிவித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதியில் நான்கு மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து ஐயனார் கோயிலடி வரை மின்கம்பங்கள் நாட்டி மின்சாரம் வழங்கக் கோரி இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை யெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (50-207)

## வேண்டுதல் நிறைவேறியதால் நேர்த்திக்கடனில் வன்னிமக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான இந்துக் கோயில்களில் தற்போது திருவிழா ''சீசன்'' ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் தற்போது வன்னியில் இருந்து மீளக்குடியேறிய மக்களே பெரிதும் பங்கெடுப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

காவடி எடுத்தல், பிரதிஷ்டை செய்தல், அடியழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல் போன்றவற்றில் ஈடுபட்டுத் தமது நேர்த்தியை இவர்கள் நிறைவு செய்து வருகின்றனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தாம் உயிர்கள் பிழைக்க வேண்டும் என்பதற்காக இங்குள்ள தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்ததாகவும், தற்போது அதற்காகவே இத்தகைய நேர்த்திக்கடன்களை அவர்கள் நிறைவேற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குடாநாட்டின் பிரசித்தி பெற்ற ஏனைய இந்துத்தலங்களுக்குச் செல்லும் மீள்குடியேறிய மக்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றி வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. (எ-121)

## நாளும் வீழும் பனைமரங்கள்; வெறிச்சோடிக் கிடக்கும் காணிகள்!



கோப்பாய், ஜூன் 25

கோப்பாய் - நீர்வேலிப் பிரதேசங்களிலுள்ள பனை மரங்கள் அண்மைக் காலமாக அதிகளவில் வெட்டப்பட்டு வருவதாக பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகத் தற்போது குடாநாட்டில் அதிகரித்துள்ள கட்டுமானப் பணிகளினால் பனைமரங்களின் தேவைகள் கூடுதலாக உள்ளதால் பலரும் பனை மரங்களை விற்று வருகின்றனர். இதனால் பல்வேறு பனங்காணிகளில் உள்ள பனைகள் முற்றாக தறிக்கப்பட்டு அவை வெட்டவெளிப் பிரதேசம் போல் வெறிச்சோடிக் காட்சி அளிக் கின்றன.

இதனால் எதிர்வரும் காலங்களில் இப்பிரதேசங்களில் பனை மரங்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது. (எ-72)

## அங்கவீன முற்றோர் கொடுப்பனவு

சாவகச்சேரி வடக்கு இரத்தினம் கந்தராசா என்பவருக்கான அங்கவீன முற்றோர் கொடுப்பனவு சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளது.

இந்தப் பயனாளி தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்புகொண்டு கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (50-207)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 12 | 26.06.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : பூரணை |
| | பி.ப. 05.35 வரை |
| நட்சத்திரம் | : மூலம் |
| | மு.இ. 10.48 வரை |
| சுபநேரம் | : 02.55 - 04.25 |
| ராகுகாலம் | : 08.55 - 10.25 |
| | பூரணை விரதம் |

## தும்பளையில் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமராட்சியைச் சேர்ந்த அமரர் மணியம் கணபதிப்பிள்ளையின் மூன்றாம் ஆண்டு நினைவை முன்னிட்டு மணியம் கணபதிப்பிள்ளை நிதியத்தால் நடத்தப்படும் மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகளும், பாலர் பாடசாலை மாணவர்களுக்கான மனனப்போட்டியும் இன்று வெள்ளிக்கிழமை காலை [illegible]தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (201)

## தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாள் தேவஸ்தான பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறும்.

இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள்காட்சி வழங்குவார்.

நாளை காலை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

(சிறப்பிதழ் - 15ஆம் பக்கத்தில்)

(ஒ-1)

* * *

கோப்பாய், ஜூன் 25

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

காலை 5.30 மணிக்கு உற்சவகால அபிசேக ஆராதனைகளும் 8.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 10.15 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி வலம் வருதலும் இடம்பெறும்.

பகல் 1.00 மணிக்கு சுவாமி தேரில் இருந்து அவரோகணமாகி தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு தேரடித் திருவிழா இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் - 8ஆம் பக்கத்தில்)

(ஒ-1-72)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 25

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமிகோயில் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறுகிறது.

காலை 8.15 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 10.15 மணிக்கு கல்யாணவேலவன் தேரில் ஆரோகணித்து அருள்காட்சி வழங்குவார்.

நாளை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் 18ஆம் பக்கத்தில்)

(ஒ-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீல்கமல் இப்போது வன்னியில்!

Nilkamal

உறுதிமிகு பிளாஸ்ரிக் தளபாடங்கள்!!

★ கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு பட்டினத்திலும் வியாபாரிகள் தேவை.

★ க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியெய்திய துடிப்பான இளம் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. தகைமை உடையவர்கள் நேர்முகப் பரீட்சைக்காக 30.06.2010 புதன்கிழமை பி.ப. 2மணிக்கு வருக.

ஏகவிநியோகஸ்தர்கள்:
எஸ்.வி.ஆர். என்ரபிறைசஸ்.
கண்டி வீதி, கிளிநொச்சி.
விபரங்களுக்கு: 0777705963, 0771728348.
(99841)


## 9ஆம் ஆண்டு நினைவில்

| மண்ணகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 26 | | 20 |
| ★ | | ★ |
| 04 | | 06 |
| ★ | | ★ |
| 1951 | | 2001 |



### அமரர் மாதன் சின்னராஜா (சாமி)

(25.06.2010)

காற்றினில் வந்த செய்தி கனவாகிவிடாதோ
நேற்றுவரை இருந்தின்று உம் உயிர் விட்டதென்ன
கூற்றவன் வேலை செய்தான் குன்றென நிமிர்ந்த உம்மை
அன்பு நிறைந்த உம் சிரிப்பால் அனைவரையும் அரவணைத்தீர்
அன்பினால் எமை இன்பத்தில் ஆடவைத்தீர்
உம் நினைவில் நாம் ஏங்கித்தவிக்க
எம்மைவிட்டு நீர் சென்றதெங்கே.

என்றும் உம் நினைவில்:
மனைவி: லீக்மி,
மகன்: கிரோராஜ் (லண்டன்)
மாமா: கிருஸ்ணன்.

கைதடி மேற்கு,
கைதடி.
(99839)

## மரண அறிவித்தல்



### கைலாசபிள்ளை கணேசலிங்கம்

யாழ் நல்லூர் இல. 100/1 சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ் ஆனைப்பந்தி மற்றும் செய்சாபுர தொடர் மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற யாழ் ப.நோ.கூ. சங்க உத்தியோகஸ்தரான கைலாசபிள்ளை கணேசலிங்கம் அவர்கள் 23.06.2010 புதன்கிழமை கொழும்பில் அகால மரணமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை பரமேஸ்வரியின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற யாழ். பொலிஸ் பரிசோதகர் மாணிக்கம் யோகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ஓய்வு பெற்ற யாழ் ப.நோ.கூ சங்க உத்தியோகஸ்தரான வாமதேவி(ரதி) அவர்களின் அன்புக் கணவரும், தனுராஜ், யதுராஜ், சிந்துஜா (உதவி நூலகர் கொ.தமிழ் சங்கம்) உதயராஜ் (கொழும்பு.இந்துக்கல்லூரி உத. மாணவர்) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மகிந்தமலர்ச்சாலையில் நடைபெற்றுதகனக் கிரியைகளுக்காக கல்கிசைபொதுமயானத்தி ற்கு 25.06.2010 வெள்ளிக் கிழமை பிற்பகல் 4மணிக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தயவுடன் அறியத் தருகின்றோம்.

தகவல் - மனைவி, பிள்ளைகள்
A-G/12 செய்சாபுர தொடர் மாடி
தொலைபேசி : 0112611287

## யாழ்.நாச்சிமார் கோயிலடியில் நாளை இரத்தான முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

நல்லூர் றோட்டறிக் கழகமும், யாழ்.நாச்சிமார் கோயிலடி காமாட்சி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து நாச்சிமார் கோயிலடி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குருதிக்கொடையாளர்கள் தாமாக முன்வந்து குருதியை வழங்கி உதவுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர். அண்மைக்காலமாக டெங்கு நோயின் தாக்கம் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ளதால் குருதியின் தேவையும் அதிகரித்துள்ளது எனவும் குருதிக்கான பற்றாக்குறை நிலவுவதாகவும் இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-14)

## மரண அறிவித்தல்கள்

### டோரஸ் இராசசிங்கம்

(யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் மற்றும் யாழ்.மாநகர சபை இளைப்பாறிய செயலர்)



யாழ்.குருநகர், சென்.ஜேம்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மருதானையை வசிப்பிடமாகவும் கொண்ட டோரஸ் இராசசிங்கம் 23.06.2010 புதன் கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் நீர்றா இராசசிங்கத்தின் அன்புக் கணவரும் (யாழ்.குருநகர், சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இளைப்பாறிய ஆசிரியை), டொமினிக்கின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.06.2010) சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு பொறளை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன்,
சகோதரன் - அருட்தந்தை இராசசிங்கம். (O.M.I)

தொ.பே: 0777715365, 0113071253. (99846)

### பொன்னையா கணபதிப்பிள்ளை



முதலியார் கோயிலடி, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை 22.06.2010 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ராசகுமாரி, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தவசீலன், கிரிசாந்தி (நோர்வே), நிறோயா ஆகியோரின் அன்புத் தந்தையும் பொனிபஸ் பிரான்சிஸ் (நோர்வே), சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரது மாமனும் இலக்கியாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (99845)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை சச்சிதானந்தன் (குண்டுமணி)

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சச்சிதானந்தன் (குண்டுமணி) நேற்று (24.06.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் செல்வராணி, சுத்தானந்தன், அழகுராணி ஆகியோரின் அன்புத் தம்பியும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் சிறீஸ்கந்தராசா, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சுதன் மற்றும் மதன், தரன், மதுரா, மாதுளா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுலக்ஷன், சுஹாஷன் மற்றும் ரூபசந்திரன், சௌந்தரப்பிரியா, சிவரஞ்ஜினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சுரபி, ராகவேந்தன், ஓவியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொலைபேசி: 0213218695

இல.15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (99840)

## சமய சந்நிதிகளில்

புலோலி, குரும்பைகட்டி சாமுண்டிகா தேவி சமேத ஞான வைரவர் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு வளந்து கட்டலுடன் ஆரம்பமாகும்.

நாளை சனிக் கிழமை காலை பொங்கல் இடம்பெற்று விசேட அபிஷேக பூசைகளும் நண்பகல் ஒரு மணிக்கு உற்சவம் நிறைவுறும். (ஓ-236)

* * *

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்தத் தேர்திருவிழா இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

நாளை சனிக் கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ஓ-72)

* * *

சாவகச்சேரி வடக்கு, மண்டுவில் கண்ணகை அம்மன் ஆலயத் தேர்த்திரு விழா இன்று காலை 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை மு.ப 10 மணிக்கும் நடைபெறும். (ஓ-131)

* * *

நீர்வேலி, செல்வக்கிதிர்காமர் கோயில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ஓ-72)

### சின்னத்தம்பி ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)



கைதடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, மருதங்குளம், வளர்மதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஐயாத்துரை நேற்று (24.06.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தன்-பாறி தம்பதியரின் மருமகனும் ஜெயந்தினி (சுவிஸ்), ஜெயசீலன் (டென்மார்க்), ஜெயதேவன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகனேந்திரன் (சுவிஸ்), ஜெயரூபி (டென்மார்க்), கஸ்தூரி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரணவி, பிரவின் (சுவிஸ்), மாதுளன், இலக்கியா, பிரணவன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் சி.செல்லத்துரை மற்றும் சரோஜினி, செல்வம், நந்தாவதி, இராசதுரை, பொன்னுத்துரை (லண்டன்), நாகேஸ்வரி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராசா, சிங்கராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் சின்னத்தூர இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.ஜெயசீலன், ஐ.ஜெயதேவன்,
ஐ.ஜெயந்தினி (பிள்ளைகள்)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (99849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சுண்ணாம்புக்கல் அகழப்படுவது உண்மையே

## அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் பரணகம

யாழ்ப்பாணம்,ஜூன்25

வலி.வடக்கு அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் சுண்ணாம்புக் கல் அகழப்படுவது உண்மையே. அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்.

இவ்வாறு, லங்கா சிமெந்து நிறுவனம், காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் புதிய தலைவர் தேசமானி எஸ்.ஜே.பரணகம தெரிவித்தார்.

லங்கா சிமெந்து நிறுவனத்தின் இணுவிலில் இயங்கும் யாழ். காரியாலயத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட புதிய தலைவர் பரணகம அங்கு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் அவர் நடத்தினார்.

அதன் போது அவர் மேலும்தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

வலி.வடக்கு அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் சுண்ணாம்புக் கல் அகழப்படுகின்றமை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கடிதம் மூலம் பலமுறை அறிவித்திருக்கிறேன். அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கேட்டிருந்தேன். ஆனால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை இன்று பிற்பகல் (நேற்று) யாழ்.மாவட்டசெயலகத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலிலும் இந்த விடயம் தொடர்பாக வலியுறுத்துவேன்.

வலி.வடக்குப் பகுதியிலுள்ள சுண்ணாம்புக் கற்களை எங்கு கொண்டு செல்கிறார்கள்? யார் அதனை பயன்படுத்துகிறார்கள்? யாரால் அவை அகழப்படுகின்றன என்ற விடயம் எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால் அங்கு கல் அகழ்வு இடம்பெறுவது என்பது உண்மை. அது எனக்கும் தெரியும்.

சுண்ணாம்புக் கல் அகழப்படுவது சுற்றாடலுக்குப் பாதிப்பு எனக்கூறுகின்றனர். ஆனால் அந்தக் கல் வளர்வது என்பது உண்மை. 20 வருடகாலத்தில் அது மூன்றிலொரு பங்கு வளர்ந்துள்ளது. - என்றார். (50-14)

## சுயதொழிலுக்கான உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூன்25

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்கு ஊனமுற்றோருக்கான சுய தொழில் உதவிக் கொடுப்பனவுகள் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த வீ.ஏபிரகாம், மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த எம்.கிட்டினன் ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களை குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்புகொண்டு கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (50- 207)




# சாவகச்சேரி அஞ்சல் வளாகத்துக்கு மதில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்25

சாவகச்சேரி அஞ்சல் அலுவலக வளாகத்தைச் சுற்றி மதில் அமைப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் அலுவலக மதில்கள் முற்றாக அழிந்து போயின. சாவகச்சேரி அஞ்சல் அலுவலக மக்கள் செயற்பாட்டு நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட அஞ்சல்மா அதிபரிடம் சாவகச்சேரி அஞ்சல் அதிபர் க.தெய்வேந்திரம் விடுத்த வேண்டுகோளையடுத்து மதில் மற்றும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் ஆகியவை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் 'சி.ரி. ஸ்கானர்' பழுதடைந்தது

## திருத்துவதற்கு தொழில்நுட்பவியலாளர் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன் 25

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள 'சி.ரி.ஸ்கானர்' பழுதடைந்துள்ளதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

பழுதடைந்த இந்த 'சி.ரி.ஸ்கானர்' இயந்திரத்தைத் திருத்துவதற்குக் கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர்களை அழைத்து வருவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பெரும்பாலும் இந்த வாரத்தில் தொழில்நுட்பவியலாளர்கள் இங்கு வந்து சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் கொழும்பில் இருந்து உடனடியாகப் புதிய 'சி.ரி.ஸ்கானர்' இயந்திரம் ஒன்றை இங்கு எடுத்துவருவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (20-224)

## சாவகச்சேரி நகரசபை எல்லைப் பகுதியில்

# பற்றைகள் வளர்ந்துள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்25

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பற்றைக் காடுகளாக காணப்படும் காணிகளின் உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.


டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதமைக்காக பொது சுகாதாரப் பரிசோதகர் மூலம் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அண்மையில் மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைக்குப் பின்னர் பெருமளவு முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் துப்புரவு செய்யப்படாமல் பற்றைகளாக உள்ள காணிகளின் உரிமையாளர்கள் அல்லது காணியினைப் பராமரிப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊறணி அந்தோனியார் திருவிழா நாளை மறுதினம் சொந்த இடத்தில்

ஆனைக்கோட்டை,ஜூன்25

பழமை வாய்ந்த ஊறணி புனித அந்தோனியார் திருவிழாவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சொந்த இடத்திலேயே நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து பல திக்குகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் வலி.வடக்கின் ஊறணி வாழ் மக்கள் ஒன்று திரண்டு மேற்படி விழாவை தமது சொந்த இடத்திலேயே நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்டக் குரு முதல்வரின் வழிநடத்துதலில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக பாதுகாப்புப் படையினரின் அனுமதி கிடைத்ததையடுத்து விழாவுக்கான ஏற்பாட்டை மேற்கொண்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அனுமதி பெறப்பட்ட 45 பேர் கொண்ட பங்கு மக்கள் குழுவொன்று இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை ஆகிய தினங்களில் ஊறணி சென்று அந்தப் பங்கின் முதற்குரு அருட்பணி ஆர்.எக்ஸ்.நேசராஜா அடிகளாரின் தலைமையில் புனித அந்தோனியாரின் கொடியை ஏற்றி ஆயத்த வழிபாடுகளை ஆரம்பித்து வைக்கும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திருநாட் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்தத் திருவிழாவில் கலந்து கொள்வோர் அன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு முன்பதாக தமது வாகனங்களில் தெல்லிப்பழைச் சந்திக்குச் சென்று அங்கிருந்து தமது வாகனங்களிலேயே ஊறணி செல்ல அனுமதிக்கப்படுவார்களென்றும், வாகன வசதி இல்லாதவர்களுக்கும் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து ஊறணி சென்று வர வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (50-20)

# வங்கியில் கடன்; வீடுகளில் நெல்!

யாழ்ப்பாணம்,ஜூன்25

காலபோக நெல் அறுவடை செய்தும் சந்தைப்படுத்த முடியாமல் போனதால் இலங்கை வங்கியில் கடன் பெற்ற நெற்செய்கையாளர்களுக்கு தமது கடனை மீளச் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு இலங்கை வங்கியினால் ஒரு லட்சம் ரூபா வரை வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு கடன் பெற்று நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடை செய்தபின் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்தமையால் சந்தைப்படுத்த முடியவில்லை. இதனால் நெல் விற்பனை செய்யப்படாமல் வீடுகளிலேயே தேங்கிக் கிடப்பதால் வங்கியில் பெற்ற கடன் தொகையைச் செலுத்த விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-207)

# பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடான சாவகச்சேரி பஸ் சேவை ஒரு வாரமாக இல்லை

## மாணவர்களும் அரச அலுவலர்களும் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக சாவகச்சேரிக்குச் செல்லும் பேருந்து சேவை கடந்த ஒரு வாரமாக சேவையில் ஈடுபடாததால் மாணவர்களும் அரச அலுவலர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பேருந்து சேவை நிறுத்தப்பட்டதால் பயண பருவச்சீட்டு பெற்ற மாணவர்களும் அரச அலுவலர்களும் பணம் கொடுத்து வேறு தனியார் வாகனங்களில் பயணிப்பதாகவும் தெரிவித்தனர்.

தனியார் பஸ்களும் தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்களும் மாணவர்களை ஏற்றாமல் செல்வதால் அவர்கள் மீண்டும் வீடு செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

வரணி ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., சாவகச்சேரி கல்லூரிகள் ஆகியவற்றில் கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




அனிமேஷன் கற்கை நெறி நிறுவனமொன்று நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை முதற்படத்திலும், நிறுவனத்தை யாழ்.வர்த்தக கைத்தொழில் மன்றத்தலைவர் கே.பூரணச்சந்திரன் நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், 'மக்னற்' அக்கடமியின் முகாமைத்துவ [illegible] உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்...



மூளாய் வதரள்புலோ சித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவின் போது விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும்காட்சியைப் படத்தில் காணலாம். (படம்: விக்ரோறி)



புங்குடுதீவு பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திரு விழாவின் போது விநாயகர் வீதியுலா வருவதை படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)





அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் சுவாமி தேருக்கு எழுந்தருள்வதை முதலாவது படத்திலும் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## அத்தியாவசிய பொருள்களின் விலையுயர்வுக்கு அரசு விதிக்கும் அதிகபட்ச வரியே காரணமாம்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன், 25

நாட்டின் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வுக்கு அரசு விதிக்கும் அதிபட்ச வரியே காரணம் என ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

மாறாக உலக சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுவதாக அரசு தெரிவிக்கும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் சில தினங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை அறியக் கூடியதாக இருக்குழ் எனவும் அவர் தெரிவித்தார்.

அப்போது எழும் எதிர்ப்புக்களை தவிர்த்துக் கொள்ளவே அரசு தற்போது சில அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்து வருவதாக ஜே.வி. பியின் செயலாளர் டில்வின் சில்வா சுட்டிக்காட்டினார்.

## சட்டவிரோதமாக அமைக்கப்படும் மதத்தலங்களை தடுத்து நிறுத்துக!

### பொலிஸ்மா அதிபருக்கு பிரதமர் பணிப்பு

கொழும்பு, ஜூன், 25

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் வழிபாட்டுத் தலங்களை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு பிரதமர் டி.எம். ஜயரத்ன பணித்துள்ளார்.

பிரதமர் அலுவலகம் விடுத்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்கள், மாகாண, மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு இது தொடர்பாக அறிவுறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு பிரதமர் கூறியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் வழிபாடுத் தலங்களினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனவும் அவற்றை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் எப்பகுதியிலாவது வழிபாட்டு தலங்களை அமைக்க வேண்டுமானால் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர்களின் அனுமதியுடன் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அதனை மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.இவ்வாறு ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக பிரதேச சபையின் செயலாளர்கள் ஆராய்ந்து மீண்டும் அமைச்சின் செயலாளர்களிடம் குறித்த விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதன் பின்னரே வழிபாட்டுத் தலங்களை அமைக்க அனுமதி வழங்கப்படும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடாநாட்டு பாடசாலைகளுக்கு இடையேயான கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரை (மேற்பிரிவு) போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கவிதைப் போட்டி**

முதலாமிடம் - ப.ஜெனகன் (கொக்குவில் இந்து), இரண்டாமிடம் - செ.கோபிகா (கொக்குவில் இந்து), மூன்றாமிடம் - ஜெயப்பிரியா (சுண்டுக்குளி மகளிர்).

**ஆறுதல் பரிசுகள்**

ப.கௌசிகா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்), இ.யுவராஜ் (மானிப்பாய் இந்து), பா.சங்கீதரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி).

**கட்டுரைப்போட்டி (மேற்பிரிவு)**

முதலாமிடம் - துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்து), இரண்டாமிடம் - கி.பிறைநிலா (கொக்குவில் இந்து), மூன்றாமிடம் - மா.தீபிகா (மானிப்பாய் மெமோறியல்)

**ஆறுதல் பரிசுகள்**

லு.கோபிகா (கொக்குவில் இந்து), சி.சகானா (கொக்குவில் இந்து), சி.நிரூபன் (பருத்தித்துறை ஹாட்லி).

(ஒ-க)

## பூமியின் வெப்பத்திலிருந்து மின்சார உற்பத்தி; இலங்கையில் முதன்முதலாக புதிய தொழில்நுட்பம்

கொழும்பு, ஜூன் 25

பூமியின் வெப்பத்தினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஆய்வு வேலைகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

தற்போது நீரிலிருந்தும் நிலக்கரியைப் பயன்படுத்தியும் இலங்கையில் மின்சாரம் பெறப்பட்டு வருகின்றது. ஆனால் தொடர்ந்தும் நிலக்கரியைப் பயள்படுத்துவது சுற்றுச் சூழலுக்கு உகந்ததாக இல்லையென சுற்றுச்சூழல் நிபுணர்கள் தெரிந்த நிலையில் மாற்று வழியொன்றைக் கண்டறிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவேதான் 'பூமியின் வெப்பத்திலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் ஆரம்பித்துள்ளன. இது தொடர்பான ஆய்வு வேலைகளை மேற்கொள்வதாக பேராசிரியர் புரூஸ் ஹொப்ஸ் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும், தமது ஆய்வு வேலைகளை முடித்தபின் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(க)

## பாதி சந்திரகிரகணம் 26ஆம் திகதி நிகழும்

கொழும்பு, ஜூலை 25

ஜூன் 26ஆம் திகதி பாதி சந்திரகிரகணம் ஒன்று நிகழவிருக்கின்றது. கிழக்கு ஆசியா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிகாகவில் இது கண்களுக்குத் தெரியும்.

இது பகலில் நிகழும் கிரகணம் என்பதால் இலங்கையில் அதனைப் பார்ப்பது சாத்தியமில்லை. கிழக்கிலங்கையில் உள்ளவர்களால் கிரகணம் முடிவுறும் தறுவாயில் 6.30 மணியளவில் சந்திரன் கிழக்கில் உதயமாகும் போது சிறிதளவு காணக்கூடியதாய் இருக்கும்.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதிக்கட்ட போரின் போது பொதுமக்களால் கைவிடப்பட்ட வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் கிளிநொச்சி நகரில் உள்ள வாகன பராமரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதைப் படங்களில் காணலாம். இவற்றை மூடிப் பற்றைகள் வளர்ந்து இவை காணாமற்போய்விடுமோ என எண்ணத் தோன்றுகின்றது.
(படங்கள் : கிளிநொச்சி செய்தியாளர்)

# வடமாகாண உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் ஜூலை மாதம் வவுனியாவில் நடைபெறும்

வவுனியா,ஜூன்25

வவுனியாவில் ஜூலை மாதம் நடைபெறவுள்ள வடமாகாண உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் நிகழ்வில் உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றிய பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான விவரங்கள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளிடமிருந்து மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி அதிகார சபைகளில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு பணியாற்றிய தலைவர், உப தலைவர், அங்கத்தவர்கள், உள்ளூராட்சி அதிகார சபையில் பணியாற்றிய நிறைவேற்று நிர்வாக உத்தியோகத்தர்கள்(செயலாளர்கள்), 25 வருட கால சிறப்பு சேவை புரிந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் (பெயர், சேவையின் சிறப்பு, காலப்பகுதி) ஆகியோரின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

## சிறப்புற நடைபெற்ற ஆதவன் முன்பள்ளி விளையாட்டுவிழா

கிளிநொச்சி ,ஜூன்25

கிளிநொச்சி கனகபுரத்தில் இயங்கி வரும் ஆதவன் முன்பள்ளியின் 15 ஆவது வருட விளையாட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளியின் பணிப்பாளர் சி. மகேந்திரன் தலைமையில் ஆரம்பமான இந்த விழாவில் மங்கள விளக்கினை பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம், ஓய்வு பெற்ற அதிபர்களான சி.சந்திரராசா, எஸ். கனகரட்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியும் முன்பள்ளிக் கொடியும் ஏற்றப்பட்டு முன்பள்ளி சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வு நடைபெற்றது. பின்னர் சிறார்கள் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. சிறார்கள் சுறுசுறுப்பாக போட்டியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து ஆண் மாணவர்களின் சங்கீதக் கதிரை நிகழ்வும், பெண் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வும், கண்கவர் நிகழ்வுகளாக நடைபெற்றன. தொடர்ந்து சிறார்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (50-405)

# உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி செயலகத்தில் நடமாடும் சேவை

## 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறும்

கிளிநொச்சி,ஜூன்25

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நீதி மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 29ஆம்,30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட தினங்களில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப்பத்திர சேவை, தேசிய அடையாள அட்டை தொடர்பான சேவை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள்,

* காலம் கடந்த ஓய்வூதியக் கொடுப்பனவு
* விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் வழங்குதல்
* ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

ஆகிய சேவைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# யாழ்.-பூநகரி படகுச் சேவையால் பயனடைந்துள்ள அரச ஊழியர்கள்

பூநகரி,ஜூன்25

மணியந்தோட்டம் துறைக்கும் பூநகரிக்கும் இடையிலான படகுச் சேவையின் மூலம் பூநகரிக்குப் பணியாற்றச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள் பெரிதும் நன்மையடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் படகுச் சேவை தினமும் இரண்டு தடவைகள் இடம்பெற்று வருகின்றது. மணியந்தோட்டம் துறையில் இருந்து காலை 7 மணிக்குப் பயணிகளுடன் செல்லும் படகு அரைமணி நேரத்திற்குள் மண்ணித்தலைத் துறையை சென்றடைகின்றது. பயணிகளின் வருகையை பொறுத்து இந்தப் படகு சேவை நடைபெற்று வருவதாக படகோட்டிகள் தெரிவித்தனர்.

இந்தப் படகில் பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் பயணித்து வருகின்றனர். பூநகரியில் பணியாற்றும் அரச ஊழியர்கள் சிரமமின்றி அங்கு செல்வதற்கு இந்தப் படகுச் சேவை உதவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. படகில் பயணம் செய்யும் பயணி ஒருவரிடம் இருந்து பயணக்கட்டணமாக நாற்பது ரூபா அறவிடப்படுகின்றது. (50-224)




# மன்னாரில் பாணின் விலை 14 ரூபாவால் அதிகரிப்பு

மன்னார்,ஜூன்25

நாடு முழுவதும் பாணின் விலை நான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்ட வேளையில் மன்னாரில் மட்டும் பதினான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

நாடு முழுவதும் 450 கிராம் பாண் ஒன்றின் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூபா 38 ஆக இருக்கையில் மன்னாரில் 48 ஆக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதை மன்னார் மக்கள் எவ்வித எதிர்ப்புமின்றி வாங்கி வந்தனர். தற்போது ரூபா நான்கு அதிகரிக்கப்பட்டு பாணின் விலை 42 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னாரில் நேற்று முதல் பாண் ஒன்றின் விலை 52 ரூபாவாக விற்கப்படுவதோடு இயந்திரத்தில் வெட்டிக் கொடுப்பதற்கு மேலதிகமாக ஐந்து ரூபாவும் அறவிடப்படுகின்றது.

இதுதொடர்பாக விலைக்கட்டுப்பாட்டு அதிகார சபையும் அதன் ஊழியர்களும் மௌனம்காத்து வருகின்றமை மக்களை விசனத்திற்குள்ளாக்கியுள்ளது. (50-80)

# வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலை வாரத்தில் இருநாள் இயங்குகின்றது

கிளிநொச்சி,ஜூன்25

வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலை வாரத்தில் இருநாள்கள் பகுதி நேரம் இயங்கி வருகின்றது. இதன்படி கடந்த 15 ஆம் திகதியில் இருந்து செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிக்கு வைத்திய சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இங்கு முழுநேரமும் நோயாளர் காவு வண்டி ( அம்புலன்ஸ்) சேவை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதி மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இந்த வைத்தியசாலை ஆரம்பிக்கப்படவில்லை என இம்மாத முற்பகுதியில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மகப்பேற்று மருத்துவ விடுதியும் இயங்கி வந்த இவ்வைத்தியசாலைக்கு நிரந்தரமாக ஒரு வைத்தியரை நியமித்து மக்களுக்கு சேவை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-405)

# கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தின் மேல்மாடியில் 'நைற்றா' செயற்படுகின்றது

கிளிநொச்சி,ஜூன் 25

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கட்டட விவகாரத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற ஆளுநர் சபை தெரிவுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வடமாகாண பிரதிப் பிரதம செயலாளரும் முன்னாள் கிளிநொச்சி அரச அதிபரும், தொழில்நுட்பக் கல்வி நிறுவன நிறுவுனருமான தி. இராசநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்நிறுவனத்தின் மாடிக்கட்டடம் நைற்றா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வடமாகாண அலுவலகத்திற்கு பயன்படுத்துவதற்குமான பெயர்பலகை அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குழுவினர் கிளிநொச்சிக்கு வருகை தந்தபோது திரை நீக்கம் செய்யப்பட்டது. பின்னர் இது தொடர்பாக அரச அதிபருடன் தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தினர் பேசியமைக்கு அமைவாக அக்கட்டடத்தின் மேல்மாடியினை வாடகை அடிப்படையில் 'நைற்றா' விற்கு வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

இதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இக்கல்வி நிறுவனமானது 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இது கிளிநொச்சி ஏ-9 வீதியில் தலைமை அலுவலகத்தினையும், கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பயிற்சி நிலையங்களையும் அமைத்துச் சிறப்பாக செயற்பட்டு வந்தது. தற்போது உடனடியாக ஆங்கில பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது - என்றார்.

# வடமாகாண விளையாட்டு விழா இம்முறை கிளிநொச்சியில்

கிளிநொச்சி,ஜூன் 25

வடமாகாண விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் அண்ணாத்துரை, வடமாகாண உதவி விளையாட்டுப் பணிப்பாளர் கனகராசா உட்பட மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரபந்து, கிபடி ஆகிய போட்டிகளை கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள மைதானங்களில் நடத்துவது எனவும் மெய்வன்மைப் போட்டிகளை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்போட்டிகள் ஜூலை மாத இறுதிப் பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (50-405)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் மகா கணபதி துணை

# புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை திருவருள் மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 25.06.2010



## தேரேறும் பொலிவு காண்பீர்!



கஜானனம் பூதகனாத் ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாம் விக்நேசுவர பாத பங்கஜம்.

நாத வடிவான சிவனும் சிந்து வடிவான சக்தியும் சேர்ந்ததே விநாய வடிவம். விநாயகர் நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரத் தலங்களில் மூலாதாரமான ஆனந்தமய கோசத்தில் அமர்திருப்பதாக நூல்கள் கூறுகின்றன.

எனவே நாம் விநாயகரை வழிபட்டால் வினை வேரோடு அறும். விநாயகர் மிக நுண்ணறிவும் புத்திக் கூர்மையும் தர வல்ல தெய்வம். கல்விக்கு முதல்வர்.

எடுத்த காரியம் யாவையும் வெற்றி பெற வைப்பவர் சித்தி விநாயகர். எம் ஊர் மக்கள் சித்தி விநாயகரை குலதெய்வமாகப் போற்றி வழிபட்டு நினைத்தவை யாவும் சித்திபெற விளைந்த மேன்மை மறக்கற்பாலது.

வேண்டுவார்க்கு வேண்டுவன அளிக்கும் எம்பெருமான் சித்தி விநாயகர் பஞ்ச நிருத்தியங்களிலே அழித்தல் தொழிலை இயற்ற வேண்டி இன்று இரதோற்சவத்தில் உலா வருவது எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

ஊர்கூடி வடம் பிடிக்க உலா வருகின்ற சித்தி விநாயகப் பெருமான் சகல யோகம் மிக்க வாழ்வை தன் மீளா அடியவர்க்கு என்றும் வழங்க வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

ஸுகினோ பவந்து!

கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் J.P.,
மகோற்சவகாலக் குரு,
ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
புன்னாலைக்கட்டுவன்.

## பிரதேச செயலரின் வாழ்த்து



கோயிலின் சிறப்பிற்கு மேலும் சிறப்புச் சேர்ப்பது அவை அமைந்துள்ள இடங்களே. அந்த வகையில் புன்னாலைக்கட்டுவன் ஓர் அழகான அமைதியான கிராமம். கற்றறிந்த சான்றோர் பலர் வாழ்ந்த வாழ்கின்ற இக்கிராமத்தின் மத்தியிலே ஆயாக்கடவை எனும் பதியினிலே வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் தேரேறி மக்களுக்கு அருள் பாலிக்கும் இந் நன்னாளில் அனைத்து மக்களும் அவர் அருளைப் பெற்றுய்ய வாழ்த்துகிறேன்.

இறைவனின் அருளைப் பெற்று மனச்சாந்தி, சந்தோஷம், இறையருள் என்பவற்றை மக்கள் சமூகம் ஒருங்கே பெற இணையும் இடம் ஆலயம். ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என ஆன்றோர் கூறுவர். அந்த வகையில் பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயம் புன்னலைக்கட்டுவன் வாழ் மக்களின் வாழ்வோட்டத்துடன் கலந்து வியாபித்துள்ளது. அடியவர்களின் நற்பணிகளும் இறை தொண்டர்களின் திருப்பணிகளும் கோயிலை மென்மேலும் சிறப்புறச் செய்துள்ளன. வேண்டுவார் வேண்டுவதை அள்ளி வழங்கும் சித்தி விநாயகப் பெருமான் இயற்கை அழகுமிக்க பிரதான வீதியிலே அமர்ந்து தம்மிடம் நாடிவரும் பக்தர்களின் குறைகளை அவர் தம் பாதாரவிந்தங்களைப் பணிந்து அவர் தேரேறி வரும் இந்நாளில் அவரருளை அனைவரும் பெற்றுய்ய இறைவனை வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,
பிரதேச செயலர், உடுவில்.

## ஆலயம் தோன்றிய வரலாறு



சிவபூமி என்று திருமூலரால் அழைக்கப்பட்ட ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் பல புண்ணிய தலங்கள் உள்ளன. அவ் வகையில் புன்னை மாநகரிலே வீற்றிருக்கும் ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயமும் முக்கியமான இடத்தினைப் பெறும் புண்ணியதலமாகும்.

தமிழ் மன்னர் ஆட்சிக் காலத்தில் பிரதானிகளாக முதலிமார்கள் விளங்கினார்கள். அக்காலத்தில் தெய்வேந்திர முதலியார் இவ்விடத்தில் ஆயம் வசூலிக்கப்பட்டு மன்னருக்கு வழங்கப்பட்டமையால் ஆயக்கடவை என்று அழைக்கப்பட்டு கால ஓட்டத்தில் ஆயாக்கடவை என மருவிற்று. இம் முதலி வழித்தோன்றலான விதானை கந்தர் ஆயாக்கடவை குளத்தருகில் உள்ள உயிலமரத்தடியில் தெய்வ உருக்கொண்டு ஆடுவது வழக்கம். அவ்வாறு நடைபெறுகின்ற காலத்தில்தான் குப்பிளானைச் சேர்ந்த பிறைசூடி என்பவர் மன்னாரில் இருந்து நெல்வாணிபம் செய்கையில் மாதோட்டத்தில் இருந்து மூன்று விநாயகர் சிலைகளை கொண்டு வந்தார். இவர் ஆயாக்கடவைக் குளத்தில் நீராடிவிட்டு ஒரு விநாயகர் சிலையினை இக் குளக்கரையில் வைத்துவிட்டுச் சென்றார். பின்பு இவ்விக்கிரகத்தினை விதானை கந்தர் எடுத்து உயிலமரத்தடியில் வைத்துப் பூசித்து வந்தார்.

பின்பு ஊர் மக்களால் பொங்கல், படையல், பயனை செய்தல் போன்ற தமிழரின் பண்பாட்டு வழிமுறைகளில் வழிபாடாற்றி வந்தனர். இக்கோயிலை ஆகமம் சார்ந்த கோயிலாக மாற்ற விரும்பி குப்பிளானில் வாழ்ந்து வந்த சங்கரஐயாவை ஊர்மக்கள் நியமித்தனர். பின்பு அவரின் சந்ததியினர்கள் பெருகியமையால் பூசை நாள்கள் ஊர்மக்களினால் பகிர்ந்து அளிக்கப்பட்டு திறம்பட பூசை செய்துவருகின்றார்.

இவ்வாலயத்தின் தற்போது மூலஸ்தானம் இருக்கும் இடத்தில் 1919ஆம் ஆண்டு மூலவிக்கிரகம் ஊர்மக்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1921இல் முதலவாது கும்பாபிஷேகமும் 1961ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகமும் 1991 ஆம் ஆண்டு மூன்றாவது கும்பாபிஷேகமும் நடைபெற்று சிறப்புப் பெற்ற ஆலயமாக ஊரிற்குப் பெருமை சேர்த்து நிற்கின்றது.

இவ்வாலய மகோற்சவமானது ஆனிப் பூரணையைத் தீர்த்த உற்சவமாக வைத்து 11 தினங்கள் நடைபெறும். மகோற்சவ கால குருமார்களாக இவ் ஊரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரக் குருக்கள் மற்றும் தியாக கெங்காதரக் குருக்கள் ஆகியோர் பரிபாலன சபையினரால் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவராக மகோற்சவ கால கிரியைகளைத் திறம்பட ஆற்றி வருகின்றனர்.

1970ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்று இத் தேர்த்திருவிழா நாற்பதாவது தேர்த்திருவிழாவாக அமைகின்றது. இவ்வாலயம் பல வளர்ச்சிப்படிகளினை அடைய எல்லாம் வல்ல ஆயாக்கடவை சித்தி விநாயகனை வேண்டிநிற்கின்றோம்.

1936இல் கோயிலாரைத் தலைமையாகக் கொண்ட நிர்வாக சபை திறக்கப்பட்டது. 1956இல் இளையதம்பி உடையார் தலைமையாகக் கொண்ட ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான ஆலயபரிபாலன சபை அமைக்கப்பட்டது.

ஏ.உதயகுமார், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை
சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலனசபைத் தலைவர்.

## ஐங்கரனே தேரேறி வாராய்



புன்னைநகர் மன்னவன் ஆயாக்கடவையான் இன்று நாற்பதாவது வருடம் தேரேறி வருகின்ற கண்கொள்ளாக்காட்சி நடைபெறும் இன்றைய நன்நாளில் அடியார்கட்கு வேண்டுவன வழங்கி இவ்வூர் மக்களை செல்வச் செழிப்புடன் வாழ வைக்கிறார். ஆயாக்கடையான் இவ்வூர் மக்களின் திருப்பணி வேலைகளால் சகல வளமும் கொண்ட ஆலயமாக இவ்வாலயம் மிளிர்கின்றது. இவ்வாலயத்தை வெளியூரில் உள்ளவர்கள் பணக்காரப் பிள்ளையார் என்று அழைப்பர். அவ்வளவுக்கு இவ்வாலயம் பிரசித்தி பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது. இவ்வாலயத்தில் சீர்காழி கோவிந் தராஜன், மதுரைச்சோமு போன்ற இசைத்துறையைச் சேர்ந்தவர் களும் தென்னிந்திய தவில், நாதஸ்வர வித்துவான்கள் இவ்வாலயத்தில் கச்சேரிகள் நடத்தியுள்ளார்கள். முன்னைய காலங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவில், நாதஸ்வர வித்துவான்கள் இவ்வாலயத்தில் கைவிசேடம் பெறும் வழமையும் இருந்து வந்துள்ளது. இப்படியான ஆலயத்தை பரிபாலனசபை முகாமை செய்து வருகின்றது. இந்நன்னாளில் தேர்த்திருவிழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவது பெரும் பேறாகும்.

ஆயாக்கடவையான் சேவையில்....
ந.ஜெயகுமாரன், செயலாளர்,
ஆயாக்கடவை சித்தி விநாயகர்
தேவஸ்தான பரிபாலனசபை.

## பிரதேச சபைச் செயலாளரின் பிரார்த்தனை



ஈழத்திலேயுள்ள விநாயகர் ஆலயங்களுள் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்துக்குப் பெருஞ்சிறப்புக்கள் உள்ளன. நீண்ட கால வரலாற்றுடைய இவ் ஆலயம் புன்னாலைக்கட்டுவன் மக்களுக்கு மட்டுமன்றி அயற் கிராம மக்களுக்கும் விநாயகரின் அருட் பிரவாகத்தை அள்ளி வழங்கும் திருத்தலமாக விளங்குகின்றது. சமய வாழ்வின் செம்மைகளைக் கடைப்பிடிக்கும் வண்ணம் சிறப்பான விழாக்ளையும் வைபவங்களையும் முன்னெடுத்துவரும் நிலையில், நாற்பதாண்டுகளுக்கு மேலாகச் சித்திரத் தேரிலே சித்திவிநாயகர் பவனிவந்து எல்லையில்லாப் பெருங்கருணையை எல்லோருக்கும் வழங்கி வருகின்றார். வினைகள் தீர்க்கும் வேழமுகத்து விநாயகரின் தேர்த்திருவிழா நாளிலே, வெளிவருகின்ற சிறப்புமலர் செம்மையாக அமைந்திடவும், ஆனைமுகனின் அருள் எல்லோருக்கும் கிடைத்து சுபீட்சமாக வாழவேண்டுமெனவும் சித்தி விநாயகரின் திருப்பாதங்களை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

சுலோச்சனா முருகநேசன், செயலாளர்,
வலி.தெற்குப் பிரதேச சபை.

## இந்து இளைஞர் சங்கம் வாழ்த்துகிறது



வடபுலத்தின் தமிழ்சைவ வரலாற்றில் புன்னலைக்கட்டுவன் கிராமம் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது. இங்கு நல்லாட்சி புரிபவர் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆவார். இவ்வாலயமானது சவுக்குமரத்தடிப் பிள்ளையார் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வரலாற்றுக்கு சிறப்புமிக்க ஆலயத்தில் நாற்பதாவது (40) தேர்த்திருவிழா ஆனது சிறப்பாக நடைபெறுவதை முன்னிட்டு புன்னலைக்கட்டுவன் தெற்கு இந்து இளைஞர் சங்கத்தினராகிய நாம் அளப்பரிய மகிழ்ச்சி அடைவதுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

ச.கஜமுகன்,
இந்து இளைஞர் சங்கத் தலைவர்.

## சித்திரத்தேரிலே சித்திவிநாயகனே! சித்தமாய் அருள்வாய்



சங்கடங்கள் தீர்த்திடும் சித்தி விநாயகனே
புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையில் ஆட்சியாய்
சங்கடங்கள் தீர்க்கமாய் நிறைவேற்றிட கோயில்
கொண்டு முக்கனியும் பொன்னொளி நாயகன்
மங்களமாய் தோன்றிட மகத்தான சிற்பசாஸ்த்திர
புராணவரலாறு புனைந்திட்ட கலையழகாய்
பொங்கும் பொலிவுடனே சித்திரத்தேர் தேர்மேலேறி
சித்தி விநாயகனே சித்தமாய் அருள்வாய்!

குலதெய்வமாகக் கொண்டாடுகின்ற விநாயகனே!
குடிமக்கள் தம்மைக் குறைவின்றிக் காத்து
குல விளக்காய் சோதி நாயகனாய் நலம் யாவும்
குடிகொள்ள குட்டித்தோப்புக்கரணம் எந்நாளும்
நலம் நாடித்தொழுதெழுவோம் சித்தி விநாயகனே
கூடியே வடம்பிடித்து வாழ்வினை இன்புற
பொல்லாவினையறுப்பாய் தரணியில் குறைவின்றி
இன்புற இணையடி தன்னை ஏற்றித் தொழுவோம்!

சித்தி விநாயகனே வாழி! மெய்யடியார்கள் வாழி! வாழி!

க.நித்தியகீர்த்தனன் இந்துதர்மாசிரியர்,
சங்கம் அ.இ.).


## பிரசுர அனுசரணையாளர்கள்

கற்பூர பந்தல் சேவை
குப்பிளான் தெற்கு, குப்பிளான்
உரிமையாளர் :
செ.நவரத்தினராசா

சித்திவிநாயகர் ரெலிகொம் & ஸ்ரேசனறி
சுன்னாகம் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி.
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

சித்திவிநாயகர் பல்பொருள் வாணிபம்
பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன்.
உரிமையாளர் : ந.கண்ணன்

லஷ்மி பவான் சைவ உணவகம்
பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி.
உரிமையாளர்: ந.இராமசாமி
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட தரமான சைவ உணவு வகைகளை உண்டு மகிழலாம்.

பாபு வெதுப்பகம்
சுன்னாகம் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி
தரமான பேக்கரி உணவுப் பொருள்களை ஒரே இடத்தில் பெற்றிடலாம்.

கஜமுகன் ஸ்ரோர்ஸ்
புத்தூர் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி.
உரிமையாளர்:
சண்முகநாதன் கஜமுகன்


தரன் போட்டோ & வீடியோ
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
ஆயாக்கடவை.
உரிமையாளர் :
சண்முகலிங்கம் முரளி

ஸ்ரீமுருகன் நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம் இல. 25, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
உரிமையாளர் : த.தில்லைநாதன்
[illegible] 22 கரட் [illegible]
''தாம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்''

பாணு ஸ்ரோர்ஸ்
(பல்பொருள் வாணிபம்)
ஸ்ரேசன் றோட், ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.
உரிமையாளர் :- தம்பன் கேந்தேஸ்வரன்

லக்சுரி ரேட் சென்ரர்
(பல சரக்கு வியாபாரம்)
இல. 31, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய



## தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010

## நாடுவோர்க்கு நலமான வாழ்வு தரும் நாகபூஷணி தேரேறி வருகின்றாள்



யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அடுத்துள்ள ஒவ்வொரு சிறுதீவும் புராதனப் பெருமை வாய்ந்தனவாக காணப்படுகின்றன. லைடன்தீவு, காரைதீவு, எழுவை தீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு எனும் சப்ததீவுகளுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது நயினாதீவு. இது யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் கடற்பாதையில் தென்மேற்குத் திசையில் 20 மைல் தூரத்தில் உள்ளது. நயினாதீவுக்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் உள்ளது அனலைதீவு. நயினாதீவு ஏறக்குறைய ஏழு மைல் சுற்றளவைக் கொண்டது. மூன்று மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் உள்ளது. இது மாங்காய் வடிவமுடையது. கடுகு சிறிது எனினும் காரம் பெரியதென்ற முதுமொழிக்கிணங்க நயினாதீவு அளவாற் சிறியதெனினும் தொல்புகழாற்றலில் சிறந்ததீவாக விளங்குகின்றது.

சரித்திர காலத்திற்கு முன்தொட்டே பற்பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த பெரும் புகழுடையது நயினாதீவு. இத்தீவின் பல்வேறு பெயர்களை அறிந்துகொள்வது அதன் வரலாற்றை அறிந்துகொள்வதில் ஒரு பகுதியாகக் கருதத்தக்கது. இத்தலத்திற்கு நாகதீவு அல்லது நாகத்தீவு, நயினார்தீவு, நாகநயினார் தீவு, மணி நாகதீவு, மணிபல்லவத்தீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன.

### நாகம் அர்ச்சனை செய்தது

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்துவந்ததாம். ஒரு நாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டு பூக்கள் கொய்து கொண்டு புளியந்தீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல் ஒன்றின் மீது அமர்ந்து இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமைகொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்திற்சென்ற வைசிகன் ஒருவன்(மாநாய்கன் என்பர் சிலர்) அந்நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். ''உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடுப்பாயானால் விலகுவேன்'' என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்வதாக வாக்குறுதியளிக்க கருடன் அங்கிருந்து விலகிச்சென்றது. நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணி கனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றை யெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரைசெய்யும்போது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச்செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த போது நாக இரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப் பதைக் கண்டார்கள்.

நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இது எனக் கருதி அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வட கிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள்.


இத்தகு அற்புத வரலாற்றுச் சிறப்புகளோடு விளங்கும் நயினை நாகபூஷணியம்மையின விகிர்தி வருடத்திற்கான மகோற்சவ பெருவிழாக்களின் சிறப்பு உற்சவமாகிய தேர்விழா இன்றாகும். அன்னை தேரேறி வருகின்ற திருக்காட்சியினைக் காண இலங்கையில் மட்டுமல்லாது உலகம்பூராகவும் வாழும் இந்து மக்கள் பலரும் நயினாதீவில் ஒன்றகூடுகின்ற நிகழ்ச்சியினைக் காணலாம். நயினாதீவு இந்திரலோகம் போல் காட்சியளிக்கின்றது. தேரேறி அருள் பாலிக்கும் அன்னையின் அருள் நலன் எங்கும் பெருகட்டும்.

மதுரகவி காரை
எம்.பி.அருளானந்தன் J.P

### நயினையுறை நாயகியே சரணம் அம்மா!

நாகபூஷணித் தாயே நல்லருள் புரிவாய் அம்மா!
நமக்கருள் புரிய மட்டும் ஏன் இந்தத் தாமதமோ?
போகமார்த்த பூண்முலையாளே நயினை நாகேஸ்வரியே
புகழ்பூத்த நயினையுறை நாயகியே சரணம் அம்மா!
நாகமது குடைபிடிக்க வீதி வலம் வரும் தாயே!
நாங்களுமுனைக் காணக் கடல் கடந்து வந்தோம்!
வேகமாய் வந்தெமது வில்லங்கமெலாம் நீக்கியே
வேதனையைப் போக்கியே நல்வாழ்வு தந்திடுவாய்!

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்



### சோதனை இனியும் வேண்டாம் தாயே!

ஆதியாம் சிவனார் அந்த
அம்பலத்து ஆடும்போது
சோதியாய் அருகில் நிற்கும்
சுந்தரியே! நீயே! அன்றோ
தீதிலாது உலகைக் காக்க
திருநடம் புரியும் ஈசன்
காதணி குண்டலங்கள் ஆட
கரங்கள் பொறியை ஏந்த
பாதியாய் அருகில் நிற்கும்
பவள மா மேலியாளே!
சோதியே சுடரே ஈசன்
சுந்தரப் பேரெழிலே
மேதினி வியந்து போற்ற
மெய் மறந்து அபயமென்றாய்
ஏதிலியான எம்மைக் காக்க
ஏனம்மா இனித் தயக்கம்
ஆதியாய் உலகில் வாழ்ந்த இனம்
அழிந்து பட்டழியலாமோ
சோதனை இனியும் வேண்டாம்
தேர் ஏறி அருள் புரிவாய் தாயே!

- விகடகவி

### நாகபூஷணியே வருக வருகவே!

கங்குல் பகலாய் கத்தும் கடலாட சூழ்ந்திலங்கு
பெரு வீதியில் அருளாட
பொங்கும் அரவாட பொன்னிழைப் பீடமாட
அம்மையோடு அப்பனாட
திங்கள் முகமாட திருப்பொலி விழிகளாட
குங்குமம் சேர் நுதலாட
தொங்கு குடையாட தோள் மருவு சிகையாட
முத்துமணி மௌலியாட
சங்குக் கழுத்தாட வண்ணமலர்ச் சரங்களாட
வானாடும் தேவராட
செங்கையில் வளையாட சேவடிச் சிலம்பாட
ஈரேழு புவனமாட
ஓங்கு புகழாட ஒப்பில்லா மறையாட
திக்காளும் எண்மராட
தங்கத் தமிழாட தாய் மண்ணின் சீலமாட
மெய்யன்பர் குழாமாட
எங்கும் நிறை பரி பூரணிக்கு ஏற்றினோம் நெய் விளக்கு
உயிரில் கலந்துறையும் அன்னையாய்
மங்கையரின் காப்பரணாய் மனுக்குலத்தின் விழுப்பொருளாய்
தொல்லுலகில் பூத்த மூத்தவளே
தெங்கினியநீராய் தேனாய் பாகாயினிக்கும் தெய்வமே
புண்சுமப்பார் நெஞ்சங்களாறி
மங்க எம் கொழிக்கும் வாழ்வெய்த மங்களமாய் தேரேறி
நாகபூஷணியே வருக வருகவே!

- கந்த தியாகராசா
ஆலடி வீதி, கோண்டாவில்

### அகிலத்து நாயகியே!

நயினையம்பதி நாயகியே
நவகோணம் ஆள்பவளே
கெஞ்சிடும் அடியாரின்
குறைதீர்க்கும் உத்தமியே
வெஞ்சமர் முடிந்தபோதும் - எம்
வேதனை தீரவில்லை
கடத்தலும் களவும்
'கொடி' அறுப்பும் கொலையும்
பிஞ்சுகளைக் கடத்தி
பிணமாக்கும் கழுகுகளும்
மிஞ்சியே விட்டாரம்மா
பஞ்சமா பாதகங்கள்
அஞ்சாமல் செய்கின்றார்
அஞ்சி அஞ்சி வாழும்
அவல வாழ்வதனை
அகற்றிட வழி காண்பாய்
அகிலத்து நாயகியே

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு.

## தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி

''பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலாலன்னை எக்கலையும்
கொற்றதாலன்னை உலகொடு வாழும்
தொழுதலாலன்னை என்றென்றும்
பற்றதாங்கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்''

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மீது நயினை வரகவி நாகமணிப் புலவர் பாடிய பாடல் இதுவாகும்.

நீர்வளம், நிலவளம், அருள்வளம், பொருள்வளம், கல்வி வளம், அன்னதான வளம் என்பன ஒருங்கே அமையப் பெற்றது நயினாதீவு என்னும் அழகிய திருப்பதியாகும். நற்றவ வானிலும் நனி சிறந்த இத்திருப்பதியில் வரலாற்றுச் சிறப்பும், பழைமையும் வாய்ந்ததுமான அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் உள்ளது. தன்னை நாடிவரும் அடியார்களுடைய துன்ப துயரங்களையெல்லாம் தனது அருட் கடாட்சத்தால் நீக்கியருளுகின்றாள் அன்னை. அன்னையின் மணியோசை அகிலமெல்லாம் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. அடியார்கள் அம்பிகையின் மீது அளவற்ற பக்தி கொண்டு, பெரும் திரளாக நயினையம்பதியில் கூடுகின்றார்கள்.

அம்பிகையின் இவ்வருட மகோற்சவம் 12.06.2010 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிச் சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா பல்லாயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் சிறப்பாக நடைபெறுகின்றது. சிறந்த சிற்ப வேலைகளுடன் கூடிய அழகிய திருத்தேரிலே அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளி விநாயகப் பெருமான் முருகப் பெருமான் திருத்தேர்களுடன் வீதி யுலா வருவதைக் காணக் கவலைகள் எல்லாம் பறந்தோடும்.

இக்காட்சியைச் சொல்லோவியமாக வர்ணிக்க முடியாது. நேரில் சென்று அம்பிகையைத் தரிசித்தால் தான் அம்பிகையின் மகத்துவம் விளங்கும். இந்த நம்பிக்கையில்தான் இந்நாளில் அடியார்கள் தங்களின் பிரயாணக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாது திரள் திரளாக நயினையம்பதிக்குச் செல்கின்றார்கள்.

அம்பிகையின் திருத்தேர் மிகவும் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் சரித்திர வரலாறுகள் பல இத்திருத்தேரில் செதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகப் போர்த்துக்கீசன் கோயிலை இடித்தல், அப்பொழுது நயினாதீவு மக்கள் அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஒரு ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல், அம்பாளின் தேர் கடலுக்குள் உருண்டு சென்றது.'நயினாப்பட்டர்''என்ற அந்தணர் அம்பிகைக்குப் பூசை செய்தது போன்ற பல சான்றுகள் தேரில் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகள் அம்பிகையின் மகத்துவத்தை அடியார்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அம்பிகையின் திருத்தேர்விழாவில் கலந்து அருள் வெள்ளத்தில் மூழ்கி அன்னையவளின் அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆறாத பக்தியினால் அடியார்கள் கவரப்பட்டு நயினையம்பதியில் சப்பரத் திருவிழாவன்றே பெருமளவில் கூடுவார்கள். அன்று இரவு முழுவதும் அம்பிகையின் சப்பரத் திருவிழாவினைக் கண்டுகளித்து நல்லருளைப் பெற்று, தேர்த்திருவிழாவன்று அன்னை பராசக்தியை நேரில் கண்டு அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொள்வார்கள். தேர்த்திருவிழாவன்று காலையிலும் பெருமளவில் அடியார்கள் கூடுவார்கள். எவ்வளவோ துன்பங்களின் மத்தியிலும் பிரயாணக் கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாது தன்னை நாடிவருகின்ற அடியவர்களின் வேண்டுதல்களை ஏற்று அருள்பாலிக்கின்றாள் அன்னை. அடியவர்களின் ''அரகரோகரா'' சத்தம் வானைத் தொட்டு நிற்கும்.

அன்னையென அனுதினமும் அடியார் போற்றுகின்ற அம்பிகையைத் தரிசிக்க வருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு '' அமுதசுரபி'' அன்னதான சபையினர் அன்னதானம் வழங்குகின்றார்கள். அம்பிகையின் அருளும் சுரக்கின்றது. அன்னதான சபையில் அமுதும் சுரக்கின்றது. வருடந்தோறும் இதன்சேவை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வன்னதான சபைக்கு ''அமுதசுரபி'' என்ற பெயர் சூட்டியவர் பேரறிஞர் கி.வா. ஜெகத்நாதன் அவர்கள். அன்னதான சபைக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமான ''அமுதசுரபி'' என்றும் பெயர் பொருத்தமானதாகும். அட்சயபாத்திரம் பொலிவு பெறுவது போல் இவ் அமுதசுரபியிலும் அள்ள அள்ளக் குறையாமல் அமுது பெருகிக் கொண்டேயிருக்கிறது.


நயினை நாக.குமாரசூரியர் J.P

### அருள்புரிவாயம்மா....!

அழகின் சொருபியே
நயினை வாழும் தேவியே
அல்லலுற்று வந்திருக்கும் மக்களின்
துன்பங்களைத் தீர்த்து
அவர் தம் வாழ்வு வசந்தமாய் மாற
அருள் புரிவாயம்மா...!

மகேந்திரலிங்கம் நிரோஷனா
தென் கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010



காவலுக்கு நீயன்றி எமைக்காக்க யாருண்டு?...

வெளிநாட்டிலிருந்து WESTERN UNION MONEY TRANSFER மூலம்

பணம் அனுப்பிப் பணப்பரிமாற்றம் இலக்கம்
(MTCN 10 இலக்கங்கள்) கிடைத்து ஒருசில
நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க

MMBL **Money Master**

# SRI MURUGAN



**TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**
NO. 303 K.K.S.ROAD, JAFFNA.
T.P.021 222 2670, 5392, Hot Ling 0777427182, Fax 021 222 3214
e.mail:- Srimurugan@eurekare.lk

**நல்லாசி தந்திடம்மா....!**

நயினையில் தேரேறும் நாயகியே
நாடி உன் சந்நிதி வந்தோம்-எம்
சங்கடங்கள் தீர்த்து நல்வாழ்வு
எமக்கிங்கு தந்திடம்மா

தமிழர்தம் துயர் துடைத்து
தரணியில் தலை நிமிர்ந்து வாழ்ந்திட
அலையோசை மத்தியில் அருளாட்சி நடத்திடும்
நயினை நாயகியே நல்லாசி தந்திடம்மா - கவி








நயினைத் தாயே! எம் துயர் போக்கிட தேரேறி வந்திடம்மா!!

# ஜுவல் பிளாசா

91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.





தேரேறிவந்து வினை அறுத்திடுவாய் அன்னையே!!

பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும்
பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

# ஜெகன் களஞ்சியம்

இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே: 021 222 5035

தேரேறி வந்து இன்னல்கள் அறுத்திடுவாய் தாயே!



அசல் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையாக நாடுமிடம்

# சிறி மீனாட்சி தங்க மாளிகை

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 6109.

சித்திரத் தேரினிலே சிங்காரப் பவனி வந்து எம் துயர் போக்கிடுவாயம்மா!




உங்கள் இடங்களை உங்கள்
எண்ணம் போல் வண்ணமயமாக்குவதற்கு பூசுங்கள்

**Multilac Paints**

பிரதேச வாரியாக உள்ள எமது **Colour Bank** களில்
பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

# கந்தவேலன் ரேடர்ஸ்

இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2822



சீர் பொலி நயினையில் சித்திரத் தேரேறும் தாயே
கருணை பொழிவாய் காசினி சிறப்பதற்கே!

நவநாகரிக நவீனமய ஆடைகள், புத்தம் புதிய
சாறி வகைகள், நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதி சிறந்த உன்னதமான இடம்




# மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

இல.10, 11, POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA.
(மலாயன் கபே முன்பாக) T.P: 021 222 9399



**MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR**

தேர் ஏறிப் பவனிவரும் திருசூலி நயினைவளர் தாயே..! தீராயோ எங்கள் துயர்?



World's No 1

தரமான நவீன கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார
இலத்திரனியல் பொருள்களை கொள்வனவு செய்திட

# Abans

நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச
விநியோகசேவையைப் பெற்றிட

# Midea Electro Mart



LG Authorized Dealer for **Abans** Ltd.

No: 1-1, 1-H, Stanley Road,
Jaffna, SriLanka.

e-mail: midea21@gmail.com

T.P: 021 222 4566, Fax:021 222 1646.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010


காவலுக்கு நீயன்றி எமைக்காக்க யாருண்டு தாயே?

ACL CABLES Fire Guard

நியூரோன் எலக்ரிக்கல்



440,442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2037.

அலைகடல் ஓரத்திலே வீற்றிருக்கும் நயினைத் தாயே! எம் துயர் போக்கிட தேரேறி வந்திடம்மா!!

V.S.P ஸ்ரீ ஐபிஸ்

பரிமளா ஸ்ரோர்ஸ்

உணவுத் தேவைகளுக்குச் சுத்தமாகத் தயாரிக்கப்படுகிறது

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2224135, 2229165.

நயினையில் உறைகின்ற தாயே! தேரேறிவந்து வினை அறுத்திடுவாய் அன்னையே!!

அற்புதா ரேடிங் கொம்பனி, மல்ரிப் பிளேஸ்

சகலவிதமான ஆடம்பரப் பொருள்கள், துவிச்சக்கரவண்டி அதன் உதிரிப்பாகங்கள் வீட்டுத் தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் உபகரணங்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

198, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

காவலுக்கு நீயன்றி எமைக்காக்க யாருண்டு தாயே?

RG இரத்தினகோபால்ஸ்

63,65, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

யப்பானியத் தொழில்நுட்பத்துடனான ஒரேயொரு இந்திய தயாரிப்பிலான மோட்டார் சைக்கிள்

HERO HONDA World No. 1 Two Wheeler Company

தேரேறி வந்து இன்னல்கள் அறுத்திடுவாய் தாயே!



அசல் 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

ஆசைப்பிள்ளை

அன்சன் நகைமாடம்

இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

அலைவந்து தாலாட்டும் அருள் நயினை தன்னில் அமர்ந்திருந்து அடியவர்க்கு அருள்புரியும் தாயே!

சகலவிதமான மின்சார இலத்திரனியல் உபகரணங்களை அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையுடன் பெற்றுக்கொள்ள

LG JAFFNA ELECTRICAL



No: 04, New Market, Chavakachchri.
T.P: 0213008702


141, Power House Road, Jaffna.
T.P: 021 222 4566, 5766.

Authorized Dealer for Abans

94 (6), Stanley Road, Jaffna.
021 222 2353

Cool Line: 0777723258


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010

### அதிகாரத் தீர்வைப் பெற அருளம்மா!

வேப்பிலைக் காரியாம் வேதங்களின் தலைவியே
வேண்டுவோர் வரங்களை விநயமாகித் தருபவளே
நாகத்தின் நிழலில் நயந்துறையும் எழில் நாயகியே
நயினையில் கோயில் கொண்டெமை ஆளும் நாகம்மாவே

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பிகையே
அமுத சுரபியாய் அன்னமும் அருளும் வாரி வழங்கும் அபிராமியே
ஆண்டாண்டு காலம் தீர்வின்றித் திண்டாடும் ஈழத்தமிழருக்கு
ஆத்தாளே அதிகாரத் தீர்வுபெற விரைந்து அருளும்மமா தாயே

- மட்டுவில் சிவம்


இருளினை அகற்றி ஒளியேற்ற தேரேறி வாரீரம்மா!
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள்
யாவும் நியாய விலையில்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஆர்.வி.ஜி.மருந்தகம், பீடிகள்
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222129
R.V.G. ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே 222 6606

நிலையில்லா இவ்வாழ்வில் நின்றுழலும் எம்மை நீவந்து காப்பாய் நாகபூசணித் தாயே!

அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்க நகைகளை உங்கள்
எண்ணம் போல் தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்கு தருபவர்கள்
நிரஞ்சனந்தா ஜுவல்லறி
இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2227985

அலைகடல் ஓரத்திலே வீற்றிருக்கும் நயினைத் தாயே! எம் துயர் போக்கிட தேரேறி வந்திடம்மா!!
இன்றைய நவநாகரிக பாதணிகளின் தரமான தெரிவுகளுக்கு
தனிச்சிறப்பு பெற்ற ஒரே ஸ்தாபனம்
நாதன்ஸ் சூ பலஸ்
இல.17, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சப்பாத்துக்கள், உடுப்புவகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றிட
அபிராமி மல்ரி சென்ரர்
இல.127/3, யுப்ளி பசார்,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222858, 0776615973

ஆண்டாண்டு காலமாய் அழுது அல்லல்படுகின்றோம் தாயே! அந்த முகாரி இராகங்களை உன் திருச்செவிக்கு எட்டவில்லையோ அம்மா!
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
சிறி மதனா நகை மாளிகை
இல.155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:2227772
மதனா ஜுவல்லறி
இல.177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 2225526


தேடிவரும் அடியவரின் குறைகண்டு தீர்ப்பவளாம் அன்னை நாகபூஷணித் தாயே...
நவீன தொழில்நுட்பத்தில் என்றும் ரம்மியமான அசல் 22 கரட் தங்க நகைகளிற்கு...
ஸ்ரீலக்சுமி ஜுவல்லறி
162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், 0212229440, 0777038772



Manufacturers of Gold Jewels
இன்னல்கள் போக்கிட எம் தாயே எங்களைக் காத்திடத் தேரேறு தாயே!
கிருஷ்ணா நகை மாளிகை
Krishna Jewellary
கிளை நிறுவனம்:
கிருஷ்ணா அடகு கடை
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5046

அலைகடல் நடுவே கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அம்பிகையே! உன் அருளை வாரி வழங்கிடுவாய் தாயே!!
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்கநகைகளை உங்கள் எண்ணம்போல தெரிவு செய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்குத் தருபவர்கள்.
மிகப் பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்
பொ. அம்பலவாணர் நகை மாளிகை
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010



### நம்மவரை காத்திடம்மா!

கோயிலிடத் துச்சியிலே அம்மா உன்
கொடியசைந்து நிற்கையிலே
வாயிலிலே வான் அதிரும் - அந்த
வலை கடலின் ஓசையிலே
கூவிடத்து குழாங்களுமாய்
குதூகலிக்கும் குழந்தைகளும்
ஆலயத்தை அரவணைக்க - அங்கே
ஆர்ப்பரித்து வருகின்றார்

ஓரிடத்து ஓடங்களும்- அதில்
உன் பெயரைப் பாடிவர - அதன்
பாலிடத்துப் பக்தரெல்லாம்- உடன்
பரவசமாய் ஏறிநிற்க
சீரிடத்து சிரம் நாடி- நாக
பூஷணியை நாடிவர- அம்மா
காரிடத்து இருள் போக்கி
கண்ணியமாய் கருணை கொள்வாய்

தீவிடத்து தீபமதாய் - தாயே
திரியோடு தீண்டி நிற்க- நயினை
நாகிடத்து நாரணியாய்-மாதா
நம்மவரைக் காத்திடவே
நாகமதன்மேலிருந்து- நாக
நயினையதன் குலவிளக்காய்
நாதியற்று நாடிவரும் - அந்த
நல்லவரைக் காத்திடம்மா!

சுகந்தினி முருகேசு,
அச்சுவேலி தெற்கு.




தேரேறி வருவாய் அம்மா நாகபூஷணி
தேசநலன் காத்திடம்மா நாகபூஷணி!

அசல் 22 கரட் நிரம்பிய நவீன
வண்ணங்கொண்ட தங்க நகைகளை உங்கள்
எண்ணம் போல் தெரிவுசெய்து
நீங்கள் விரும்பும் தினத்தில்
உங்களுக்கு தருபவர்கள்


**சாருகா**
**நகைமாடம்**

200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நயினையிலே கோயில் கொண்ட நாயகியே! நாயகிக்கு நாயகியாய் நாம் வணங்கும் அபிராமியே!!

**சிங்கப்பூர் ஜுவல்லறி**
**SINKAPOORE JEWELLERY** றெடிமேட் நகைக்கான சாம்ராஜ்யம்

இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 4590260



நாகபூஷணியே உன் பாதம் சரணடைந்தோம்! காத்திடுவாய் எந்நாளும் நீயே!!

**சிறி நதியா டிஜிற்றல் கலர்லாப்**
**வீடியோ & ஸ்ரூடியோ**



லக்ஸன் பிளாஸா கட்டடம், 108 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412



அலைகடல் ஓரத்திலே வீற்றிருக்கும் நயினைத் தாயே! எம் துயர் போக்கிட தேரேறி வந்திடம்மா!!


**செல்வி நகை அகம்**

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில்
உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

(தாம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 2229441





தேர் ஏறிப் பவனிவரும் திருசூலி நயினைவளர் தாயே..! தீராயோ எங்கள் துயர்?

**சாரங்கா நகை மாடம்**

T.P.No: 222 6972,8917,2480.
Fax. No: 222 8869

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இணைநிறுவனம்:
**சாரங்கா ஜுவல்லறி**
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11
55, SEA STREET, COLOMBO - 11. TEL: 2434971. FAX: 0112434071

உயிர்மட்டும் உள்ளிருக்க உள்ளதெல்லாம் நாமிழந்தோம்
கருணையுடன் நீயணைப்பாய்! கரம் கூப்பி உனைத் தொழுதோம்.


நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

**சிறி சிவாஞ்சனா நகையகம்**

இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010






தேரேறிவந்து இன்னல்களை அறுத்திடம்மா!

சகல விதமான கட்டடப் பொருள்களை
நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## ரமணன்




## கட்டடப் பொருள் விற்பனை நிலையம்

525, 528, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9296




நயினையில் உறைகின்ற தாயே! தேரேறிவந்து வினை அறுத்திடுவாய் அன்னையே!!

மிதிவண்டிகள், மிதிவண்டிகளின் உதிரிப்பாகங்கள் ரி.வி. றேடியோ
மற்றும் மின்சார பிளாஸ்டிக் பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ESP

## இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 3096





ஆண்டாண்டு காலமாய் அழுது அல்லல்படுகின்றோம் தாயே
அந்த முகாரி இராகங்கள் உன் திருச்செவிக்கு எட்டவில்லையோ அம்மா!

## TRACTOR SPARES

**Importers and Dealers in Tractor Spare Parts, Specialist in Massy Ferguson Engineers & Tipping Course Preserpipe fitting.**

*Prop:-V.R.Rajasingam, T.P.021-2225055. 7,Kannathiddy Road,Jaffna.*

நாகத்தின் நிழலில் நயந்துறையும் நயினை நாயகியே! நாடிவரும் அடியவரின் வினைகள் தீர்க்கும் நாகம்மாளே!!

DHL WORLDWIDE EXPRESS

## யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ருபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ருபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

### திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

குடாநாட்டில் முகவர்கள் தேவை

### TCN EXPRESS

2B, Nelsan Place, Colombo -06

நையினையிலே கோயில் கொண்ட நாயகியே!
நாயகிக்கு நாயகியாய் நாம் வணங்கும் அபிராமியே!!

## ரிக்கணேஷ்



மூக்குக் கண்ணாடி அகமும்
பல் கட்டுமிடமும்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486

கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.86, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.



தேர் ஏறிப் பவனிவரும் திருசூலி நயினைவளர் தாயே..!
தீராயோ எங்கள் துயர்?

மொத்த,சில்லறை விற்பனையாளர்

## ஏகாம்பரம்
## புடைவை மாளிகை

(72), 9, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தேர் ஏறிப் பவனிவரும் திருசூலி நயினை நாயகியே! தீராயோ எங்கள் துயர்!

தரமான சைக்கிள்,
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
மிக மலிவாகவும்
பெற்றுக்கொள்ள



## வெங்கடேஸ்வரா

இல.125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8306 , பக்ஸ்: 021 222 8306.

நயினைத் தாயே எம் துயர் தீர்க்க தேரேறிவா!

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

## றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
*Colombo 12, T.P 0777277670*
அனைத்துப் பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 25.06.2010





### ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் வரலாற்றுச் சிறப்புகளை நோக்குமிடத்து கலிங்கை சிங்கை ஆரியன் (1215-1240) யாழ்ப்பாணத்து அரசனாக இருக்கையில் அவனுடைய சிறிய இராசதானியான நல்லூரைப் பாதுகாக்கும் நோக்குடன் வீரமாகாளி அம்பாள் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாகவும் வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அக்காலத்தில் இவ்வாலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக் கலன்களைக் கொலுவின்போது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தனர்.

இதற்கு சான்றாக சில வருடங்களின் முன்னர் சங்கிலியன் மன்னன் பயன்படுத்திய பட்டாளத்து வாள் மானம்பூ உற்சவத்தின்போது கன்னி வாழையை வெட்டப்பயன்படுத்தினர்.

இத்தகைய வரலாற்று சிறப்புக்களை கொண்ட இவ்வாலயம் தற்போது பரம்பரை பரம்பரையாக சைவக் குருமார்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையிலே முதன்முதலில் மஹிசாசுர சம்ஹாரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு.

வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம் ஆனது யாழ்நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

ஆலயத்திற்கு அழகு சேர்க்கும் வகையில் இரு மருங்கிலும் அழகிய மணிக் கோபுரங்களும் சப்த தளங்களைக்கொண்ட இராஜகோபுரமும் அமைந்து காணப்படுகின்றன. ஆலயத்துக்குள் புகுந்ததும் அடியார்களின் கண்ணைக் கவரும் வண்ணம் கொடித்தம்பம் காட்சியளிக்கின்றது.

ஆதிமூலம் என்னும் கர்ப்பக் கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள கிலா விக்கிரகம் கருணாம்பிகை வடிவ முள்ளது அதாவது அம்மூலவிக்கிரகமானது மகிடாசுரமர்த்தினி எனவும் அழைக்கப்படுகின்றாள். தேவ சபையில் எட்டுகையுடன் காளியம்பாள் சிங்கத்தின் மீது அமர்ந்து காட்சியளிக்கின்றாள். மகோற்சவ காலத்தின்போது எழுந்தருளி விக்கிரகமாக நான்கு கையுடன் கூடிய வீரமாகாளி தரிசனம் தருகின்றாள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், கஜவல்லி, மகாவல்லி சமேத சுப்பிரமணியர், சனீஸ்வரன், வைரவப் பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர்.

அம்பாளின் ஆலயத்தில் மிகச் சிறப்பான சித்திர வேலைப்பாடுகளையுடைய வாகனங்கள் பல காட்சியளிக்கின்றன. இவ்வாலயத் தேரானது வரலாற்று சிறப் பினைக் கொண்டது. அதாவது யாழ்ப்பாண தமிழ் சிற்பாச் சாரியார்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட தனித் துவச் சிறப்பினைக்கொண்டு விளங்குகின்றது. இவ்வாலய மானது அன்று தொடக்கம் இன்றுவரை சைவக் குருமார் பரம்பரையினரால் பரிபாலிக்கப் பட்டும் நித்திய பூசைகள் நடத்தப்பட்டும் வருகின்றன.★★★

### முதன்மை பிரதம குருவின் அருள் ஆசி

யாழ்ப்பாணத்தை அழகு செய்யும் பொருட்டு நான்கு திசைகளிலும் நாகர்காவல் தெய்வங்களை ஸ்தாபித்தான் சங்கிலிய மன்னன் அதிலே மேற்குத் திசையில் வீரத்தை வேண்டி அன்னை வீரமாகாளியின் கோயிலைக் கட்டுவித்தான். மிகவும் பழைமையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயமானது தற்பொழுது மிகவும் அழகு பொருந்திய கலைக் கோயிலாகக் காட்சிதருகின்றது. இப்புனித திருத்தலத்திலே விகிர்த்தி வருஷத்தில் இன்றைய தினம் அம்பாள் தேரேறி நிற்கிறாள். இப்புனித நாளிலே இவ்வுலகத்தில் வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் அன்னையின் தொண்டர்களுக்கும், அடியார்களுக்கும் எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாள் அருள் பாலிக்க வேண்டுமென அன்னையைப் பிரார்த்தித்து அருள் ஆசி கூறுகின்றேன்.



*"வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்"*
*"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"*
*சிவாச்சார்ய இளவரசு, சக்தி கிரியா வியாசர்*
**சிவஸ்ரீ சி. கமல்ராஜ் குருக்கள்**
*(மேற்படி ஆலய முதன்மை பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்)*

### "தேசநலன் காத்தருள தேரேறி வருகிறாள் வீரமாகாளி"

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மாள் இன்று (2010.06.25) வெள்ளிக்கிழமை தேரேறி தேசமக்களின் நலன்காக்க வாளேந்தி வருகின்றாள். யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாகவும் வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அக்கால்த்திலிருந்து அம்பிகையின் ஆலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாக்களில் தங்கள் படைக்கலகன்களைக் கொலுவின் போது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாச்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தார்கள்.



இத்தகு வரலாற்றுப் பெருமைகளோடு நல்லூர் இராசதானியின் காவல் அரசியாக வீரமாகாளியம்பாள் விளங்கினாள். வேண்டுவார் வேண்டும் வரமீய்ந்து வீரசக்தி தருபவள் அவள். இன்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தேர்வடம் பற்ற சங்காரநாயகியாக மல பந்தங்களை ஆன்மாக்கிடத்தில் போக்கியருள தேரேறி வருகின்றாள்.

அன்னையின் பாதக்கமலங்களைப் பணிவோம். அவலத்தால் வாழும் எம்மினத்தின் விடிவுக்காகத் தாயை வேண்டுவோம். அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம். தேர்விழாவில் கலந்து அவளருள் பெற அனைவரும் பிரார்த்திப்போமாக.

மதுரகவி காரை எஸ்.பி
அருளானந்தன். J.P

### விழாச்சிறப்புற வாழ்த்துவோர்:


**நல்லைநாதன்**
இரும்புத் தொழிலகம்
திருநெல்வேலிச்சந்தி,
திருநெல்வேலி.

**யாழ்.நகரில் வஜிதா**
சைக்கிள் சேவிஸ் மற்றும் திருத்தகம்
நாவலர் விதியில் புகையிரதத் தண்டவாளத்துக்கு அருகில் அமைந்துள்ளது.
இல.512, கே.கே.எஸ்.விதி, மனோகராச் சந்தி யாழ்ப்பாணம். உரிமையாளர்:
வசந்தன் தொ.பே.0779670441.

அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்:
**சிறீமீனாட்சி தங்க மாளிகை**
187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 6109.

**A/L** கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.
**NEC**
தரம் 1முதல் O/L வரை சிறப்பாக நடைபெறுகின்றன.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

மங்களகரமான நிகழ்வுகளை உங்கள் எண்ணம் போல நடத்திட
(கதிரைகளுடனும் பல்பொருள் அங்காடியுடனும் கூடிய)
திருமுருகன் திருமண மண்டபத்தின் பதிவுகளுக்கு முந்துங்கள்.
0217201523,0776660211
கரந்தன் வீதி, நீர்வேலி.

**City Link Mobiles**
Whole Sales & Retail
Sales Phones &
Accessories &
Repairing
Contact No -0778424015
0779919555
email : clmobiles09@gmail.com
370, Point pedro Road, Anaipanthi, Jaffna.

**சிறி நதியா நகை மாளிகை**



01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222709
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2226744

**வெங்கடேஸ்வரா VENKADESWARA**
General Merchants, Commission Agents & Importers
Dealers in Lumala, Hero Miss India, Asia Cycle, Cycle Accessories
Phone :- 021 222 8306 Fax :- 021 222 8306
125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
125A, 127, Kasthuriyar Road, Jaffna.

**கிருஸ்ணா நகை மாளிகை**
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: கிருஸ்ணா அடகு கடை,
370,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பாள் வெதுப்பகம்**
252,254, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



**அம்பாள் மரக்காலை**
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**ADVANCED TECHNOLOGY SOLUTIONS**
**Computer Sale and Service**
அதி நவீன சகலவிதமான கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை மிகக் குறைந்த விலையில் நீண்டகால உத்தரவாதங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.
கணனியில் ஏற்படும் அனைத்து விதமான பழுதுகளும் உரியமுறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
Advanced Technology SolutionsNO-370,Point Pedro Road, Jaffna.
T.P 0213207295, mob 07737794465

**ராணி மரக்காலை**
இல.85,
வீரமாகாளியம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: சி.திருச்செல்வம்



**ஆறுமுகம் சிற்பாலயம்**
காளி அம்பாள் வீதி,
திருநெல்வேலி.

**ஜெனன் பனை மரக்காலை**
உரிமையாளர்
ந. மதியழகன் (கண்ணன்)
140, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



Dr. Mrs. Yogini Shanmuganathan
Diploma in High-tec Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Diploma in Home Economics (Sri Lanka)
**YOGI'S BEAUTY**
No. 14, Ebenizer Place, Dehiwala North, Tel : 060 215 0731, Yogisbeauty@yahoo.com
No., 75, Amman Road, Nallur, Jaffna, 021 222 2796, 060 221 0077
Hotline : 0777 164 923


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

சூசைப்பிள்ளை ஜெவர் ரவீந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (723624142V) யும், மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தைச் சேர்ந்த எனது உத்தியோக அடையாள அட்டையும் சாவகச்சேரிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- கச்சாய் வீதி, சாவகச்சேரியில்
(றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) தொடர்பு கொள்ளவும்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல 2132 திகதி 23-06-2010

ஆங்கில எழுத்திற்கும் X

வெற்றி எண்கள் **32 43 47 57**    போனஸ் இல: **69**

ஜக்பொட் பரிசு ரூ. **10,480,850/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 184995 | 20/- | 3,699,900/- |
| 2 இல | 13269 | 100/- | 1,326,900/- |
| 3 இல | 274 | 1,000/- | 274,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7353 | 40/- | 294,120/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 524 | 1,000/- | 524,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,480,850/- | - |
| 1 இல + போனஸ் இல | 8887 | 100/- | 888,700/- |
| 2 இல + போனஸ் இல | 405 | 500/- | 202,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 279 | 200/- | 55,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,810,420/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 216035 | | 9,410,420/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 202019430-7-15 |
| நுவரேலியா | 202013082-5-16 |
| கண்டி | 202013004-7-05 |
| கேகாலை | 202016097-5-44 |
| மொணராகலை | 202009937-8-24 |
| கண்டி | 202013072-9-39 |
| மட்டக்களப்பு | 202015775-3-31 |
| காலி | 202019499-4-17 |
| கொழும்பு | 202014349-6-47 |
| அம்பாந்தோட்டை | 202013503-4-17 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 10,985,425/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜூன் 26 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
## பாண், பணிஸ் வகைகளின் புதிய விலைகள்

இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை தொடக்கம் பாண், பணிஸ் வகைகளுக்கு புதிய விலைகள் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

| விபரம் | புதிய விலைகள் |
|---|---|
| 01 றாத்தல் பாண் (450 கிராம்) | 42.00 |
| 01 சோடி கிறீம் பணிஸ் | 24.00 |
| 01 சோடி ரீ பணிஸ் | 22.00 |
| 01 சங்கிலி பணிஸ் | 22.00 |
| 01 கொம்பு பணிஸ் | 14.00 |
| 01 அடைக் கேக் | 20.00 |

என்பதை விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி/568657]
த.துரைரஞ்சன் செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பீடத்தின் இரண்டாவது பீடாதிபதியாகவும் உடற்கூற்றியற் தலைவராகவும் விளங்கிய பேராசிரியர்

**இரகுநாதர் கனகசுந்தரம்**

அவர்களது மறைவால் மிகுந்த மனவேதனை அடைகிறோம்.

அன்னார் எமது பீடத்திற்கும் உடற்கூற்றியற்றுறைக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைகளை நினைவுகூர்வதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மருத்துவபீட ஆசிரியர் சங்கம்,
மருத்துவபீடம், கொக்குவில். [99836]

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வோல்ரன் பிளேஸில் அமைந்துள்ள 3½ பரப்பளவுள்ள காணியும், கட்டிய குறையில் உள்ள வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: செல்வவினாயகம் அருளகம்
லூர்த்து மாதாலேன், தும்பளை, பருத்தித்துறை.

021 3212573
தும்பளை-077 6648754
கொழும்பு-077 5074749

## ஞானக்குழந்தை பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ்.பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் வருடாந்த 18 ஆவது விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் திருமதி கிருபாகரன் சுபாஜினி தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரனும் கௌரவ விருந்தினராக பாலர் கல்விக்கழகச் செயலாளர் திருமதி தெ.இரத்தின கோபாலும் கலந்துகொள்வர். (201)

## 'ஞானச் சுடர்' சஞ்சிகை வெளியீடு இன்று

வடமராட்சி,ஜூன்25

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருணகிரிநாத சுவாமி விழாவும், 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் 150ஆவது இதழ் வெளியீட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அருணகிரிநாதர் விழாவில் சிறப்புச் சொற்பொழிவை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும், திருப்புகழிசையை வில்லிசைக் கலைஞர் கந்தசத்தியதாசனும் வழங்குவார்கள்.

யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் அருணகிரிநாதர் விழா இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுக் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மிக சஞ்சிகையின் ஆனிமாத 150 ஆவது இதழ் வெளியீட்டு விழா இடம்பெறும்.

இந்த வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை பிரம்ம ஸ்ரீ கு.தியாகராஜக் குருக்களும், மதிப்பீட்டுரையை ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.நவரத்தினமும் நிகழ்த்துவார்கள். (50-236)

## பருத்தித்துறை சனசமூக நிலையங்களின் ஒன்றியம் விரைவில் அங்குரார்ப்பணம்

வடமராட்சி,ஜூன்25

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து பருத்தித்துறை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் ஒன்று புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

சமாச அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் சசந்திரயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின்தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சனசமூகஅபிவிருத்தி உத்தியோகத்தரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார். அத்துடன் சமாசத்திற்கான உத்தியோகத்தர் தெரிவும் இடம் பெறும். (50-236)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் திரு.வ.சிவகணேசன் அவர்களின் செல்வப் புதல்வி செல்வி

**வேதாரணி சிவகணேசன்**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி/568653]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **தம்பிராஜா பாலகிருஷ்ணன்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
திதி: சதுர்த்தசி

மண்ணில் 13★04★1926
விண்ணில் 16★06★2008

பாரினிலே பார்க்கத் துடிக்கின்றோம் அப்பாவை
பாசத்திற்கு இலக்கணமான எங்கள் தந்தையை
பரிதவிக்கின்றோம் பிரிவைத் தாங்க இயலாமல்
பரமனை வேண்டுகின்றோம் ஆத்ம சாந்திக்காக

சவனாய், பருத்தித்துறை. [சி/568274]
திருமதி பா.ரட்ணமலர் (மகள்).

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 27 • 05 • 1921



இறைவன் அடியில் 05 • 07 • 2009

சிற்பாசாரியார்
**சரவணமுத்து கணேசமூர்த்தி**

வட்டுகிழக்கு,சித்தங்கேணி
திதி : 25.06.2010

சிற்பக்கலையில் சீர்பெற்றுயர்ந்து சிந்தைகவரும்
சிற்பங்கள் செய்து தெய்வச் சிலைகள் பற்பல
புனைந்து புகழ் மணம் பரப்பி நாடு கடந்தும்
கலைவடித்து பாராட்டால் உயர்ந்த பெருமையால்
மறைந்தும் மறவா மாண்பினராகி விட்டீர். மக்கள்
செல்வம் மனநிறைவாகப் பெற்று எக்காலமும்
அழியாக் கல்வியையும் எமக்குத் தந்து நேரிய
வழியில் நிறைமனத்தோடு வாழவைத்தீர்கள்.
நினைப்பும் விழிப்பும் எம்தந்தையே என்று
எங்கள் இதயம் நெகிழ்கின்றதே.

குடும்பத்தினர்.

## 12 ஆவது பிறந்த தினமும் 34ஆவது மாத நினைவஞ்சலியும்

செல்வன் கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)

(தரம் 4 மாணவன் யா/இணுவில் இந்துக் கல்லூரி)

அன்னை மடியில் 25.06.1998
பரமன் அடியில் 30.08.2007



அன்பு என்று பெயர் வைத்தோம்
அழுவதற்கா நாம் வைத்தோம்
பன்னிரெண்டாம் அகவையிலே
உன் முகம் பார்க்க முடியவில்லை
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் கிழக்கு, இணுவில் (99819)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையமொன்று கடந்த திங்கட்கிழமை திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் வங்கிக் கிளையை ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்று அதிகாரி இ.தியாகராசா நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதற்படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வங்கியின் திருநெல்வேலிக்கிளை முகாமையாளர் ரி.அருணன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும், வங்கியின் கொடுக்கல் வாங்கல்களை வங்கியின் நிறைவேற்று அதிகாரி வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பதை இறுதிப்படத்திலும் காணலாம். (50-16)

# பதவியுயர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் திறந்த பல்கலைக்கழகத்தை அதிகாரிகள் பயன்படுத்த வேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் உமா குமாரசுவாமி உரை

யாழ்ப்பாணம்,ஜூன்25

அரச உத்தியோகத்தில் உள்ள அதிகாரிகள் தமது பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு திறந்த பல்கலைக்கழகத்தைச் சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசுவாமி.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவும் திறந்த பல்கலைக்கழக தின நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வுகளும் நேற்று முன்தினம் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் உமா குமாரசுவாமி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் திறந்த பல்கலைக்கழகம் என்பது இச்சமூகத்துக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். எனவே இதன் மூலம் இச்சமூக மக்கள் பயன் பெற்று கல்வியில் சிறந்தவர்களாக வர வேண் டும்.

அத்துடன் வெறுமனே ஒரு பட்டத்தை மாத்திரம் பெற்றுவிட்டுச் செல்ல வேண்டும் என்று எண்ணாது மேலதிக பட்டங்களைப் பெற்று தமது பதவிகளை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மிகப் பெரிய சிரமத்தின் மத்தியில் யாழ்.திறந்த பல்கலைக்கழகத்துக்கு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இதற்காக எனது சேவைக் காலத்தில் நான்கு வருடங்கள் பெரும் சிரமப்பட்டுள்ளேன். எனவே அனைவரும் இதை உரிய முறையில் பயன்படுத்திப் பயன் பெறவேண்டும் - என்றார்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் உபாலி விதான பத்திரன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் திறந்த பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திறந்த பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத்தைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங் கைத் திறந்த பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசுவாமி திறந்து வைத்தார். (எ-16)

# 'அறவாழ்வின் அச்சாணிகள்' நாளை மறுதினம் வெளியீடு

நெடுந்தீவு,ஜூன்25

நெடுந்தீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி பி.எம்.ஜே.அன்ரன் எழுதிய 'அறவாழ்வின் அச்சாணிகள்' நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். அடைக்கலமாதா ஆலய மண்டபத்தில் பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

வண.பிதா போல் சகாநாயகம் அடிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலின் முதல் பிரதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் பெற்றுக்கொள்ளுவார். யாழ். மறை மாவட்டக் குழு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்,யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வண. பிதா ஜீ.பாலேந்திரன், வைத்திய கலாநிதி திருமதி யா.யோகேஸ்வரன், ஆசிரியர் இரா. தர்மரட்ணம் நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அ.வெ.அரியநாயகம், நாளினி கிஷோக்குமார், ஆசிரியர் அ.நிரஞ்சன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். (50-111)

# யாழ். தொழினுட்பவியல் கல்லூரிக்கு பிரதி அமைச்சர் மஹிந்தானந்த விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

இளைஞர் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் மகிந்தானந்தா அளுத்கம யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் பி.சுந்தரலிங்கத்தை சந்தித்துக் கலந்துரையாடியனார்.


இந்தக் கலந்துரையாடலின் நிறைவில் யாழ்.பிறவுண் வீதியில் யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரி வளாகத்துள் புதிதாக நிர்மாணிக்கப்புட்டுள்ள வடமாகாணத் தொழில் நுட்பவியல் கல்லூரியின் கட்டடத் தொகுதியினையும் பிரதி அமைச்சர் பார்வையிட்டார்.

கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத் தொகுதியின் ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்து அதனை விரைவில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதி அமைச்சர், கல்லூரிப் பணிப்பாளரிடம் உறுதியளித்தார்.

அத்துடன், கட்டடத் தொகுதி யினைப் பூர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொலை பேசியூடாக இலங்கைத் தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களப் பணிப்பாளருக்கு, பிரதி அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை -

கடந்த நான்காம் திகதி இந்தக் கட்டடத் தொகுதியினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கத் திட்டமிட்டிருந்தபோதிலும், குறித்த கட்டடப் பணிகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக அதனைத் திறந்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு கல்லூரியின் முன்னைய நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும். இந்த நிலையில் இனியும் கால தாமதத்தை ஏற்படுத் தாது அந்தக் கட்டடத் தொகுதியினை திறந்து வைப்பதற்கு என்னாலான ஒத்துழைப்புகளை வழங்குவேன் என கல்லூரி மேலதிக பணிப்பாளர் பி.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (எ-14)




# பண்டத்தரிப்பு - கீரிமலை வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில்

ஆனைக்கோட்டை,ஜூன்25

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் விளான் சந்தி முதல் சேந்தாங்குளம் சந்தி வரையான பகுதி மிக மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலம் திருத்தப்படாத வீதி போன்று கவனிப்பாரற்றுக் கிடப்பதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் அடிக்கடி பிரயாணம் செய்யும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பெரும் சிரமத்துக்கு ஆளாவதாகவும் அடிக்கடி சிறு சிறுவிபத்துக்களும் நிகழ்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுத்து உடனடியாக இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-20)

# போலி ஆயிரம் ரூபா புழக்கத்தில்! பொது மக்களே உஷாராயிருங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாள்களாகப் போலி ஆயிரம் ரூபா தாள்கள் புழக்கத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில வங்கிக் கிளைகளில் வர்த்தகர்களால் வைப்பிலிடப்பட்ட ஆயிரம் ரூபா தாள்களுடன் போலி தாள்களும் அடங்கியிருந்தமை வங்கி இயந்திரங்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியிடப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் படம் பொறித்த ஆயிரம் ரூபா தாள்கள் போன்று போலித் தாள்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

சாவகச்சேரி வங்கியொன்றில் இதுவரை மூன்று போலி ஆயிரம் ரூபா தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (50-207)

# வரைபடத் திரட்டல் நிறைவடையும் நிலையில்

நாவற்குழி,ஜூன்25

கிராம அலுவலர் பிரிவுகளின் வரைபடங்களை பெற்றுக் கொள்ளும் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியிருப்பதாக குடித்தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்காக குடித்தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் ஊழியர்கள், பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கிராம அலுவலர்கள் மூலம் இவ்வரைபடங்கள் பெற்றுக் கொண்டதாக தெரிவித்துள்ளனர். இதன் மூலம் இனிவரும் காலங்களில் கிராம அலுவலர்களின் நிர்வாக எல்லைகளையும், ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் உள்ளடங்குகின்ற முக்கியமான இடங்களையும் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-121)

# முன்பள்ளி ஒன்றிய அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகள் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் செல்வி வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (எ-207)

# மணியந்தோட்டத்தில் மீளக்குடியமர ஆர்வம் காட்டும் அப்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்25

கொழும்புத்துறை மணியத்தோட்டம் பகுதியில் தற்போது மக்கள் மீளக்குடியமர்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

முதலாம் குறுக்கு மற்றும் மூன்றாம் குறுக்குப் பகுதிகளில் தற்போது 6 குடும்பத்தினர் மீளக்குடிமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசங்களில் யுத்தத்தினால் பெரும்பாலான வீடுகள் அழிவடைந்துள்ளன. இதனால் மக்கள் சிறிய சிறிய கூடாரங்களை அமைத்தே இப்பகுதியில் மீளக்குடிமர்ந்துள்ளனர்.

மேலும் சிலர் மீளக்குடியமர ஆர்வமாக உள்ளபோதும் அவர்களுடைய வீடுகள் உடைந்துள்ளமையால் மீளக்குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெட்டைவெளியாகக் காணப்படும் இப்பிரதேசத்தில் மக்கள் தமது காணிகளைக் கண்டுபிடித்து வேலிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிகண்டி கந்தவனம் கல்யாணவேலவ சுவாமிகோயில்
# தேர்த்திருவிழா சிறப்புமலர்



## மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



மூர்த்தி தலம் தீர்த்தம் முறையே அமையப் பெற்ற கந்தாரணியப் பதியிலே வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் கருணாமூர்த்தியாக அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற சண்முகப் பெருமானுடைய விகிர்தி வருஷ் ஆனி பூரணையைத் தீர்த்தமாகக் கொண்ட பதினைந்து தின மஹோற்சவத்தில் பதினான்காவது நாளாகிய இன்று ரதோற்சவ தினத்தை முன்னிட்டு ஆறு முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக ரதத்தில் அமர்ந்து வரும் காட்சி மிகவும் சிறப்புடையதாகும்.

அண்டசராசரங்களையே அருளாட்சி செய்யும் முருகப் பெருமான் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு ஐந்தொழில்களைப் புரிகிறார். அந்த வகையிலே அழித்தல் தொழிலைக் குறிக்கும் இன்றைய தினத்திலே அன்பர்களின் மீது கொண்ட பெருங்கருணையினால் மும்மலங்களை அழித்து அருள் புரிய ரதத்திலே வீதி வலம் வருகிறார்.

தேர்த்திருவிழா காண்பது ஒரு பேரின்பம், இன்று மக்கள் வெள்ளம் கரை புரண்டு வடம் பிடித்து தேரை இழுத்து மகிழ்ந்து திருவருளில் திளைப்பார்களா?

'சர்வே ஜன சுகினோ பவந்து'

சுபம்

சிவப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்கள்
(தேவஸ்தான பிரதம குருவும் மஹோற்சவ குருவும்)





மணி NET.COM
நெல்லியடியில்...
உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய Inter Net மூலம் முகம் பார்த்துக் கதைக்கும் வசதி உள்நாட்டு, வெளிநாட்டு தபாற்பொதி சேவை குறைந்த செலவில் மற்றும் அனைத்து நாடுகளுக்குமான பணப்பரிமாற்றமும்.
மத்தியமகா வித்தியாலய வீதி, நெல்லியடி. 021 2264877


## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டில் மிகவும் புராதனமாக பிரசித்தி பெற்ற எண்ணற்ற முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன. இவற்றிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களும் ஒருங்கே அமையப்பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியில் இயற்கை எழில் நிறைந்த சூழலில் அமைந்துள்ள "பொலிகண்டி கந்தவனக் கடவை'' முருகன் ஆலயம்.

இவ்வாலயம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முந்திய பழமை வாய்ந்தது. இங்குள்ள தீர்த்தம் - நறுநீர்க்கேணி, தலவிருட்சம் - வன்னிமரமாகும். இத்தீர்த்தக் கேணியில் ஆதிகாலத்தில் கற்பூரம் விளைந்ததாகக் கூறப்படுகின்றது. நோயுற்றவர்கள் இந்நன்னீரை உண்டு நீராடினால் அவர்களுக்கு நோய் நீங்குவது கண்கூடாகும். இவ்வாலயம் முனிவர்கள், சித்தர்கள், யோகிகளால் வணங்கப்பட்டு அவர்கள் வாழ்ந்த இடமாக சிறப்புப் பெற்றது.

1940ஆம் ஆண்டிற்கு முன்பு மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம் என்பன வைரம் பொழிகற்களால் கட்டப்பட்டன. இவ்வாலயத்தின் தேர் 150 வருடங்கள் பழமை வாய்ந்த கட்டுத்தேராகும். தினமும் ஐந்து காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் பிரதி வெள்ளிக்கிழமைகள், ஒவ்வொரு மாதக் கார்த்திகைத் திருவிழா, வைகாசி விசாகம், மானம்பூ உற்சவம், தைப்பூசம், மாசிமகம் போன்றவற்றிற்கு சிறப்புப் பூசைகளுடன் சுவாமி உற்சவமும் நடைபெறும். ஆலய மஹோற்சவம் ஆனி மாத அமாவாசையில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 14ஆம் நாள் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆனிப்பௌர்ணமி அன்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

வரலாற்று இலக்கியச் சிறப்புற விளங்கும் கந்தவனக்கடவை தேர்த்திருவிழா சிறப்புற நிகழ எல்லாம் வல்ல கந்தப் பெருமானின் தாள்பணிந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

## ஆதீன கர்த்தாவின் ஆசியுரை



ஈழத்தில் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப் பெற்றதும் மிகவும் பழைமையான சிறப்புப்பெற்ற ஆலயமுமாக எமது பொலிகண்டி கந்தவனம் கல்யாணவேலவ சுவாமி கோயில் சிறந்து விளங்குகின்றது. இங்கு நடைபெறும் ஆனிமஹோற்சவத்தில் தேர்த்திருவிழா காலாதி காலமாகச் சிறப்புப் பெற்றது. மிகவும் பழமையான தேரில் வள்ளி தெய்வானை சமேதரராக ஆறுமுகப் பெருமான் எழுந்தருளுவது தேவலோகத்திலும் காணமுடியாத அழகிய காட்சி. இத்திருக் காட்சியினை நாமெல்லோரும் கண்டு மும்மலங்களில் வலிதான ஆணவமாய் உட்பட்ட அனைத்து மலங்களையும் அழியப் பெற்று அருள் பெறுவோமாக.

சி.இராமநாதன்


Tknel Computers & Technology
# 364/ 364 Kodikamam Road, Nelliady
T.P.: 021 3210384, Mobile : 077 7069934
e.M@il - teknelpc@Gmail.com

Libert Motor House
Dealers in motor spares
Kodikamam Road, Nelliady
T.P.: 021 2263233

புளூஹெவன்
நீச்சல் தடாகத்துடனான்
உல்லாச விடுதி
இல.70, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
021 2229958, 077 6139898

கிளை நிறுவனம்
புளூ ஹெவன் சிற்றி இன்
விருந்தினர் விடுதி
இல.166, முதலாம் குறுக்குத்தெரு
தொலைபேசி இல:
021 222 3721, 021 222 9727


# மின்பாவனை குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மின்சார பாவனையாளர்களுக்கு அறிவுறுத்தவென இலங்கைப் பொது ஆணைக்குழு விநியோகித்த சுவரொட்டிகள் தற்போது கிராம அலுவலர்களின் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதில்-

பொதுமக்களின் மின்சாரப் பட்டியல் எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகின்றீர்களா?

நீங்கள் செலுத்தும் மின்சாரக் கட்டணம் தொடர்பாக பிரச்சினைகள் உள்ளதா?

வீட்டில், தொழிற்சாலையில், வியாபார தளத்தில் மின் இணைப்பில் பாதுகாப்பற்ற தன்மை நிலவுகின்றதா?

உங்கள் புதிய மின்சார இணைப்புக்காகப் பணம் செலுத்தியும் மின் இணைப்பு கிடைக்கவில்லையா?

உங்களது மின்பாவனை தொடர்பான ஏதேனும் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வுகள் கிடைக்கவில்லையா? என்ற வினாக்கள் கேட்கப்பட்டு அவற்றுக்கான பதில்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மின்சாரப் பாவனை தொடர்பாக மக்களிடம் இருந்து வந்த பல சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-121)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த
ஆனந்தகுமார் - சுசீத்தா
தம்பதியினரின்
செல்வப் புதல்வன்
கனிஷ்டன்
இன்று (25.06.2010)
வெள்ளிக்கிழமை தனது
முதலாவது பிறந்த தினத்தை
தனது இல்லத்தில்
கொண்டாடுகின்றார். இவர்
விஷ்ணுவின் அருளால் சகல
செல்வங்களையும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
மனதார வாழ்த்துகின்றோம்.

சித்தப்பா - சிவா
சித்தி - கவிதா

2 ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(இ/568634)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கான போட்டி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் 100ஆவது ஆண்டு விழா நடைபெறும் (26.06.2010) அன்று கல்லூரி தொடர்பான (கல்லூரி வரலாறு அதிகளவில் இடம் பெறும்) குறுவினா - விடைப் போட்டி நடத்தப்படும். விழாவுக்கு சமுகமளிக்கும் பழைய மாணவர்கள் யாவரும் பங்கு கொள்ளவும். வெற்றியாளர் முதல் மூன்று பேருக்கு வெகுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

தலைவர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம்.

(இ/565645)

# ஆலய வழிபாடு என்றும் மனஅமைதி தரவல்லது

எங்கும் பரந்து விரிந்து பரவியிருக்கும் இறைவனின் திருவருளைக் குவித்துத் தரும் இடமாக ஆலயங்கள் மிளிர்கின்றன. சூரியனுடைய கதிர் எங்கும் பரவியிருந்தாலும் ஒரு வில்லையைப் பயன்படுத்தித்தான் நாம் நெருப்பைப்பெற முடியும். சூரியக் கதிர்களை ஓர் இடத்தில் குவியச் செய்வதற்கு அக்குவிவு வில்லை பயன்படுவது போல் இறைவனுடைய திருவருளைப் பெற ஆலயங்களும் சிவாச் சாரியர்களும் அங்கு நடைபெறும் கிரியைகளும் அவசியமாகின்றன. ஒரு சூரியனிடமிருந்து ஒரே நேரத்தில் எத்தனையோ இடங்களில் வில்லையைப் பயன்படுத்தி நெருப்பைப் பெற முடிவது போல் ஓர் இறைவன் அருளை ஒரே சமயத்தில் பல ஆலயங்களில் பெற முடியும்.

ஞானக்கதிர்

அவ் இறைவ னின் திருவருள் ஞானாக்கினியாக மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராக எம்மை வந்தடைகிறது. ஆலயம் இறை ஒளி பரப்புகின்ற இடம் என்ற காரணத்தால் தேவஸ்தானம் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றது.

ஆன்மா இறைவனது அருள் ஒளியில் தன்னை லயப்படுத்திக் கொள்ளும் இடம் ஆலயம் எனப்படுகிறது. கோயில் இல்லாத ஊரில் இலட்சுமி வாசம் செய்ய மாட்டாள் என்பதை "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்'' என அப்பர் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். மீண்டும் மீண்டும் பிறவிப் பிணியில் பிறந்து இறந்து உழலும் ஆன்மாக்கள் தொடர்ந்தும் பிறவாமல் நிலை பெற்ற பேரின்பத்தைப் பெறவேண்டுமானால் ஆரம்பத்தில் செய்யப்பட வேண்டிய அடிப்படை சரியை நெறிகளையும் அப்பர் சுவாமிகள் தமது பாடல் ஒன்றில் எடுத்துக் காட்டுகிறார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோவில் புக்கும்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரைக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

.... என்ற பாடல் நாம் தினமும் கோயிலுக்குச் சென்று செய்ய வேண்டிய தொண்டுகளை எடுத்துக் கூறுகிறது.

தினமும் செய்ய முடியாவிடினும் பெருவிழாக்கள், விரத தினங்கள், வெள்ளிக்கிழமைகள் போன்ற நாள்களிலாவது தவறாமல் மேற்சொன்னவற்றை மேற்கொள்ள வேண்டும்.


திருமூல நாயனாரும்,




''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவனென்று பாடுமின்''

எனக் கோயில்கள் பலவற்றிற்குச் சென்று வழிபாடாற்றி ஞானத்தைப் பெற வேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார். எனவே ஆலயங்கள் பல இருந்தாலும் எமது ஆன்ம சுத்திக்கு அவை வேண்டியனவேயாகும்.

(நன்றி : நல்லைக்குமரன் மலர் -1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச ஒலிம்பிக் தினம் நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கொண்டாடப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கைப்பந்தாட்ட போட்டியின் சில காட்சிகளையும் ரைக்ஹொண்டோ அணியினரின் கராத்தேக் கண்காட்சியின் சில காட்சிகளையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: ரட்ணம், நேசன்)

# ஒழுங்கமைக்கப்பட்ட நேரங்களில் போட்டிகள் இல்லை;
# வீரர்களும் பொறுப்பாசிரியர்களும் பெரும் சிரமம்

யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெற்று வரும் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் திட்டமிட்டு உரிய முறையில் நடத்தப்படாததால் மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் ஒரே நாளில் மூன்று மாகாண மட்டப் போட்டிகள் வேறு வேறு இடங்களில் நடைபெற்றன. 15,19 வயதுப் பிரிவுகளுக்கான ஆண், பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் 19 வயதுப்பிரிவு ஆண், பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் 15,19 வயதுப்பிரிவுகளுக்கான ஆண், பெண்களுக்கான கரம் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெற்றன.

இப்போட்டிகளில் வடமாகாண மாவட்ட அணிகள் யாவும் பங்குபற்றின. வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த அணிகள், போட்டிகள் உரிய நேரத்தில் இடம்பெறாததால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காலை 8.30 மணிக்கு நடைபெறுவதாக இருந்த சதுரங்கப் போட்டிகள் பி.ப ஒரு மணிக்குப் பின்பே ஆரம்பமாகின. இதனால் ஏனைய போட்டிகள் ஆரம்பமாவதிலும் தாமதங்கள் ஏற்பட்டன. ஏனெனில் ஒரு போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் பலர் ஏனைய போட்டிகளிலும் பங்குபற்றியமையே. இதனால் ஒரு நாளில் நடத்தி முடிப்பதாகத் திட்டமிடப்பட்ட போட்டிகள் யாவும் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை.

போட்டிகளின் ஒழுங்கமைப்பின் போது ஏற்பட்ட சில தவறுகளே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதனாலேயே மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் பெரும் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இது விடயத்தில் கூடியளவு கவனம் எடுத்து செயற்பட வேண்டும் என்று மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-405)

## மாவட்ட மட்ட உதைபந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம் , ஜூன் 25

இலங்கை உதைப்பந்தாட்டப் சம்மேளனம் சமபோஷா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

யாழ்.மத்திய கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆண்களுக்கான போட்டிகளும் நாளை சனிக்கிழமை 8.30 மணிக்குப் பெண்களுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (6-14)

## வடமாகாணப் பாடசாலைகளின் கிரிக்கெட்
# யதுசந்தின் தொடர்ச்சியான சிக்ஸர்களால் சென்றலை வென்று வவுனியா தமிழ் மத்திய ம.வி.சம்பியன்!

வலி.வடக்கு, ஜூன் 25

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் வவுனியா தமிழ் மதிய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

யதுசந் ஒரு ஓவரில் தொடர்ந்து ஐந்து சிக்ஸர்கள் உட்பட 34 ஓட்டங்களையும் ரகுநந்தன் 2சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 16 ஓட்டங்களும் கிடைத்தன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெரிக் 2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் யதுசனன் 2 ஓவர்கள் பந்து வீசி 15ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிசோக், டார்வின் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

76 ஓட்டங்களை வெற்றி இலக்காக்கிக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 7 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன் 2 சிக்ஸர்களுடன் 16 ஓட்டங்களையும் டினேஸ் 13 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 8 ஓட்டங்கள் கிடைத்தன.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தேவதர்சன் 2 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் குமணன் 2 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் ரகுநந்தன் 5 பந்துகள் வீசி ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் சஜிதன் 2 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (6-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்





சர்வதேச ஒலிம்பிக் தின நிகழ்வையொட்டி நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு மாற்றுவலுக் கொண்ட மாணவர்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் சி.பி.ரட்னாயக்கா பரிசில்களை வழங்குவதையும்–

அருகில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ், யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க, வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை ஆகியோர் காணப்படுகின்றனர். வெற்றிபெற்ற இரு மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழி மாநாட்டு ஆய்வரங்கத்தை நேற்று ஆரம்பித்து வைத்தார் கலைஞர்

## நிகழ்வுக்குத் தலைமை வகித்தார் பேராசிரியர் சிவத்தம்பி



கோவை,ஜூன்25

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் 2ஆவது நாளான நேற்று ஆய்வரங்கத்தை முதல்வர் கருணாநிதி தொடக்கிவைத்தார்.

மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று ஆய்வரங்க நிகழ்ச்சிகள் தொடங்கின. மாநாட்டுச் சிறப்பு மலரை நிதியமைச்சர் அன்பழகன் வெளியிட, முதல்வர் கருணாநிதி பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சிக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமை வகித்தார்.

ஜோர்ஜ் ஹார்ட், 'கலைஞர் செம்மொழி விருது' பெறும் அஸ்கோ பர்ப்போலா, ஸ்வீட்மேன், கிறிஸ்டினா, கந்தையா, மாரிமுத்து, திண்ணப்பன், திருமலைச்செட்டி, அலெக்ஸாண்டர் துபியான்ஸ்கி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆய்வரங்கத்தைத் தொடக்கி வைத்து கருணாநிதி பேசுகையில் -

தமிழின் தொன்மை, தனித்தன்மை, செம்மொழித் தன்மை, திராவிடத் தொன்மைகள் ஆகியவற்றை அறிஞர்கள் ஆய்வு செய்ய வேண்டும். கிரேக்கம், ஜொர்மன் உள்ளிட்ட மொழிகளில் உள்ள ஆய்வுகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அது உலகமெங்கும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்கத்தை ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் - என்று மேலும் கூறினார்.

முன்னதாக நிதியமைச்சர் அன்பழகன் வாழ்த்துரை வழங்கிப் பேசினார்.

முதல்வர் கருணாநிதி தொடக்கவுரை நிகழ்த்துவதற்கு முன்னர் முதல்வர் கருணாநிதி மற்றும் பேராசிரியர் அன்பழகன், கா. சிவத்தம்பி, ஜோர்ஜ் ஹார்ட், அஸ்கோ பர்ப்போலா உள்ளிட்டோருக்கு கனிமொழி பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

விழாவில் பல நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் பங்கு பெற்று சிறப்பித்தனர்.

தமிழர்கள் இல்லாது தமிழ் இல்லை என ஆய்வரங்க நிகழ்ச்சிகளின் தொடக்க விழாவில் பேராசிரியர் கா.சிவதம்பி பேசினார்.

அவர் மேலும் கூறுகையில் -

தமிழ்ச் சமூகம் தொடர்பாக பல்வேறு அம்சங்கள் ஆராயப்பட வேண்டும். சமூக அமைப்பு, பண்பாடு, தமிழர்களின் நடைமுறை, உறவுமுறை, மத நம்பிக்கை, ஆகியவற்றில் நுணுக்கமாக ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். தொல்பீர் தமிழ்ச் செம்மொழி அது தோற்றுவித்த சமூகப் பண்பாடு துல்லியமாக ஆராயப்பட வேண்டும். திராவிட மொழியியல் ஆய்வில் இது முக்கியத்துவம் வாய்ந்தது - என்று தெரிவித்தார்.

**தமிழில் பேசினார் ஜோர்ஜ் ஹார்ட்**

ஜோர்ஜ் ஹார்ட் பேச எழுந்ததும் அவர் ஆங்கிலத்தில் பேசுவார் என அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் ஆச்சர்ய மூட்டும் வகையில் தமிழில் பேசினார். இதனைக் கேட்டு அரங்கத்தில் இருந்த அனைவரும் பலமாக கை தட்டிப் பாராட்டுத் தெரிவித்தனர்.

பின்னர் ஆனந்தகிருட்டிணன் பேசுகையில் -


தமிழ் மொழி வளர்ந்து வரும் சூழ்நிலையில் செம்மொழி மாநாட்டுடன் இணைய மாநாட்டையும் நடத்துவது மிகுந்த சிறப்புடையது - என்று தெரிவித்தார்.

குழந்தைசாமி கூறுகையில்-

வழக்கிலுள்ள ஒரு மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருப்பது பெருமைக்குரியது - என்று தெரிவித்தார்.



பேராசிரியர் சிவத்தம்பிக்கு நினைவுப் பரிசு வழங்கும் துணை முதல்வர்.....



மகாகவி பாரதியாரை போற்றும் வகையில் இடம்பெற்ற அலங்கார அணிவகுப்பு.

# செம்மொழி மாநாட்டையொட்டி இராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை

இராமேஸ்வரம்,ஜூன் 25

கோவை செம்மொழி மாநாட்டை முன்னிட்டு இராமேஸ்வரம் கடற்பகுதியில் மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

கோவையில் நடைபெறும் செம்மொழி மாநாட்டில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வதால் இவர்களது வருகையை முன்னிட்டு இராமேஸ்வரம் கடற்பகுதியில் வழக்கத்தைவிட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படையினர் 24 மணி நேரமும் ரோந்துப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கடற்படையின் ரோந்து ஹெலிகொப்டர்களும் கடல் மேல் வான்வழி கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் பாதுகாப்புக் கருதி நேற்று முன்தினம் இராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லத் தடைவிதிக்கப்பட்டது. இதனால் இராமேஸ்வரம், பாம்பன் மற்றும் மண்டபம் கடற்பகுதிகளில் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

அடுத்த உத்தரவு வரும் வரை படகுகள் அனைத்தும் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டன.

## இந்தியச் செய்திகள்

# 'ஐபா' போராட்டம் 'செத்துப்போன ஒன்று': சூர்யா கண்டுபிடிப்பு; சீமான் திடீர் 'பல்டி'!

## தமிழ் உணர்வாளர்கள் அதிர்ச்சி



சென்னை,ஜூன் 25

இலங்கையில் நடந்த சர்வதேச இந்திய திரைப்பட விழாவுக்கு எதிரான போராட்டம் செத்துப்போன விவகாரம். அதை மீண்டும் கிளறத் தேவையில்லை. இதன் அடிப்படையில், நானும் விவேக் ஓபராயும் நடித்துள்ள படத்துக்குத் தடை விதிக்க முடியாது - என்று சர்வ சாதாரணமாக கூறியுள்ளார் நடிகர் சூர்யா.

இதேவேளை, 'சூர்யா என் தம்பி. அவரது படத்தை மட்டும் மன்னிக்கலாம்' - என்று பல்டியடித்துள்ளார் இயக்குநர் சீமான்.

நேற்று வியாழக்கிழமை 'பெங்களூர் மிரர்' நாளிதழுக்கு சூர்யா அளித்துள்ள பேட்டியின் விவரம் வருமாறு -

கேள்வி - தடையை மீறி கொழும்பில் நடந்த ஐபா விழாவில் பங்கேற்ற விவேக் ஓபராயுடன் நீங்கள் நடித்துள்ள 'ரத்த சரித்திரா' படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதே?

பதில் - ஐபா விழா விவகாரமே செத்துப்போன ஒன்று. அதை இனியும் இங்கே பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அது ஒரு சின்ன விடயம். அதைப் போய் இன்னும் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறீர்களே. என்னுடைய 'ரத்த சரித்திரம்' வெளியீட்டை அந்த விழா தொடர்பாக விதிக்கப்பட்ட தடைகள் ஒன்றும் செய்து விடா.

'ரத்த சரித்திரம்' படப்பிடிப்பின்போது நான் விவேக் ஓபராயோடு பேசினேன். அப்போது யுனிசெப் மற்றும் அந்நாட்டின் உள்ளூர் தமிழர்களுடன் இணைந்து புதிய பாடசாலை ஒன்றை அமைத்திருப்பதாகச் சொன்னார். இந்த விடயத்தில் அவர் என்ன உதவி கேட்டாலும் செய்ய நான் தயாராக உள்ளேன். அவருடன் சேர்ந்து அந்தப் பணியைச் செய்ய விரும்புகிறேன்.

நடிகர்கள் இலங்கை சென்றது வெறும் கேளிக்கைக்காக அல்ல. அங்குள்ள மக்களுக்கு உதவத்தான். இந்தப் பிரச்சினை அன்றோடு முடிந்துவிட்டது. திரும்பத் திரும்ப அதை கிளறுவது ஏன்?

- இப்படி கேட்டுள்ளார் சூர்யா.

கொழும்பில் நடந்த சர்வதேச இந்திய திரை விழாவை தென்னகத் திரையுலகமே புறக்கணித்தது. வட இந்தியாவின் அமிதாப் பச்சன், அபிஷேக் பச்சன், ஷாரூக் கான், அமீர்கான், ஐஸ்வர்யா ராய் என முன்னணி நட்சத்திரங்கள் தமிழ் உணர்வாளர்களின் வேண்டுகோளை ஏற்று இலங்கை போகாமல் தவிர்த்தனர். இதையும் மீறி நடிகர்கள் சிலர் போனார்கள். அவர்களின் படங்கள் இனி தென்னிந்தியாவின் 5 மாநிலங்களில் திரையிடப்பட மாட்டாது என்று தென்னிந்திய திரைப்படக் கூட்டமைப்பு அறிவித்தது.

விழாவும் படுதோல்வியடைந்தது. இன்னொரு பக்கம் தடையை மீறி ஐபா விழாவுக்குப் போன விவேக் ஓபராய், சல்மான் கான், ஹ்ரித்திக் ரோஷன் ஆகியோரின் படங்கள் தென்னகத்தில் வெளியாகத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், சூர்யா நடித்து அடுத்து வெளியாக உள்ள 'ரத்த சரித்திரம்' தமிழ், ஹிந்திப் படங்களில் சூர்யாவுடன் விவேக் ஓபராய் இன்னொரு நாயகனாக நடித்துள்ளார். இந்தப் படத்தை வெளியிடக் கூடாது என தமிழ் உணர்வாளர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்து வருகின்றனர்.

ஐபா விழாவை எதிர்த்து மும்பையில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி அமிதாப் போன்றவர்களை விழாவுக்குச் செல்லாமல் தடுத்த சீமானின் நாம் தமிழர் கட்சி, 'ரத்த சரித்திரம்' வெளியாகும் விடயத்தில் மட்டும் அடக்கி வாசிக்கிறது.

'சூர்யா என் தம்பி. அவரது படத்தை மட்டும் மன்னிக்கலாம்' என்று பல்டியடித்துள்ளார் சீமான். ஆனால் உண்மையில் சூர்யாவும் அவரது தந்தை சிவகுமாரும் சீமானை சமாதானப்படுத்தி விட்டனர் எனக் கூறப்படுகிறது.

சீமானின் இந்தக் கொள்கை நழுவலுக்கு உணர்வாளர்கள் மத்தியில் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

# தனித்தெலுங்கானாவுக்கு சோனியா காந்தி ஆதரவு!

## மாநில காங். தலைவர் டி.ஸ்ரீநிவாஸ் தெரிவிப்பு

ஐதராபாத்,ஜூன்25

ஆந்திராவைப் பிரித்து தனித்தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க சோனியா காந்தி ஆதரவாக உள்ளார் - என்று அந்த மாநிலக் காங்கிரஸ் தலைவர் டி.ஸ்ரீநிவாஸ் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீகிருஷ்ணா குழு, தனித் தெலுங்கானாவை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

இந்தக் குழு தனது அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டால் தெலுங்கானா மாநிலம் உருவாவது நிச்சயம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தனித் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க சோனியா காந்தி ஆதரவாக உள்ளதால் தனித் தெலுங்கானா மாநிலம் உருவாவதற்கு நீண்டகாலமாகாது. தெலுங்கானா மக்களின் இந்தக் கனவு விரைவில் நனவாகவுள்ளது.

மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. இதனால் தனித் தெலுங்கானா மாநிலம் என்பதை காங்கிரஸ் கட்சியால் மட்டுமே அளிக்க முடியும்.

வரும் 27இல் நிஜாமாபாத் பேரவைத் தொகுதிக்கு நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் நான் போட்டியிடுகிறேன். இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெற்றால் எனக்கு பெரிய பதவி காத்திருக்கிறது.

அந்தப் பதவி அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். இதனால் எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்.

-இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மத்தியில் இன மோதல்களை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் உயர் கல்வி அமைச்சருக்கு மகஜர்

கொழும்பு, ஜூன் 24

தமிழ்-சிங்கள மாணவர்கள் மத்தியில் இன மோதல்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படும் தீய சக்திகள் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அவர் அனுப்பியுள்ள மகஜரின் முழு விவரம் வருமாறு:-

அண்மையில் அனைத்திலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சில நிவாரணப் பொருள்களை வழங்கும் பொருட்டு இங்கு வந்தபோது அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்குள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. இச்செயலைக் கண்டித்து அவர்கள் கருத்து வெளியிட்டமையும், யாழ். பல்கலைக்கழகம் எதிரறிக்கை விட்டமையும், பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தமையும், தென்னிலங்கை மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்புகளுக்கு வருத்தம் தெரிவித்து அறிக்கையை வெளியிட்டமையும் நடந்துமுடிந்த ஆனால், நடக்கக்கூடாத சம்பவங்களாகும்.

அனைத்து இலங்கையிலுமுள்ள மாணவர்கள் மத்தியிலும் ஓர் அந்நியோன்னியமான உறவு நிலவுவதும், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்குமிடையே ஒரு புரிந்துணர்வுடன் கூடிய ஐக்கியமும், ஒருமைப் பாடும் நிலவுவதும் மாணவர்களுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் நல்ல ஆரோக்கிய மான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை எவரும் மறந்துவிடமுடியாது.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும், மாணவர்களுக்குமிடையே காலம் காலமாக நிலவிவரும் சமூக உறவைச் சீர்குலைக்கவும், தென்னிலங்கை மாணவர்களுக்கும் எமது மாணவர்களுக்குமிடையே முரண்பாடுகளையும், மோதல்களையும் உருவாக்கவும் ஒரு சில தீய அரசியல் சக்திகளால் இவை திட்டமிட்டு நகர்த்தப்பட்டன என மாணவர்கள் மத்தியில் நிலவும் கருத்தை எவரும் இலகுவில் அசட்டை செய்துவிட முடியாது.

அனைத்திலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் அவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு அண்மையில் வைத்து ஆயுததாரிகளால் உயிரச்சுறுத்தல் ஏற்படும் வகையில் மிரட்டப்பட்டதும், தென்னிலங்கைப் பத்திரிகைகளில் அனைத்திலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தமையும் படுமோசமான உள்நோக்கம் கொண்டவையாகும். இவை சிங்கள, தமிழ் மாணவர்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஊட்டி மோதல்களை ஏற்படுத்தி ஐக்கியம் உருவாவதைத் தடுக்கும் கபட நோக்கம் கொண்டவை என்பதை எவராலும் புரிந்துகொள்ள முடியும்.

தங்கள் அதிகாரங்களையும், பதவிகளையும் தக்கவைப்பதற்குக் கப்பம், கடத்தல், கொலை போன்ற சம்பவங்களை நடத்திக்கொண்டே சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள அரசியல் தரப்புகளுடன் ஐக்கியப்பட முடியுமென்றால், பலவிதமான பாதிப்புக்கு உட்படுத்தப்படும் சிங்கள, தமிழ் மாணவர்கள் ஏன் ஐக்கியப்படக்கூடாது? ஏன் இவர்கள் இந்த ஐக்கியத்தைத் தடை செய்கின்றனர்? இன ஐக்கியம் என்பது ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் அவர்களை அண்டிப் பிழைப்பவர்களுக்கும் என்றளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வி இங்கு எழுகிறதல்லவா?

### உத்தரவிட்ட மேலிடம் எது?

தென்னிலங்கை மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் உட்புக அனுமதி மறுக்கப்பட்டபோது அது மேலிடத்தின் உத்தரவு எனக் காரணம் கூறப்பட்டது. அந்த மேலிடம் எது என்பதுதான் எவராலும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது.

யாழ். குடாநாட்டில் வெளிப்படையில் அரசியல் சக்தியாகவும், பின்புலத்தில் ஆயுத வன்முறையுடன் கூடியதாகவும் ஒரு மேலிடம் செயற்பட்டு வருவதை நாம் அறிவோம். அந்த மேலிடத்தின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட மறுப்பவர்கள் உயிரச்சுறுத்தல் உட்படப் பலவித மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டி வருவது தவிர்கமுடியாததாகும். இவ்வகையில் பல்கலைக்கழக நிர்வாகம் கூட விதிவிலக்காகிவிட முடியாதல்லவா? பல்கலைக்கழக நிர்வாகம் இப்படியான ஓர் அழுத்தத்திற்கு உட்படுத்தப்பட்டே சில நடவடிக்கைகளில் ஈடுபட்டது என மாணவர்கள் கருதுவதும் குறிபிடத்தக்கது.

எனவே யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தைக் குறைகூறிவிட முடியாது என்றபோதிலும் தமிழ், சிங்கள மாணவர்கள் மத்தியில் இன மோதல்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படும் தீய சக்திகள் தொடர்பாக அவர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் என்பது எங்கள் அன்பான ஆனால் உரி மையுடன் கூடிய கோரிக்கையாகும்.

இதேவேளையில், யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகத்திற்கும் ஒரு பெரும் பொறுப்பும் கடமையும் உண்டு. உலகின் பாரிய முற்போக்கான மாற்றங்களிலும் பல தேசங்களின் விடுதலையிலும் மாணவர்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அளப்பரியவை. கொடுமைகளுக்கெதிராகக் குரல் கொடுக்கவும் களமிறங்கிப் போராடவும் மாணவர்கள் என்றுமே பின்னின்றதில்லை.

இப்படியான சந்தர்ப்பங்களிளெல்லாம் யாழ். மாணவ சமூகத்தின் பெரும் பங்களிப்பை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

இவ்வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கட்டியெழுப்பப்பட்ட தமிழ்த் தேசிய உணர்வு வடக்கு, கிழக்கு எங்கும் வியாபித்து மக்களை அரசியல் நாட்டம் கொள்ள வைத்தமையை நாம் மறக்க முடியாது.

ஆனால், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட சில நெருக்கடிகள் காரணமாகவும், போர், இடப்பெயர்வு என்பனவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாகவும் எமது மாணவர்களின் வீச்சு சற்றுப் பலவீனப்படுத்தப்பட்டு விட்டது உண்மையாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் தம்மைத் தாமே ஐக்கியப்படுத்தி ஒரு பலம் வாய்ந்த சக்தியாக மேலெழவேண்டும். இந்த சக்தி பல்கலைக்கழக நிர்வாகத்திற்குத் தோள் கொடுத்து வெளியார் அழுத்தங்களுக்குப் பணிந்து போகாத ஒரு தென்பையும் துணிவையும் வழங்கவேண்டும். எமது மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுடனும் நெருக்கமான ஐக்கியத்தைப் பேணி ஒரு சுதந்திரமான தனித்துவமான ஒரு கல்விக் கூடமாக யாழ். பல்கலைக் கழகம் மிளிர்வதை உறுதிசெய்யவேண்டும்.

# வன்னியில் மீட்கப்பட்ட வாகனங்கள் கிளிநொச்சியில் இன்று கையளிப்பு

கொழும்பு, ஜூன் 25

வன்னியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட வாகனங்களில் அடையாளம் காணப்பட்ட 700 வாகனங்கள் இன்று கிளிநொச்சியில் அந்த வாகனங்களின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்த வாகனங்கள் திருத்தியமைக்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட பின்னரே கையளிக்கப்படுகின்றன என்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

திருத்தப்பட்ட 400 மோட்டார் சைக்கிள்களும் 300 சைக்கிள்களுமே இன்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித் தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு இவற்றைக் கையளிக்கவுள்ளனர்.

# நீதிபதிகளை குற்றவாளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலஞ்சென்ற சட்டத்தரணி எஸ்.ஆர்.கனகநாய கத் தின் உருவப்படம் நேற்று யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சட்ட நூலகத்தில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவி ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் தலைமையில் நேற்று மாலை 5.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், அமரர் எஸ்.ஆர். கனகநாயகத்தின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன், அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் புதல்வரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கனகஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், குடாநாட்டு நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், அமரரின் குடும்ப உறுப்பினர்கள், நீதிமன்ற ஊழியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

முன்னாள் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் நீண்ட உரையின் இறுதிப்பகுதியில் அவர் குறிப்பிட்டதாவது :-

Asia News என்ற ஊடகத்திற்கு, மனித உரிமைகள் பணியாளரும் சட்ட சமூக நம்பிக்கையகப் பணிப்பாளருமான ஒரு சிங்களச் சகோதரர் ருக்ஷன் பெர்னாண்டோ இன்று வடமாகாணத்தில் இராணுவ ரீதியான தாக்குதலுக்குப் பதிலாக கலாசார, மத ரீதியான தாக்குதல்கள் நடைபெறுவதாகவும் வடமாகாணம் சிங்கள மயமாதலை எதிர்கொண்டுள்ளது என்றும் கூறினார். அதுபற்றிய விவரங்களையும் கூறியிருந்தார்.

இப்பேர்ப்பட்ட ஒரு சூழலில் யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கலாசார சீரழிவு நடைபெற்று வருவதை நீங்களும் அறிவீர்கள். மேலும் தெற்கிலிருந்து வரைவின் மகளிர்கள் கொண்டுவரப்பட்டு எமது இளைஞர்களுக்கு வலைவிரிப்பதாகவும் கேள்விப்பட்டேன். அத்துடன் போதைப் பொருள்கள் கல்விக்கூடங்களுக்கு அருகில் விற்பனைக்கு விடப்படுவதாகவும் அறியக் கிடைத்தது. எமது சொந்த தமிழ் இரத்தங்களும் இப்பேர்ப்பட்ட சமூகச் சீரழிவு நடவடிக்கைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று கேள்விப்படும்போது மனதிற்கு வேதனை அளிக்கின்றது.

சமூகச் சீரழிவு நடவடிக்கைகளைத் துணிச்சலுடன் கண்டிக்க விழையும் அல்லது தட்டிக்கேட்கும் நீதிபதிகள் திடீரென இடமாற்றம் செய்யப்படுவது அதிர்ச்சியளிக்கின்றது. தமிழ் மக்கள் சொல்லொன்னா துயரங்களுக்கு ஆளாகி இனியாவது விடிவு காலம் வருமோ, சட்ட ஒழுங்கு நிலை நிறுத்தப்படுமோ, நீதி கிடைக்குமோ என்று அங்கலாய்க்கும் வேளையில் துணிச்சலுடனும் உண்மையாகவும் செயற்படும் நீதிபதிகளைக் குற்றம் புரிந்தவர்களைப் போன்று இடமாற்றம் செய்வது நீதித் துறைக்கு உகந்ததல்ல.

எனினும் இந்த அழிவிலிருந்து குடாநாட்டை மீட்பதற்கு சட்டத்தரணிகள், நீதிபதிகள் ஆகியோரின் ஒன்றிணைந்த, ஒருமித்த, ஒற்றுமைமிக்க, துணிச்சலான பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. நீங்கள் எல்லோரும் துணிந்து நின்று சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டி நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்பேர்ப்பட்ட வெளியார் தாக்குதல்களைச் சமாளிக்கலாம்.

உங்கள் நாடு; உங்கள் பிரதேசம்; உங்கள் கலாசாரம்; உங்கள் பாரம்பரியம் - இவை பறிபோகின்றன என்றால் நீங்கள் வாளாதிருக்கலாமா? பின்னணியில் வன்முறையைக் கையாள்பவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு அதிகாரத்தில் உள்ளவர்கள் துணைபோகின்றார்கள் என்று பயந்து சட்ட நடவடிக்கைகளைச் செய்யாது அல்லது எடுக்காது இருக்கக்கூடாது. எமது சூழலில் இன்று நடப்பவை நீதிமன்றங்களில் பிரதிபலித்தால்தான் வேற்று நாட்டவர் கூட அவற்றைக் கவனத்திற்கு எடுப்பர். எஸ்.ஆர்.கனகநாயகம் போன்றோர் இன்றில்லையே என்று வருத்தப்படுகின்றேன்.

எஸ்.ஆர்.கனகநாயகம் ஐயா நீதிமன்றில் கடைப்பிடித்த சிறப்பம்சங்களை அவரின் இந்த உருவப்படம் யாழ். சட்டத்தரணிகள் நூலகத்தில் இருக்கும் வரையில் அதைப்பார்த்துச் செல்லும் சட்டத்தரணிகள் நினைவுகூருவார்களாக.

✱ முதலில் தத்தமது அன்றைய வழக்கை முழுமையாகப் படித்துவருதல். மன்று அல்லது மறுகட்சி கேட்கும் எந்தக் கேள்விகளுக்கும் தயங்காமல் பதில் கொடுக்கும் பாங்கு அமைய வேண்டும். இதற்குச் சிறப்பான ஞாபகசக்தி இருப்பது அவசியம்.

✱ இரண்டாவது பரந்த பொது அறிவைப் பெற சட்டத்தரணிகள் முயற்சிக்க வேண்டும். ''கண்டது கற்கப் பண்டிதனாவான்'' என்பது சட்டத்தரணிகள் விடயத்தில் நூற்றுக்கு நூறு உண்மையாகும். பலதும் அறிந்திருந்தால்தான் எப்பேர்ப்பட்ட சாட்சியையும் குறுக்கு விசாரணை செய்து மடக்க முடியும். அத்துடன் பரந்த அறிவு இருந்தால் தான் நீதிபதிக்கு ஒரு விடயத்தைத் தெளிவாக எடுத்தியம்ப உதவி புரியும்.

✱ மூன்றாவது மன்றில் ஹாஸ்யத்தை உட்புகுத்தி எல்லோரையும் நெகிழ்ந்த ஒரு மனநிலையில் இருக்க வைத்தல்.

✱ நான்காவதாக எஸ்.ஆர். அவர்களின் அஞ்சாமையைக் கூறலாம். தொழில் என்று வந்தால் எவருக்கும் அஞ்சாது கடமையில் ஈடுபடுவார். இதனை இன்றைய இளைய சட்ட சமூகம் கவனத்திற்கு எடுக்க வேண்டும் - என்றார். (அ-50-9)



கொழும்பில் நேற்று குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் பகுப்பாய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேஸிலில் வெள்ள அனர்த்தம்: 41 பேர் பலி; ஆயிரம் பேர் மாயம்!



பிரேஸிலியா, ஜூன் 25

தென் அமெரிக்க நாடான பிரேஸிலின் வடகிழக்குப் பகுதியில் பெய்துவரும் கனமழையால், நதிகளில் வெள் ளப் பெருக்கெடுத்துள்ளது. வெள்ளத்தில் சிக்கி, 41 பேர் பலியாகியுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் அதிகமா னோர் தங்கள் குடியிருப்பு களை விட்டு வெளியேறி யுள்ளனர்.

பிரேஸிலின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அலகோவாஸ், பெர்னம்புக்கோ ஆகிய இரு மாநிலங்களில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் இரு மாநிலங்களிலும் உள்ள நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

பெர்னம்புக்கோ மாநிலம் முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. இரு மாநிலங்களிலும் உள்ள நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி தத்தளிக்கின்றன. வீடுகளின் கூரைகளும், தேவாலயங்களின் மணி கூண்டுகளுமே வெள்ளத் தின் மேற்பரப்பில் தெரிகின்றன. கூரைகளிலும், மணிக் கூண்டுகளிலும் மக்கள் ஏறிக்கொண்டு தங்கள் உயிரைக் காக்கப் போராடி வருகின்றனர்.

ஆயிரத்துக்கும் அதிகமானோர் வெள்ளத்தில் அகப்பட்டுக் காணாமல் போயுள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பேர் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர்.

பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனாகியோ லுலா த சில்வா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மாநிலங்களின் அமைச்சர்கள் அடங்கிய குழுவுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

அமரர் தனபாலசிங்கம் பரமேஸ்வரி



மௌனத்தில் உனைத்தேடுதம்மா
கண்ணீருடன் சங்கமித்தே...
மரணத்தின் கொடுமையை யாரிங்கு
வெல்வர்
பாசத்தை மறந்துவிட்டே
தருணத்தை வெல்லமுடியாத வாழ்க்கையே!
தவிக்கவிட்டு சென்றாயம்மா
பெருமைகொள் கணவனுடன் சுமங்கலியாய்
வாழ்ந்தே இன்புற்று
மறுமைக்கும் மக்கட் செல்வம் பிறப்புற
அன்புடன் அறிவூட்டிச் சென்றாயம்மா
அருமையிலும் அருமை எங்கள் அன்னையே!
தாய்மை எனும் பாசத்தின் வழிகாட்டியே
திருமாலின் பாதத்தில் திருப்பேறு பெற்றாய்
திருவுறைந்து வேண்டுவோம் உனைக்காலமெல்லாம்.

தோற்றம் 10.01.1940
மறைவு 26.05.2010

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கடந்த 26.05.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம் அமரர் தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.06.2010) சனிக்கிழமை காலை 6 மணியாளவில் அல்வாய் வடக்கு குச்சம் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சசிகை',
அல்வாய் வடக்கு (99908)
தகவல்:
குடும்பத்தினர்.


# இந்திய - பாக். பேச்சுகள் ஆரம்பம்

இஸ்லாமாபாத், ஜூன் 25

இந்தியா-பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இஸ்லாமாபாதில் நேற்று வியாழக்கிழமை சந்தித்துப்பேசினர்.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். இவர்களின் சந்திப்பைத் தொடர்ந்து குழு அளவிலான பேச்சுகள் ஆரம்பமாகவிருந்தன.

2008ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுடனான அமைதி பேச்சுகளை இந்தியா அடியோடு நிறுத்தியிருந்தது.

இந்நிலையில், மும்பைத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கத் தொடங்கிய பின்னர், கடந்த மார்ச்சில் மீண்டும் பேச்சுகள் ஆரம்பமாகின.

இதுவரை இரண்டு தடவைகள் இந்திய - பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செயலர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர். இந்நிலையில் 3ஆவது தடவையாக நிருபமா ராவ், சல்மான் பஷீர் ஆகியோர் நேற்று சந்தித்துப் பேசினர்.

2008ஆம் ஆண்டு மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்குச் செல்லும் முதல் மூத்த இந்திய அதிகாரி நிருபமாராவ் ஆவார்.

# ஆஸியின் முதல் பெண் பிரதமர்

கான்பெரா, ஜூன் 25



ஆஸ்திரேலியாவின் முதல் பெண் பிர தமர் பதவியேற்றுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் கட்சி ஆட்சியிலுள்ளது. கெவின் ரூட் பிரதமராக இருந்துவந்தார். கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கெவின் ரூட் பிரதமர் பதவியை இராஜிநாமா செய்தார்.

இதையடுத்து, புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க தொழிலாளர் கட்சி எம்.பிக்கள் குழுக் கூட்டம் நடந்தது. இதில் தற்போதைய துணைப் பிரதமர் ஜூலியா கில்லர்ட் புதிய பிரதமராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் நேற்று வியாழக்கிழமை மதியம் பிரதமராகப் பதவி ஏற்றுக்கொண்டார். ஆஸ்திரேலிய ஆளுநர் ஜெனரல் குயான்டின் பிரேசி இவருக்குப் பதவி பிரமாணம் செய்துவைத்தார். ஜூலியா கில்லர்ட் ஆஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமராவார்.

பிரதமர் பதவி ஏற்றது குறித்து இவர் குறிப்பிடுகையில், ''எனக்குக் கிடைத்த பெரும் கௌரவமாக இந்தப் பதவியைக் கருதுகிறேன். இந்த நாட்டை வழிநடத்திச் செல்ல நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது'' என்றார்.

''அடுத்த தேர்தலில் கட்சியை சிறப்பான இடத்துக்குக் கொண்டுவருவது எனது இலட்சியமாக இருக்கும்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.


மரண அறிவித்தல்

இருதயதாஸ் அன்ரன்குமார் (ஜெயக்குமார்)



புங்குடுதீவு, 11ஆம்.வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியை வதிவிடமாகவும் கொண்ட இருதயதாஸ் அன்ரன்குமார் நேற்று (24.06.2010) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தேன்மொழியின் அன்புக் கணவரும் அனோயா, அனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இருதயதாஸ்- காலஞ்சென்ற தெரேசா அந்தோனிமரியை தம்பதியரின் அன்பு மகனும் பீற்றர் சுரேஸ்குமார், குமாரி விக்ரறின், டயஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலன், காலஞ்சென்ற விஜயநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும் றூஸ்பா, பத்மநாதன், சிவறஞ்சினி, சிவதர்சினி, கயல்விழி, சங்கீதா, நிவேதா, விஜிதா, பிரதீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் யோகநாதன், உதயகுமார் ஆகியோரின் பாசமிகு சகலனும் சேபா, பிரியதர்சினி, துசிஸ்தாமேரி, பிரகாஸ், வெஸ்ரிலிற்றா ஆகியோரின் சிறிய தந்தையும் மரியடினிசியா, நிர்மலதாஸ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் காக்கைதீவு அடைக்கலநாயகி ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (99912)
தகவல்:
பீற்றர் சுரேஸ்குமார்
(சகோதரன்).

மரண அறிவித்தல்கள்

திருமதி இரத்தினம் பரமேஸ்வரி



காரைநகர், சத்திரந்தை களபூமியைப் பிறப்பிடமாகவும் வாரிவளவை வதிவிடமாகவும் நெல்லியடியை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம் பரமேஸ்வரி நேற்று (24.06.2010) வியாக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் முன்னாள் வர்த்தகர் பதுளை விநாயகர் ஸ்ரோஸ், இரட்ணம் ரெக்ஸ் ரைல்ஸ் நெல்லியடி வேலுப்பிள்ளை இரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலத்துறை கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் கணேசலிங்கம், சுந்தரலிங்கம், தியாகலிங்கம், சரோஜினிதேவி, விஜயலிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் பூங்குலரூபி, சிவனேஸ்வரி, புஸ்பராணி, தருமலிங்கம், துஷியந்தி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் கணதீபன், குமரன், கஜலக்சன், மயூரன், ஆரதி, அகீசன், அனுசூஜன், அருந்தசா, தனுசிகா, வித்தியா, வினோகரன், பிரணவன், சாதனா, ஸ்ரீ நாராயணி, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிமை மு.ப. 10 மணிக்கு காரைநகர், வாரிவளவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாரிவளவு, காரைநகர்.
T.P: 077 6170750 (99904)
தகவல்:
குடும்பத்தினர்.

மாரிமுத்து ஸ்ரீவிபுலானந்தன்
(இளைப்பாறிய கிளை முகாமையாளர், அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம்)



கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து ஸ்ரீ விபுலானந்தன் நேற்று (24.06.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி மாரிமுத்து - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேலும்மயிலும் - தனலட்சுமி தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நீலவேனி (கனடா), சத்தியதேவி, சந்தானலக்சுமி (ஆசிரியர், யா/குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை), காலஞ்சென்ற தினேஸ்குமார் மற்றும் பாரத்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாகர் (கனடா), கனகரத்தினம், விமலன் (ஜே.பி. -பிரதேச செயலகம், பச்சிளைப்பள்ளி, பளை) ஆகியோரின் அன்பு மாமனும் ஞானாம்பிகை (கனடா), காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் நவறோஸ், மகாராசா (கொழும்பு), றஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலிதெற்கு,
அச்சுவேலி. (99911)
தகவல்:
குடும்பத்தினர்.

சிதம்பரப்பிள்ளை கனகாம்பிகை



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கனகாம்பிகை (தங்கச்சியம்மா) 20.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-லக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவத்திரையம்மா, பவளம்மா, பாஸ்கரன், சரஸ்வதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ரவிமோகன் (டிங்கர்), காலஞ்சென்றவர்களான கண்ணன், செல்வமனோகரி, ஜேந்தினி, சுரேந்திரன் காலஞ்சென்ற ஞானேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வி, வசந்தா, சுப்பிரமணியம், சிறி, நிர்மலா, சமந்தா ஆகியோரின் அன்பு மாமியும் சுமதி, ரூபன், உஷா, பாலா, சாமினி, ரவி, நிமா, சங்கீதா, ரூபி, கீதன், சாருஷன், மயூ, சகிம், விசோத் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் கஸ்வினி, டிக்கா, நவீனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2010) வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுகால்மடம்,
பழம் வீதி,
யாழ்ப்பாணம். (99911)
தகவல்:
மோகன் (டிங்கர்)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகழ்பூத்த சட்டத்தரணி அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் திருவுருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைக்கும் நிகழ்வு யாழ்.நீதிமன்ற நூலகத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வீ.விக்கினேஸ்வரன் அமரர் எஸ்.ஆர். கனகரத்தினத்தின் திருவுருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள், அவரின் குடும்ப உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கவிநேசன்)

## இந்தியா, சீனா, பாகிஸ்தான் முதலீடு செய்துள்ளபோதும்
# காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைகளின் நிர்வாகம் தொடர்ந்து அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்
### தலைவர் தேமானி பரணகம நேற்றுத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைகளை மீள இயக்குவதற்கு இந்திய, பாகிஸ்தான், சீனா ஆகியநாடுகள் முதலீடு செய்துள்ளன. எனினும் அரசின் கட்டுப்பாட்டிலேயே தொழிற்சாலை நிர்வாகம் இருக்கும்.

இந்தத் தொழிற்சாலைகள் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்திருப்பதால் அவற்றை இயக்கும் வழிமுறைகள் தொடர்பாக அரச உயர்மட்டத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகவலை லங்கா சிமெந்து நிறுவனம், சிமெந்து கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர் தேசமானி எஸ்.கே. பரணகம வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அவர் இணுவிலில் உள்ள லங்கா சிமெந்து நிறுவன அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

சிமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் நிதி முதலீடு செய்கின்றன. எனினும் அதில் இலங்கை அரசின் நிதி முதலீடு 51 வீதமாக இருக்கும். எனவே இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலேயே அது இருக்கும். அதில் பணிபுரிவதற்கு எமது நாட்டு மக்களே பணியாளர்களாக இருப்பார்கள். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். காங்கேசன்துறையில் உள்ள 'ஹபர்வியூ' ஹோட்டல் 1983களில் இருந்து இலங்கை கடற்படையின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இலங்கை கடற்படையுடன் கலந்துரையாடி அதனை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன். ஒரு மாத காலத்தில் அதனை பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

லங்கா சிமெந்து நிறுவனம், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகிய இரு தொழிற்சாலைகளிலும் பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவுள்ளேன். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த இருபது வருடங்களாகக் கடுமையாகவும் நேர்மையாகவும் உழைத்த பணியாளர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவர்களின் ஒப்பந்த காலமும் அதிகரிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிலுள்ள எமது பணியாளர்கள் திருப்பத்தியான முறையில் தமது பணியைச் செய்து வருகின்றார்கள்-எனத் தெரிவித்தார்.

இதன்போது லங்கா சிமெந்து நிறுவனத்தின் பிரதம பொறுப்பதிகாரி பொ.விமலநாதன், லங்கா சிமெந்து கூட்டுத்தாபன பொறியியலாளர் பி.விமலதாஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை தேசமானி பரணகம இன்று காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானிக்கவுள்ளார்.

(ஒ-14)

## அளவெட்டியில் நாளை கரபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 25

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் (நிர்வாகம்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உடற் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-6)

## மீளாய்வுப் பணிகள்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில், பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் அட்டைகளை மீளாய்வு செய்யும் பணிகள் இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின்போது சமுகம் அளிக்காதவர்கள் 30ஆம் திகதிக்கு முன்னர் சமுகமளித்து தமது அட்டையினை மீளாய்வு செய்துகொள்ள முடியும் என்றும், இக்காலப் பகுதியில் மீளாய்வு செய்யப்படாதோரின் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-207)

## யாழ்.நகரில் கலாசார மண்டபம் அமைக்கும் பணிகளை ஆராய இந்திய தூதரக அதிகாரிகள் வருகை
### முற்றவெளியை அண்டிய பகுதியைப் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் அமைப்பது தொடர்பாக பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இந்தியத் தூதரத்தில் இருந்து உயர்மட்டக் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தது.

இந்தக்குழுவினர் முற்பகல் 10.30 மணியளவில் யாழ்.செயலகத்தில் அரச அதிபருடனும், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவுடனும் கலந்துரையாடினார்கள்.

இவர்களுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலத்தின் அதிகாரிகளும் வருகை தந்திருந்தினர்.

கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ள யாழ்.முற்ற வெளியை அண்டிய பகுதியையும் இக்குழுவினர் பார்வையிட்டனர்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பலமில்லியன் ரூபா செலவில் கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-9)

## குருநகர் புதிய கடற்கரை வீதிக்கு பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி

வண்ணை, ஜூன் 25

காடுமண்டிக் கிடக்கும் குருநகர் புதிய கடற்கரை வீதி குடியிருப்புகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அதனை அடுத்து அவ்விடத்துக்குச் சென்ற மக்கள் தமது முன்னாள் குடியிருப்புகள் இருக்கும் கோலத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் வேம்பு, இப்பிலிப்பில், அரசு, எருக்கலை, கள்ளி மரங்கள் அதிகளவில் வளர்ந்து காடாகக் காட்சி அளித்தன.

குடியிருப்புகளின் அடையாளங்கள் தெரியாதவாறு வீட்டுச் சுவர்கள் தரைமட்டமாக இருக்கின்றன. இதனிடையே கிராம சேவையாளர் ஊடாகக் காணிப் பதிவுகள் இருப்போருக்கு தலா 8 பைக்கற் சிமெந்து வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (50-160)

## "லைலா" புயலினால் சேதமடைந்த 14 வீடுகளைப் புனரமைக்க நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 25

குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட ''லைலா'' புயல் காரணமாக முழுமையாகப் பாதிப்புக்குள்ளான 14 வீடுகளைப் புனரமைப்பதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட ''லைலா'' அனர்த்தம் காரணமாகப் பாதிப்புக்குள்ளானவர்களின் விவரங்கள் யாவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் ''லைலா''வினால் முழுமையாகப் பாதிப்புக்குள்ளான வீடுகளைப் புனரமைப்பதற்கு குடும்பம் ஒன்றுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் மற்றும் கரவெட்டி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர ''லைலா'' புயலினால் பாதிப்புக்குள்ளான ஏனையவர்களுக்கான கொடுப்பனவுகள் வெகுவிரைவில் வழங்கப்படும் என்றார்.

குடாநாட்டில் ''லைலா'' புயலினால் 10 லட்சத்து 759 ஆயிரத்து 550 ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-9)

## மெதடிஸ்த திருச்சபையின் 195ஆவது நிறைவு நிகழ்வு

வடமராட்சி, ஜூன் 25

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 195ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வு பருத்தித்துறை-கட்டைவேலி சேகரப் பிரிவில் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை முழு நாள் நிகழ்வாக நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை-கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு. என்.அருள்நாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வடக்கு கிழக்கு திருமாவட்டத் தலைவர் அருட்திரு எஸ்.பி.தயாசீலனும் கலந்துகொள்வார். (50-236)

## யாழ். சிறைச்சாலைக்கு கட்டடம் அமைக்கப்படும்

கொழும்பு, ஜூன் 25

45 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை ஒன்று அமைக்கப்பட உள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் வீ.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

சிறைச்சாலை அமைப்புப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது 300 கைதிகள் இரண்டு வீடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய தடுப்பு முகாம்களில் போதியளவு வசதிகள் கிடையா எனவும், உத்தேசிக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் சகல வசதிகளும் உள்ளடக்கப்பட உள்ளன எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## சாவகச்சேரியில் எல்.ஓ.எல்.சி. கிளை

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகக் கட்டடத்தில் லங்கா ஓரிச் லீசிங் கம்பனியின் (எல்.ஓ.எல்.சி) கிளை அலுவலகம் கடந்த 22 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கம்பனியின் சந்தைப்படுத்தல் பிரிவு நிறைவேற்றுப் பிரதம அதிகாரி சொலமன் ஜேசுதாஸ் பிரதம விருந்தினராகவும் யாழ். அஞ்சல் அத்தியட்சகர் ஜெபரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கம்பனியினால் யாழ். மாவட்டத்தில் திறக்கப்பட்ட 3 ஆவது கிளை இதுவெனத் தெரிவிக்கப்பட்டது. (50-202)

## இரண்டு தடவைகள் விபத்தில் சிக்கினார் வயோதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பேருந்து மோதிக் காயமடைந்து குணமாகிய வயோதிபரை மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த 23ஆம் திகதி காலை மீசாலைச் சந்தியில் இடம்பெற்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர் பேருந்தினால் மோதப்பட்டுக் காயமடைந்ததாகவும், குணமானபின்னர் நேற்று முன்தினம் மீசாலைச் சந்தியில் வீதியின் குறுக்கே சென்றபோது மோட்டார் சைக்கிள் மோதி மீண்டும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தலையில் காயமடைந்த அல்லாரையைச் சேர்ந்த பொன்னம்பலம் கந்தசாமி (வயது-71) என்னும் வயோதிபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (50-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் நேற்று ஒன்றுகூடின

கொழும்பு, ஜூன் 25

தமிழ் கட்சிகள் இணைந்து பொது உடன்பாடு குறித்து நேற்று மாலை கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தின.

தமிழ் மக்களின் அரசியலுரிமை பரச்சினைக்கான அணுகுமுறை குறித்து பொது உடன்பாடு காணவும் மற்றும் அன்றாட அவலங்களுக்கு உடனடித் தீர்வு காண்பதில் ஒருமித்து செயற்படும் நோக்கிலும் தமிழ் கட்சிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாசஸ்தலத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். (நாபா) அணியின் தலைவர் சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சிறிகாந்தா, சிறி ரெலோ அமைப்பின் தலைவர் உதயன், ஈரோஸ் கட்சியின் செயலாளர் பிரபா, மனித உரிமைளுக்கான ஆர்வலர் ஷெரீன் சேவியர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (1)

## இடம்பெயர்ந்த உரிமையாளர்களுக்கு வசதியாக காணிச் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஜூன் 25

முப்பது வருடகால யுத்தத்தால் பதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி காணி உரிமை சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

யுத்தம் காரணமாகத் தமது சொந்தக் காணிகளில் இருந்து பெருந்தொகையான மக்கள் வெளியேறினர். இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களின் காணிகளில் வெளியார் குடியேறி உள்ளனர். இப்போது உள்ள சட்டங்களின்படி பத்து வருடங்களுக்கு மேல் ஒரு காணியில் குடியிருந்தால் அவர்களை வெளியேற்றுவதில் சட்டச் சிக்கல்கள் ஏற்படும். இந்தக் கருத்தில் கொண்டு நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்ன காணி உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என அமைச்சரவைக்கு சிபார்சு செய்திருந்தார். இந்த சிபார்சை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

- இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## ஆசியக் கிண்ணம் இந்தியா வசமானது

கொழும்பு, ஜூன் 25

தம்புளை ரன்கிரி மைதானத்தில் நேற்று இலங்கை- இந்திய அணிகளுக்கிடையிலான ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி 81 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

பகல்- இரவு ஆட்டமாக இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். அதற்கமைய துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களை பெற்றது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் தினேஸ் காத்திக் , ரோஹித் சர்மா ஆகியோர் முறையே 66, 41 ஓட்டங்களை சேர்த்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய இலங்கை அணி 44.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றது.

இலங்கை அணி துடுப்பாட்டத்தில் சமார கப்புகெதர ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், திலின கண்டம்பி 31 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணி வீரர் தினேஸ் கார்த்திக்கும், தொடராட்ட நாயகனாக பாகிஸ்தான் அணித்தலைவர் ஷஹீட் அப்ரிடியும் தெரிவுசெய்யப்பட்டனர். (11)

## வீட்டின் "பிளாற்" சரிந்து இளம் தொழிலாளி பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 25

வீட்டின் "பிளாற்" உடைந்து வீழ்ந்ததில் இளம் தொழிலாளி ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்று மாலை யாழ்.நகரில் சிவன் பண்ணை வீதியில் இடம்பெற்றது.

சிவன் பண்ணை வீதியில் ஒரு வீட்டில் மேசன் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

உயிரிழந்தவர் இருதயதாஸ் அன்ரன் குமார் (வயது-33). இவர் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்தவர். (ஒ-6-16)

## மதுபானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவாலும், உள்நாட்டு மதுபானம் லீற்றர் ஒன்றின் விலை 50 ரூபாவாலும், இறக்குமதி செய்யப்படும் மதுபானம் ஒரு லீற்றர் விலை 50 முதல் 80 ரூபா வாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருள்களான சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் பால்மா வகைகள் போன்றவற்றின் விலைகள் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## ஐ.நா. நிபுணர்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விவகாரத்தில் தலையிடுவதே நோக்கம்

தற்போது அமைக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு விசாரணைக் குழுவல்ல. ஆலோசனைக் குழு என்று ஐ.நா.தெரிவித்துள்ளது. இருப்பினும், இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்காகவே இக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, எமது கடுமையான கண்டனத்தை நாம் தெரிவிக்கின்றோம்.

யுத்தத்தின் பின்னரான நிலைமையை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதற்காக நாம் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளோம். மக்களிடமிருந்து இந்த ஆணைக்குழு சாட்சியங்களைக் கோரியுள்ளது. இந்த ஆணைக்குழு அதன் கடமையைச் சரிவர நிறைவேற்றும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த நிலையில், ஐ.நா. நிபுணர்கள் குழுவின் நியமனம் எமது ஆணைக் குழுவின் செயற்பாட்டைக் குழப்பும்.நிபுணர்கள் குழு ஒருபோதும் எமக்குப் பயனுடையதாக அமையாது. அது அநாவசியத் தலையீட்டையே ஏற்படுத்தும்.

நிபுணர்கள் குழுவில் நியமிக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் எமக்குப் பிரச்சினை இல்லை. அந்தக்குழு நியமிக்கப்பட்டிருக்கும் நோக்கத்தில்தான் பிரச்சினை உண்டு. அந்தக் குழுவின் ஊடாக நாம் எதுவித உதவியையும் நாடவில்லை.

இந்தக் குழுவின் செயற்பாட்டை நாம் அனுமதிக்கப் போவதில்லை. எமது நாட்டுப் பிரச்சினையைத் தீர்த் துக்கொள்ள எம்மிடம் சரியான தீர்வு உண்டு. - என்றார். (அ-சி)

## புறக்கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, சம்பவ இடத்துக்கு அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்களின் ஆய்வின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறியவருகிறது.

சம்பவம் தொடர்பாக நேற்று மாலைவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.(படம்:21ஆம் பக்கத்தில்)

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வானில் இருந்து படகுகள் மூலம் பக்தர்கள் அணி, அணியாக வந்து நயினையம் பதியில் குவியத் தொடங்கினர்.

இதேவேளை,

நேற்று இரவு 8 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று 10 மணிக்கு அம்பாள் திருவீதியுலாவந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அங்கு திரண்டிருந்த அடியார்கள் அரோகரா கோஷம் எழுப்பி பக்திப் பரவசத்துடன் நயினை அம்மனைத் தரிசித்தனர். வழமைபோல் அமுதசுரபி அன்னதான சபையினர் அடியார்களுக்கு சளைக்காமல் உணவுகளை வழங்கி உபசரித்னதர்.

நேற்று நள்ளிரவுவரையிலும் பக்தர்கள் ஆலயத்தை நோக்கி வந்த வண்ணம் இருந்தனர் என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஆலயத்தில் கூடிய பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. நள்ளிரவு வரை சேவையில் ஈடுபட்ட படகுகளுக்கு கடற்படை யினர் பாதுகாப்பு வழங்கினர். ஆல யச் சூழலில் பொலிஸார் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆலயத்தின் உள்பிரகாரத்தில் நடைபெறும் நிகழ்வுகளை பக்தர்கள் கண்டுகளிக்க தொலைக்காட்சிகள் பல இடங்களிலும் பொருத்தப்பட்டிருந்தன. (ஒ-1-111)

## அமைச்சரவையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டையும் கிளிநொச்சியில் நடத்தும்படி செய்தியாளர்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதையடுத்து, செய்தியாளர்களைக் கிளிநொச்சிக்கு அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்யும்படி அமைச்சர் தகவல் திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (சி)

## செய்தியாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இவ்வருடத்தின் இறுதி ஆறு மாத காலப் பகுதியில் செய்தியாளர்கள் வழங்கும் செய்திகள் ஆய்வு செய்யப்பட்டு விருதுக்குரிய செய்தியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (சி)

## பொசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அனுஷ்டிக்கப்படும் பொசன் தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

"தம்ம போதனைக்கேற்ப வாழுகின்ற ஒருவர் அதன் மூலமே பாதுகாக்கப்படுவார்" என்ற அரஹத் மஹிந்த தேரரின் போதனைகளை எமது வாழ்வில் ஏற்று நடப்பதன் மூலம் இந்தப் பொசன் காலப் பகுதியை அர்த்தமிக்கதாய் மாற்றி புதியதோர் இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கு எம்மை அர்ப்பணிப்போம்.

அரஹத் மஹிந்த தேரரினால் போதிக்கப்பட்ட தம்ம போதனை எமது சமூகத்தையும், எமது கலாசாரத்தையும் புதியதோர் பாதையை நோக்கி இட்டுச் சென்றது. தம்ம போதனை இன, மத வேறுபாடுகளை மறந்து ஒரே நாட்டின் குடிமக்களாக இன நல்லுறவுடன் வாழ்வதற்கான பாதையை எமக்குக் காட்டியது.

அன்பையும், கருணையையும் விரும்புகின்ற . உணர்வினால் உந்தப்பட்டு ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில் வன்முறைகள் இல்லாத ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு தேசமாக நாம் உறுதிகொண்டோம். அரஹத் மஹிந்த தேரரினால் முன்வைக்கப்பட்ட சமாதானமும், அமைதியும் நிறைந்த பாதையைப் பின்பற்றியதன் மூலம் நாம் உலக நாடுகளுக்கு மத்தியில் ஒரு பெருமைமிகு வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களானோம்.

அரஹத் மஹிந்த தேரரின் போதனைகளின் அடிப்படையில் ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாடு இன்று ஒன்றுபட்டுள்ளது. ஒன்றுபட்டு உழைப்பதன் மூலம் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும். அன்பு மற்றும் கருணையின் அடிப்படையில் நாம் நல்லிணக்கத்தைக் கொண்டுவரவேண்டும். பிரிவினைகள் எம்மைத் தோல்வியின்பால் இட்டுச் செல்லும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எமது அரச கொள்கை எப்போதும் தம்ம போதனைகளின் அடிப்படையில் வழிகாட்டப்பட்டுள்ளது - என்றுள்ளது.


**விற்பனையாகிறது**

- பொது நிதி முகாமைத்துவம் J.கில்வேட் குணம்
- இரண்டாம் மொழி சிங்களம் - 64

பாஸ் பேப்பர் - O/L - A.H.M. SAFWAN

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம் 0212229881 — சாவகச்சேரி 0212270003

**G.A.Q. 1st IN.COM**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

★ A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடச்சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.

★ புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 26.06.2010, காலை 8 மணி

விபரங்களுக்கு :-
நிர்வாகி - S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(99809)

**கார் விற்பனைக்கு**

11 Sri XXXX தொடர் இலக்கமுடைய மிகவும் நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் (Shoe model) கார் ஒறிஜினல் வளங்களுடன் A/C உட்பட அனைத்தும்இயங்கும் நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0774528818 / 0215673818

148, கோயில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

**கிறிஸ்தவம் & கிறிஸ்தவ நாகரிகம்** — S.K. ரூட் B.A (Hons)

| | | |
|---|---|---|
| A/L-2010 | செவ்.,புதன், வியா. | 7.30-8.30am |
| A/L-2011 | சனி, ஞாயி. | 11-12 am |
| A/L-2012 | சனி, ஞாயி. | 12-1 noon |

A/L-2012 ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

DMI Jaffna.

**YOGI'S BEAUTY**

[The Academy of Beauty Culture, Hair Dressing & Home Science] புதிய பயிற்சி வகுப்புக்கள் நாளை (26.06.2010) ஆரம்பமாக உள்ளன.

- அழகுக்கலை [Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course]
- ADVANCED COSMETOLOGY [Diploma Course]
- நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் [Advanced Bridal Make Up-Hair Styles]
- 10 வகையான சாறி கட்டும் முறைகள்
- கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் [Birthday Cakes, Fondant Structure & Sugar Flowers]

பயிற்சி வகுப்புகளில் சேரவிரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Mrs Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Advanced Cosmetology [INDIA]
Diploma in Advanced Bridal Make-up & Character Make- up [INDIA]
Diploma in Home Economics [India & Srilanka]

எமது நிறுவனத்தில் அளிக்கப்படும் ADVANCED FACIAL சிகிச்சைகள்

உங்கள் முகத்தில் அம்மைத் தழும்புகள், பள்ளங்கள், கரும்புள்ளிகள் இவைகளுக்கு எமது நவீன DERMABRASION TREATMENT மூலம் புதுமையான முறையில் சிகிச்சைகள்.

- Magic Facial [For Dark and Dry Skin]
- Skin whitning Facial
- Glycolic Treatment(Spa சிகிச்சைகள்)
- Cllogen Facial (For Dry & Aging Skin)
- Anti Polution Treatment(For oily Skin)
- Thalassic Therapy (For whitning & Anti Bactierial)
- Gold Facial (For Brides)
- Oxigen Facial
- Skin Prepairing Facial For Brides
- Mole Implant - (மச்சம் வைத்தல்)
- Eye Bro Filling
- முடி உதிர்தல், பொடுகு போன்றவற்றிற்கு நவீன Spa சிகிச்சைகள்
- Warts Removal
- French Menicare & Nail Art



இப்படிப் பல சிகிச்சைகளுடன் மணப்பெண் அலங்காரங்களும் எமது சிறப்பம்சமாகும்

Phone No. 021 222 2796 - 021 321 0077 - 0777 164925 - 071 878 8814

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் 2 நாட்களே உள்ளன விரையுங்கள் !

MULTIMEDIA

அனிமேஷன் பயிற்சிக்கான புலமைப்பரிசில் பரீட்சை

June 26-27 (சனி-ஞாயிறு)

இலவச அனுமதிகளை

ASIAN CSC COMPUTER EDUCATION

யாழ்.நகர், சாவகச்சேரி மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொல்லாம்.

# காசநோய் விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்25

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கான காசநோய் விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த 23 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் நடத்தப்பட்டது.

மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியக் கலாநிதி செ.யமுனானந்தாவினால் செயலமர்வு நடத்தப்பட்டது.

(50-207)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனத்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை வாகனச் சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

(50-207)

# பரிசில் தினம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய அமுதவிழா ஆண்டுக்கான பரிசில் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழி விரிவுரையாளரும் ஸ்தாபகரின் பேரனுமான வன்னியசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் பீ.முத்துலிங்கம், தென்மராட்சிக் கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்துகொள்வர். பரிசில்களை திருமதி கௌரி பரந்தாமனால் வழங்கப்படும்.

(எ-207)

## வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலையின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள திருமதி குமுதினி அசோக்குமார் அவர்களை இறை அருளுடன் மென்மேலும் உயர்வுபெற்று சிறந்த கல்விப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி பிரசாத், சாயி, ஷங்கவி

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 516
சீட்டிழுப்பு திகதி: 23.06.2010

வெற்றி எழுத்து: M  வெற்றி இலக்கங்கள்: 25 31 43 57

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 15,560,612.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 213 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 397 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10513 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6123 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 151486 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 24107 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 6,081,080.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
சேவைக்கு: 4507000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 16,137,345.60

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 32
திகதி - 23.06.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Q  அதிர்ஷ்ட இலக்கம்: 03  வெற்றி இலக்கம்: 4 8 3 2 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q 03 4 8 3 2 5 | ரூ. 11,941,703.00 | - |
| 1 பரிசு | 03 4 8 3 2 5 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 4 8 3 2 5 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 8 3 2 5 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | 3 2 5 | ரூ. 1,000.00 | 253 |
| 5 பரிசு | 2 5 | ரூ. 50.00 | 2495 |
| 6 பரிசு | 5 | ரூ. 20.00 | 24232 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 8 3 2 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 4 8 3 | ரூ. 100.00 | 250 |
| 9 பரிசு | 4 8 | ரூ. 50.00 | 2523 |
| 10 பரிசு | Q | ரூ. 20.00 | 9898 |
| 11 பரிசு | Q 03 | ரூ. 100.00 | 1172 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,814,700.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.1 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 11,941,703.00

# அகம் நிறைந்த அன்னையின் பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி நாகமுத்து சிதம்பரப்பிள்ளை



அன்னை மடியில் 1914.04.14
அரன் அடியில் 2000.06.16

திதி: பூர்வபக்க சதுர்த்தசி:
2010.06.25

அன்னையே! எங்கள் அன்பின் இருப்பிடமே!
ஆண்டுகள் பல சென்றாலும் அனல்மேல்
மெழுகானோம்.
பொல்லா உலகமதில் பொறுமையுடன்
வாழ்ந்தீரே!
போற்றுகின்றோம் உம்பாதம் பூவுலகம்
உள்ளவரை!
இயற்கை எழில்கொஞ்சும் இதமான
ஊரினிலே
இறைபக்தி மேலோங்க வாழவைத்தீர்
மக்களையே
கல்வி செல்வம் மிக்கவராய் காலமெல்லாம்
திகழவென
களிப்புடனே என்றென்றும் கலங்காதுழைத்தீரே.
உள்ளமெனும் கோயிலிலே உறைந்திருக்கும்
அம்மாவே!
உலகமெனும் மாயையிலே உங்களை நாம்
மறப்போமா
இகமதிலே இப்பிறப்பில் எங்கே நாம்
காண்போமா?
இறைபதம் நாடி இயைந்துதான்
சென்றீரோ.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

# 6ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



விண்ணில் 30.12.2009

மண்ணில் 06.03.1987

## அமரர் தில்லையம்பலம் விஜேந்திரன் (வினோதன்)

திதி: சதுர்த்தசி (25.06.2010)

'வற்றாத அன்புதனை
வசந்தமாய்த் தந்தவனே
துணையென்று எமக்காக
தூணாக நின்றவனே
வித்தகனாய் கதைபேசும்
வல்லவனே வினோதனே
இத்தனையும் பொய்யாச்சே
இனியென்ன நாம் செய்வோம்
ஆறுதிங்கள் மறைந்தென்ன
மாறவில்லை எம் துயரம்
மீண்டும் நீ மலர்வாயா
மண்டியிட்டு வேண்டுகிறோம்''
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



...த்திடல், குடத்தனை
...அம்பன் கிழக்கு, குடத்தனை.

குடும்பத்தினர்.

(99751)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 10

## வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

* இப்பந்தியை வாசித்து 01-08 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அதிகாலையில் நாம் பறவைகளின் ஒலிகளைக் கேட்கிறோம். அவ் ஒலிகள் எல்லோரையும் உற்சாகப்படுத்துகின்றன. சூரியஒளி இப்பூமியைப் பிரகாசமடையச் செய்கின்றது. மரம், செடிகளில் உள்ள பனித்துளிகள் மீது சூரியஒளி படுகின்றது. அவை வெள்ளிமணிகள் போல் ஒளிர்கின்றன. அழகிய வண்ணத்துப்பூச்சிகளும், சிட்டுக்குருவிகளும் ரீங்காரம் செய்யும் வண்டுகளும் தேனை விரும்பி அருந்துகின்றன. இவை எல்லாம் இயற்கையின் கொடைகள், இவற்றைப் படைத்தவர் யார்? அவை யாவும் இறைவன் படைப்புகளாகும்.

01. ''அருந்துகின்றன'' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லை எழுதுக்.
.................................................................

02. ''பிரகாசம்'' என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.
.................................................................

03. பந்தியில் வெள்ளிமணிகள் எதற்கு உவமானமாக சொல்லப்படுகின்றது?
.................................................................

04. வண்டுகள் ரீங்காரம் செய்வதுபோல் ஆந்தை
.................................................................

05. ''பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன'' என்பதை ஒருமையில் எழுதுக.
.................................................................

06. பந்தியிலுள்ள உயர்திணை, நிகழ்கால, பன்மை வினைமுற்றுச்சொல் ஒன்று தருக.
.................................................................

07. இறைவனின் படைப்புக்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
.................................................................

08. அம்மலர்களில் அழகிய வண்ணத்துப்பூச்சிகளும், சிட்டுக்குருவிகளும், ரீங்காரம் செய்யும் வண்டுகளும் தேனை விரும்பி அருந்துகின்றன.
   1) இவ்வாக்கியத்திலுள்ள பெயரடைச்சொல் ஒன்று தருக.
   .................................................................
   2) இவ்வாக்கியத்திலுள்ள வினையடைச்சொல் ஒன்று தருக.
   .................................................................

* பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

09. கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துதல்.
.................................................................

10. ஒன்றின் இயல்பை அறியும்முன் அதனை செய்யத் தொடங்காதே.
.................................................................

11. அடைப்பில் உள்ள எழுத்துக்களில் பொருத்தமான எழுத்தை தெரிவுசெய்து சொற்களைப் பூரணப்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| ரி | றி | லி | ழி | ளி |

1) வெ.......ச்சம்   2) அ.......விப்பு
3) தொ.......ல்   4) மண்ண.......ப்பு

12. பொருத்தமான நிறுத்தற் குறியீட்டை இடுக.
நான் என்ன குறைந்தவனா

13. பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
வித்தையை கற்பித்த குருவிற்கு மாணவர்களால் வழங்கப்படும் காணிக்கை.
(.............................)

14. சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருத்தமான வாக்கியமாக எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜப்பானில் | மிக | உள்ளது | உலகிலே | சுரங்கப்பாதை | நீளமான |

.................................................................

15. பின்வரும் பேச்சுவழக்கு நடைமுறையை எழுத்து வழக்கு நடைமுறையாக மாற்றி எழுதுக.
நான் வீட்டை போட்டு வாறன்.
.................................................................


16. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக.
Fix the nail with ............................ (axe, hammer, knife)

17. வானவில் என்பதன் ஆங்கிலச்சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
(.............................)

18. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
Please close the door
.................................................................

19. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
நீங்கள் எங்கே போகின்றீர்கள்?
.................................................................

20. பொருத்தமான சிங்களச்சொல்லைத் தமிழில் எழுதுக.




1) .............................................
2) .............................................
3) .............................................

21. இதன் கருத்தை தமிழில் எழுதுக.
சுபதினக் வேவா .............................................

* 22-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

22. எல்லாக்காலங்களிலும் பூக்கும் பூ,
1) வேம்பு   2) கார்த்திகைப்பூ.
3) குறிஞ்சிப்பூ.   4) லில்லிப்பூ

23. மிகச்சிறிய இலைகளை உடைய தாவரம்,
1) விடத்தல்.   2) புளி.
3) கீழ்காய் நெல்லி.   4) பொன்னவரை.

24. மனிதனின் சிறு நீரகத்தின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள வித்து,
1) பாகல்.   2) உழுந்து.
3) போஞ்சி.   4) புலிநகம்.

25. இலைகளிற்கு தீங்கு விளைவிக்கும் பிராணி,
1) குளவி.   2) ஈசல்.
3) கறையான்.   4) நத்தை.


26. மேல்வாய் பற்களற்ற பிராணி,
1) மாடு.   2) ஆடு.
3) குதிரை.   4) குரங்கு.

27. நத்தைகளை உண்ணும் பிராணி,
1) பாம்பு.   2) எலி.
3) செண்பகம்.   4) கரடி.

28. இரவில் நடமாடும் பிராணி,
1) மான்.   2) கரடி.
3) ஆட்காட்டி.   4) பருந்து.

29. சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளாத பிராணி,
1) குளவி.   2) பச்சோந்தி.
3) ஓணான்.   4) வெட்டுக்கிளி.

30. குரக்கனை மாவாக அரைக்க உதவும் உபகரணம்.



1)   2)   3)   4)

31. பொதி செய்யப்பட்ட பொருட்களின் அட்டையில் கீழ்வரும் குறியீடு உள்ளது. இதன் கருத்து,



1) எப்போதும் மேல் நாக்க வைக்க வேண்டும்.
2) உடையக்கூடிய பொருட்கள்.
3) வெப்பமான இடத்தை தவிர்க்கவும்.
4) ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்.

32. நிறக்கடதாசியை சிறுசிறு துண்டுகளாக கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யப்படும் ஆக்கம்,
1) அல்பனா.   2) கோலவுரு.
3) கொலாஜ்.   4) சிற்பம்.


33. படத்திலுள்ள உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர்,



1) பெருங்கரடி.   2) சிறுகரடி.
3) விருட்சியம்.   4) சிம்மம்.


34. கீழ்வருவனவற்றில் காந்தம் பயன்படும் உபகரணம்,
1) ஊசிதுளைக்கமரா.   2) பம்பரவண்டி.
3) திசைகாட்டி.   4) மழைமானி.

35. வட்டவடிவமான மேசைவிரிப்பின் ஓரத்தை அழகுபடுத்தும் தையல் உரு,



1)   2)   3)   4)

36. தேசியக்கொடி ஏற்றும்போது இசைக்கப்படும் இசைக்கருவி.




1)   2)   3)   4)

37. இலங்கையின் செய்மதி தகவல் தொடர்பு நிலையம் அமைந்துள்ள இடம்,
1) வட்டவளை.   2) பாதுக்கை.
3) கொழும்பு.   4) கண்டி.

38. சார்க் அமைப்பில் உள்ளடங்காத நாடு,
1) இலங்கை.   2) இந்தியா.
3) பூட்டான்.   4) மியான்மார்.

39. இக்குறியீடு குறிக்கும் அரச நிறுவனம்,




1) தேசிய நீர் வடிகால் அபிவிருத்தி அதிகாரசபை.
2) வீதி அபிவிருத்தி அதிகார சபை.
3) இலங்கை மின்சார சபை.
4) இலங்கைப் போக்குவரத்துசபை.

40. பாம்பு தீண்டிய ஒருவருக்கு உடனடியாக செய்யவேண்டிய முதலுதவி,
1) சவுக்காரம் இட்டுக் கழுவுதல்.
2) கடிவாயை துணியினால் இறுக்கிக் கட்டுதல்.
3) காயத்தின் மீது எண்ணெய் பூசுதல்.
4) நோயாளியை நித்திரை கொள்ளச்செய்தல்.

(III பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இலங்கையின் வரலாற்று கலைத்துவ படைப்புகள் இரண்டு கீழே காணப்படு கின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.

41. 

..................................

42. 

..................................

* இலங்கையின் இரு பிரசித்தி பெற்ற விளையாட்டு கீழே காணப்படுகின்றது. அவற் றின் பெயர்களை எழுதுக.


43. 

..................................

44. 

..................................

45. இரு உலர் மின்கலங்களும் ஒரு கடிகாரமும் காணப்படு கின்றன. கடிகாரத்தை இயங்கச்செய்வதற்கு உலர் மின் கலங்கள் பொருத்தப்படும் விதத்தைக் கடிகாரத்தில் வரைந்து காட்டுக.



46. வாரத்தில் முதல் நான்கு நாட்களில் ஒரு வைத்தியசாலையில் பிறந்த குழந்தை களின் எண்ணிக்கைய பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நாட்கள் | குழந்தைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| திங்கள் | 80 | 40 |
| செவ்வாய் | 70 | 62 |
| புதன் | 85 | 78 |
| வியாழன் | 105 | 45 |

1) அதிகமான குழந்தைகள் பிறந்த தினம் யாது?

(.......................................)

2) நான்கு நாட்களிலும் பிறந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை யாது?

(.......................................)


3) வியாழக்கிழமை பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(.......................................)

4) நான்கு நாட்களிலும் பிறந்த ஆண் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும், பெண் குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(.......................................)

* **30m நீளமான பாலத்தின் வழியே பேருந்து பயணம் செய்வது உருவில் காட்டப்பட்டுள்ளது.**




47. பேருந்தின் நீளம் யாது? ...................... m

48. அது பாலத்தினைக்கடக்க இன்னும் செல்லவேண்டிய தூரம் யாது?

...................... m

49. 10 நிமிடங்கள் முந்திக்காட்டும் எனது கடிகாரம் 7.55 காட்டியபோது நான் அலு வலகத்திற்கு பிரயாணம் செய்யும் புகையிரதம், புகையிரத நிலையத்தை சென்ற டைந்தது. அன்றைய தினம் புகையிரதம் 22 நிமிடங்கள் பிந்திச்சென்றது. புகை யிரதம் சாதாரணமாக புகையிரத நிலையத்தை வந்தடைய வேண்டிய சரியான நேரம் யாது?

(..................................)

50. கடிகாரம் A இன் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் B இன் முகத்தில் காட்டு வதற்கு அதில் மணித்தியால முள்ளையும் மிட முள்ளையும் வரைக.





51. 1500ml நீரை வெளியேற்ற 100ml கோப்பையினால் எத்தனை தடவைகள் நீர் எடுத்து வெளியேற்ற வேண்டும்?

(..................................)

52. கூட்டுக. 1/4 + 2/8 = (................)

53. உருவில் நிழற்றப்படாத பகுதியை தசமதானத்தில் தருக.



(.........................)


54. தரப்பட்ட உருவில் சிறிய சதுரங்களின் ஒருபக்க நீளம் 1cm ஆகும்.

1) உருவின் சுற்றளவு

.................................. cm

2) பெரிய சதுரத்தின் பரப்பளவு

.................................. $cm^2$



* **பின்வரும் பந்தியை வாசிக்குக.**

சரவணன் ''பப்பி'' என்ற நாயை வளர்த்துவந்தான். அது ஒரு நாள் மூன்று குட்டிகளை ஈன்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். பார்த்துக்கொண்டே இருக்கலாம். அவ்வளவு அழகு! .................

நீர் சரவணன் எனின், இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறல் வேண்டும். இவ்வாக்கியங் களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்)

55. ..........................................................................................

56. ..........................................................................................

57. ..........................................................................................

58. ..........................................................................................


59. ..........................................................................................

60. ..........................................................................................

(நிறைவுற்றது)

## விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.10, வினாத்தாள் I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 - 3 | 02 - 2 | 03 - 4 | 04 - 3 | 05 - 3 | 06 - 1 | 07 - 1 | 08 - 1 | 09 - 2 | 10 - 1 |
| 11 - 3 | 12 - 1 | 13 - 1 | 14 - 1 | 15 - 1 | 16 - 1 | 17 - 1 | 18 - 1 | 19 - 1 | 20 - 3 |
| 21 - 1 | 22 - 3 | 23 - 1 | 24 - 1 | | | | | | |
| 25 - 3 | 26 - 2 | 27 - 1 | 28 - 1 | | | | | | |

29 - 


30 - 24 கம்பங்கள் 31 - $9cm^2$

32 - 7cm 33 - 1989ஆம் ஆண்டு

34 - 2 மணித்தியாலம் 30 நிமிடம்

35 - 5 மணித்தியாலம்

36 - 4400kg 400kg

ஆசிரியர்கள்:
T.திலீப்குமார் & T.மன்மதகாந்தன்,
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13

கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035

# கல்விச் சாலைக்காட்சிகள்........



கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்தியகலாநிதி [illegible] நா.வன்னியசிங்கத்தை சனசமூக நிலையச் செயலாளர் மலர்மாலை அணிவித்து வரவேற் பதையும் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.





[illegible], பெரியநீலாவணை விஷ்ணு மகாவித்தியாலய மாணவர்கள் அண்மையில் உதயனுக்கு கல்விச் சுற்றுலா மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவில் சிக்கியது இலங்கை அகதிகளின் படகு

கொழும்பு, ஜூன், 25

இலங்கையர்களும் உள்ளடங்கியிருக்கலாம் என நம்பப்படும், படகு ஒன்றை ஆஸ்திரேலிய கடற்படையினர் நேற்றுமுன்தினம் காலை கைப்பற்றியுள்ளனர்.

இதில் 51 அகதிகள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அகதிகள் பயணித்த படகு கிறிஸ்மஸ் தீவுக்கு அப்பால், உள்ள கடற்பரப்பில் இடைமறிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் படகில் உள்ளோர், கிறிஸ்மஸ் தீவுக்கு வழமையான சோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என ஆஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது. (ஒ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**இராமலிங்கம் மகேசுவரி**
(மீசாலை வடக்கு, கொடிகாமம்)

தோற்றம் 01★02★1939

மறைவு 26★05★2010

கடந்த 26.05.2010 சிவபதடைந்த எமது தயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.06.2010 நடைபெற்று வீட்டுக்கிருத்தியம் இன்று [25.06.2010] வெள்ளிக்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[சி/566612]　　தகவல்:Dr.R.அருட்செல்வம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 07 |
| 11 | 07 |
| 1942 | 2009 |

**அமரர் விஸ்வஸ்ரீ சின்னத்துரை மயில்வாகனம்**
25.06.2010

கண்மூடித் திறக்கும் முன்னே
ஆண்டொன்று சென்றதுவோ
தேடிப் பார்க்கிறேன் உன் உருவத்தை
உன் இடத்தில் காணவில்லை
எங்கு சென்றாயோ ஐயா
வருடம் ஒன்று ஆனாலும்
உன் இறப்பை எம் மனம்
நம்ப மறுக்கின்றதே ஐயா
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் மறையாதையா
உன் பூமுகம் மறைந்தாலும்
உன் அன்புமுகம் மறையவில்லை
என்றும் உன் ஆத்மா சாந்தியடைய
நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் கலங்கி நிற்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாரதா வீதி,
சங்கத்தானை சாவகச்சேரி.　　[99789]

## ஐந்தாம் வருட நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 | 25 |
| 12 | 06 |
| 1932 | 2005 |

**அமரர் அந்தோனி எவுசேனி**

அன்பால் பூத்த விழிகளும்
ஆரத்தழுவிய கரங்களும்
ஈரம் நிறைந்த இதயமும் ஓய்ந்து
ஆண்டுகள் ஐந்து கரைந்தன
ஆறுதல் தரவல்ல ஆண்டவனை
பணிந்து நித்திய அமைதியில்
நீங்கள் இளைப்பாற வேண்டுகிறோம்.

தவசிகுளம்,
கொடிகாமம்.　　[99761]　　குடும்பத்தினர்.

## சல்பீனியா அழிப்பு

நல்லூர்,ஜூன்25

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் தொடர்சியாக யாழ். பெரியகடை பகுதியில் உள்ள வண்ணான்குளத்தில் சல்பீனியா அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். (1-111)

## அருணகிரிநாத சுவாமி விழா

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ்.புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அருணகிரிநாத சுவாமி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வல்லை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (204)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

மக்கள் வங்கி, லங்கா வைத்தியசாலை, ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இலவச மருத்துவமுகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலும் பிற்பகல் 1.30 மணிக்கு ஊர்காவற்றுறை சென்.மேரிஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் சிறுவர்களுக்கும்; கர்பிணித் தாய்மார்களுக்கும் விசேட மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த மருத்துவ முகாமில் தென்னிலங்கை மருத்துவர்களும், வடபகுதி மருத்துவர்களும் கலந்துகொள்வர். (204)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ்.மேலை வண்ணை நகர் ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்24

சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியவில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்24

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் நடைபெறும். (204-253)

## மணமகன் தேவை

23¾ பாவம், 2இல் சூரியனும், செவ்வாயும் உள்ள யாழ்.இந்து கௌரவ 1981 இல் பிறந்த, MBA qualified தனியார் நிறுவனத்தில் உயர் பதவியிலிருக்கும் அழகிய நற்குணமான பெண்ணுக்கு தகுந்த, படித்த, நற்பண்புள்ள மணமகன் தேவை.

விளம்பர இல: 4037
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கூலித் தொழிலாளர்கள் தேவை

சோடா போத்தல்களை வாகனத்தில் ஏற்றி இறக்கும் பணிக்கு பொருத்தமான வேலையாள்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். கூலி நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஒஸ்மானியா கல்லூரி வீதி ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212225595

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல புடைவைக் கடைக்கு வேலையாள்கள் தேவை. யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- தொ.பே: 0773878627


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்　அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அருட் செல்வவினாயகம் திலகவதி
(நிரந்தர தர்மகர்த்தா-துன்னாலை தெற்கு, வல்லிக் கந்தோட்டப்பிள்ளையார் கோயில்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 03 |
| 09 | 07 |
| 1921 | 2001 |

திதி.சதுர்த்தசி: 25.06.2010

எங்கள் அன்புத்தெய்வமே அம்மா!
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்களை
விட்டு நீங்காது
உங்கள் செயல்கள் என்றும்
எங்களை கண்ணீரில் ஆழ்த்துகிறது
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்களை ஆசீர்வதியம்மா.

குடும்பத்தினர்.

பா.பாஞ்சாலி (மகள்)
துன்னாலை வடக்கு, கரவெட்டி.　　(99776)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 26 |
| 04 | 05 |
| 1946 | 2010 |

**அமரர் சிவயோகம் மயில்வாகனம்**

கடந்த 26.05.2010 அன்று சிவபதமடைந்த எம் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று [25.06.2010] வெள்ளிக்கிழமை நடைபெறும். அத்தருணம் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரது பிரிவுச்செய்தி கேட்டு ஓடிவந்து உதவியோர்க்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

51,குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.　　குடும்பத்தினர்.　　(99821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org